இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32

சுடர் 32 | கதிர் 237 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 05 வெள்ளிக்கிழமை 21.07.2017

காணாமற்போனோர் செயலகம் அமைக்கும் சட்டத்தில் நேற்று

## மைத்திரிபால கையொப்பம்

*ஐ.நா., அமெரிக்கா வரவேற்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 21

நீண்ட இழுபறியின் பின்னர் - நாடாளு மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு 11 மாதங்கள் கடந்தபிறகு, காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான »25

## வாகன 'பெர்மிற்' வியாபாரத்தில் வடமாகாண சபை உறுப்பினர்கள்

*65 முதல் 70 இலட்சம் ரூபா வரை சம்பாதித்தனர்*

யாழ்ப்பாணம், ஜூலை 21

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்குத் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் ஒன்றரை மாதத்துக்கு முன்னர் வழங்கப்பட்டது. அதற்கிடையில் பெரும்பாலான உறுப்பினர்கள் அவற்றை விற்பனை செய்துள்ள »25

# கன்னை பிரிந்து மல்லுக்கட்டியவர்கள் சலுகை பெறுவதில் மட்டும் ஓரணியில்

வாகனப் 'பெர்மிற்' பெறுமதியை அதிகரிக்கக் கோரி மேன்முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 21

வடக்கு மாகாண முதலமைச் சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப் பட்டு, மாகாண சபையே இரண்டாகப் பிளவுறுமளவுக்கு உருவான சர்ச் சைக்கு நடுவிலும், தமக்கான தீர் வையற்ற வாகன அனுமதிப் பத்தி ரத்தில் பாரபட்சம் காட்டப் »23



வித்தியா படுகொலை வழக்கு:

## இன, மத முரண்பாடு ஏற்படுமென்ற சந்தேகத்தாலேயே எதிரிகள் மீது பயங்கரவாதச் சட்டம் பாய்ந்தது

*சிஐடி அதிகாரி தீர்ப்பாயத்தில் சாட்சியம்*

யாழ்ப்பாணம், ஜூலை 21

"புங்குடுதீவு மாணவி வித்தியாவின் சடலம் மீட்கப்பட்ட நிலையைப் பார்த்த போது, அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கொடூரமான முறையில் அவர் படுகொலை »29

# கூட்டாட்சி அரசமைப்பை முடிந்தால் நிறைவேற்றட்டும்

*அரசுக்கு வீரவன்ச எம்.பி. சவால்*

கொழும்பு, ஜூலை 21

கூட்டாட்சி (சமஷ்டி) அரசமைப்பைக் கொண்டு வந்து முடிந்தால் நிறைவேற்றிக் காட்டுமாறு அரசுக்குச் சவால் விடுக்கிறார் மகிந்த அணி நாடாளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

புறக்கோட்டையில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

அரசமைப்பு நிர்ணய சபை யிலிருந்து நான் உள்ளிட்ட எனது கட்சியைச் சேர்ந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர் கள் விலகியுள்ளனர். இத னால் அந்தச் சபை செல்லுப டியற்றது. நாங்கள் நாடாளு மன்ற உறுப்பினர்கள் என் பதால், அரசமைப்புநிர்ணய சபையின் உறுப்பினர்களா னோம். ஆரம்பத்தி லிருந்தே, வழிநடத்தல் குழு மற்றும் உப குழுக் கூட்டங் களில் கலந்து கொள்ள வில்லை.

நாடாளுமன்றத்துக்குவெளி யில் அரசமைப்புச் சட்ட வாக்க சபை என்ற பெயரில் அணியை நிய »08

## இந்திய மீனவர் படகுகளுடன் உடைமைகளையும் விடுவிப்பதா?

*விளக்கம் கோருகிறது பருத்தித்துறை நீதிமன்றம்* »23

## ரணிலைச் சந்தித்துப் பேசினார் ஐ.நாவின் ஜெப்ரி பெல்ட்மன்



கொழும்பு, ஜூலை 21

இலங்கைக்கு வந்துள்ள ஐ. நாவின்அரசியல்விவகாரங்களுக் கான செயலர் ஜெப்ரி பெல்ட்மன் தலைமை அமைச்சர் »24

## மக்களின் குடிதண்ணீர்க் கிணறுகளை இராணுவம் வைத்திருப்பது குற்றமே

*இடர் முகாமைக் கூட்டத்தில் வடக்கு முதல்வர் விசனம்* »24

## கட்சிகளின் கருத்தறிய இடைக்கால அறிக்கை

*வழிநடத்தல் குழுவால் முன்வைப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 21

கட்சிகளின் கருத்துக் களைஅறிவதற்காக, வழி நடத்தல்குழுவின் இடைக் கால அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் செவ்வாய்க்கிழ மைக்கு முன்ன »24

## பாடசாலைகளில் வெள்ளி தோறும் சிவபுராணம் ஓதுதல் கட்டாயமானது

*கல்விச் செயலர் அறிவிப்பு*



யாழ்ப்பாணம், ஜூலை 21

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் வெள்ளிக்கிழ மைகளில் காலைப் பிரார்த்தனை யின்போது சிவபுராணம் »23

## முல்லை காடழிப்பும் வறட்சிக்குக் காரணம்

*முதலமைச்சர் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஜூலை 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் கூழா முறிப்புப் போன்ற இடங்களில் ஒரு குறிப்பிட்ட மக்களுக்குக் காணிகள் வழங்குவதற்காக காடுகள் அழிக் கப்படுகின்றன. நாம் வறட்சியை எதிர்கொள்வதற்கு இது »25

## கூழாமுறிப்புக் காட்டுப் பகுதி திட்டமிட்டு எரிக்கப்பட்டதா?

*உடனடி விசாரணை நடத்தவேண்டும் என்று மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை*

முல்லைத்தீவு, ஜூலை 21



குடியேற்றத்துக்குத் திட் டமிடப்பட்டிருந்த கூழா முறிப்புக் காட்டின் ஒரு பகுதி தீயில் எரிந்து சாம் பராகிய சம்பவம் தொடர் பில் உடனடி »24

அரசமைப்பு உருவாக்க விவகாரத்தில்

# பிளவுண்டது மகிந்த அணி

*விமலின் கட்சி வெளியேறியபோதும் தாம் அதிலிருந்து விலகுவது குறித்து முடிவெடுக்கவில்லை என்கிறார் தினேஸ்*

கொழும்பு, ஜூலை 21

புதிய அரசமைப்பை உரு வாக்கும் விடயத்தில் மகிந்த அணி இடையே கருத்து முரண்பாடு - குழப்பம் ஏற்பட் »25

## வறட்சிப் பாதிப்புக்கு நிரந்தரத் தீர்வு தேவை

*யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா*

யாழ்ப்பாணம், ஜூலை 21

வறட்சிப் பாதிப்புக்குத் தற்காலிகத் தீர்வுகளை நாம் தற்போது இனம் கண்டிருக்கின்றோம். »25

## மக்களின் சம்மதத்துடனான புதிய அரசமைப்பே தேவை

ஆஸி. அயலுறவுத்துறை அமைச்சரிடம் தெரிவித்தார் த.தே.கூ. தலைவர் சம்பந்தன்

விரிவு பக்.02



முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச யோகாசனம் செய்யும் போது எடுக்கப்பட்ட படங்கள். இவற்றை அவரது புதல்வர் நாமல் ராஜபக்ச நேற்று இரவு, கீச்சகப் பதிவில் தரவேற்றம் செய்துள்ளார். (த)



சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

Vardhana JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து வர்தன ஜுனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000

www.dfcc.lk

DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

DFCC வங்கி ... உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனை துர்நடத்தைக்கு உட்படுத்தியவருக்குச் சிறை

கொழும்பு, ஜூலை 21
10 வயது சிறுவனைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய 39 வயதுடைய நபருக்கு அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.
2014 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவன் அவரின் சகோதரர் ஒருவருடன் குளத்துக்கு நீராடச்சென்றுள்ளான். அங்கு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சந்தேகநபர் சிறுவனை அழைத்து வலையை சிறிது நேரம் பிடித்துக்கொள்ளுமாறு கூறியுள்ளார். சிறுவனை பாழடைந்த பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார். சிறுவனுக்கு 10 ரூபாவை வழங்கி இது தொடர்பில் யாரிடமும் எதுவும் கூறக் கூடாது என்று எச்சரித்துள்ளார். சம்பவம் தொடர்பில் சிறுவன் அவரின் சகோதரரிடம் நடந்ததைக் கூறியுள்ளார் என்று கூறப்பட்டது. தோட்ட வேலைக்குச் சென்றிருந்த அவரின் தாய் வந்தவுடன் இது தொடர்பில் சகோதரன் தெரிவித்துள்ளார். உடனடியாக சிறுவனின் தாய் சம்பவம் தொடர்பில் லுணுகம்வெஹெர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.
சந்தேகநபரைக் கைது செய்ய பொலிஸார் சென்ற போது, சந்தேகநபர் தலைமறைவாகினார். சில வாரம் கழித்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சம்பவம் தொடர்பில் சந்தேகநபருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த இரண்டு குற்றச்சாட்டுக்களும் உறுதிப்படுத்தப்பட்டது. முதல் குற்றத்துக்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனையும், இரண்டாவது குற்றத்துக்கு 7 வருட கடூழிய சிறைத்தண்டனையுமாக 14 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
அதற்கு மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு 50 ஆயிரம் ரூபா நட்டஈடும் செலுத்துமாறு மேல் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (ந-ஐ-10)



இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய அயலுறவு அமைச்சர் ஜூலீ பிசெப் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்தார். அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர் சாகல ரத்நாயக்க, தலைமை அமைச்சரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (ந-ஐ)

# மக்களின் சம்மதத்துடனான புதிய அரசமைப்பே தேவை

## ஆஸி. அயலுறவுத்துறை அமைச்சரிடம் தெரிவித்தார் த.தே.கூ. தலைவர் சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 21
அனைத்து மக்களின் சம்மதத்துடனான அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அரசமைப்பு அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு சமத்துவத்தின் அடிப்படையில் நாட்டில் நிரந்த சமாதானம் ஏற்பட வேண்டும்.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய அயலுறவுத்துறை அமைச்சர் ஜூலி பிசெப்புக்கும், இரா.சம்பந்தனுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. அந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது குழுவினருடன் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பு திருப்திகரமாக அமைந்தது.
முக்கியமாக அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகப் பேசப்பட்டது. ஒருமித்த நாட்டுக்குள், எவ்விதமான பிளவும் ஏற்படாமல் ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.
அந்த அரசமைப்பு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாட்டில் சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டும். சமாதானம் ஏற்பட்டால் தான் நாட்டுக்கு எதிர்காலம் இருக்கின்றது. பொருளாதார ரீதியில் முன்னேறலாம்.
இந்த விடயங்கள் பற்றி அவர்களுக்குத் தெளிவுபடுத்திக் கூறினோம். இதுவரையில் அனைத்து மக்களின் சம்மதத்துடனும் இந்த நாட்டில் ஒரு அரசமைப்பு உருவாக்கப்படவில்லை. அந்த நிலைமை தான் நாட்டில் நிலவிய மோதல்களுக்குக் காரணம். அந்தப் பிரச்சினையை நிரந்தரமாக நீக்கிக் கொள்வதற்கு அனைத்து மக்களின் சம்மதத்துடன் ஒரு அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று பாட்டை ஏற்படுத்துவதற்கு இது நல்லதொரு சந்தர்ப்பமாகும்.
ஐக்கிய தேசியக் கட்சியும் சிறி லங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து அரசமைப்பு செயற்பாடுகளில் இலக்கை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். மக்களும் அங்கீகாரமளிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.
போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் சில விடயங்களை முன்னெடுப்பதில் அரசு மிகவும் மெதுவாகவே செயற்படுகின்றது. அதனால் மக்களின் எதிர்பார்ப்பு சிதைவடைந்துள்ளது.



அவர்களுக்குச் சுட்டிக் காட்டினோம். எமது கருத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.
காணிப் பிரச்சினைகள், காணமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகள், மீள்குடியமர்வு போன்ற பல விடயங்களைப் பற்றியும் பேசினோம். தங்கஎது அக்கறை தொடரும் என்றும் இந்த விடயங்களில் தங்களால் இயன்ற கருமங்களை ஆற்றுவோம் என்று அவர்கள் தெரிவித்தனர் - என்றார்.
தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாக இணைந்து ஆட்சியில் உள்ளன. தேசிய ஒருமைப்
குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் அரசின் அக்கறை தொடர்பில் சர்வதேச சமூகம் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினோம்.
இந்தச் சந்திப்பு நேற்றுக் காலை இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் ஹட்சிசனின் இல்லத்தில் நடைபெற்றது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றிருந்தார். (ந)

# தொடருந்தில் மோதி இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூலை 21
மாகோவில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த தொடருந்தில் மோதுண்டு, இளைஞனொருவன் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு, திராய்மடுப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. சடலம் மீட்கப்பட்ட இடத்தில் உயிரிழந்த இளைஞனால் எழுதப்பட்டதாக கூறப்படும் சிங்கள மொழியிலான கடிதம் ஒன்றும், பயணப்பை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. இளைஞன் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ஐ-10)

# போதைக்கெதிராக மாணவர்கள் சத்தியப்பிரமாணம்



கொழும்பு, ஜூலை 21
"போதைப்பொருளை நுகராதவன்" என்று மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் நிகழ்வு கோறளைப்பற்று பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.
"பெற்றோர் வியர்வை சிந்தி உழைத்து எனது கல்விக்காக வழங்கும் பணத்தை எந்தக் காரணம் கொண்டும் மது, சிகரட் மற்றும் போதை தரும் பொருள்களுக்காகப் பயன்படுத்தமாட்டேன்" என்ற உறுதி மொழியுடன் மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். போதைப் பொருளை எந்தக் காரணம் கொண்டும் பாவிக்க மாட்டேன் என்றும் மாணவர்கள் கையொப்பம் இட்டனர்.
நிகழ்வில் சாதுலியா வித்தியாலய அதிபர் எம்.யூ.இஸ்மாயில், கோறளைப்பற்று பிரதேச செயலக கணக்காளர் ரீ.அம்பிகாபதி, பிரதேச செயலக திவிநெகும திணைக்களத்தின் தலைமை முகாமையாளர் எம்.ஏ.அனீஸ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.அறபாத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ந-ஐ-10)

# பாடசாலைச்சூழலைசுத்தமாக பேணுவது அதிபரின்பொறுப்பு

கொழும்பு, ஜூலை 21
பாடசாலைகளில் டெங்குத் தொற்று ஏற்படாது சூழலைப் பேணும் பொறுப்பு அதிபர்களையே சார்ந்தது. மாணவர்கள் டெங்குத் தொற்றால் பாதிக்கப்படாதவாறு அதிபர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.
இவ்வாறு அரச தலைவரின் செயலாளர் ஒஸ்டின் பெர்னான்டோ தலைமையிலான கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.
அரசதலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
"நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொறுப்பு கல்வி அமைச்சின் செயலாளருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது சில இடங்களில் மழை பெய்வதாலும், எதிர்வரும் காலங்களில் மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாலும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. மாணவர்கள் டெங்குத் தொற்றால் பாதிக்கப்படாதவாறு அதிபர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ந-ஐ-10)

# மாற்றுத்திறனாளிகளுக்கு தனியான சிகிச்சைப் பிரிவு

## மந்திகை மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜூலை 21
மாற்றுத்திறனாளிகளுக்கு தனியான சிகிச்சைப் பிரிவு மந்திகை ஆதார மருத்துவமனையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.



மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சை பெற வரும் மாற்றுத் திறனாளிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது. அதனையடுத்து மருத்துவமனை நிர்வாகத்தினர் மாற்றுத் திறனாளிகளுக்குத் தனியான சிகிச்சைப் பிரிவை நேற்று ஆரம்பித்தனர்.
பிரதிவியாழக்கிழமை தோறும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இந்தப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படும். நேற்று 40க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீனைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு நடைபவனி





யாழ்ப்பாணம், ஜூலை 21
"பொலித்தீன் பாவனையை ஒழிப்போம்" எனும் தொனிப் பொருளில் வடமராட்சியில் நேற்று நடைபவனி நடத்தப்பட்டது. வடமராட்சி இந்து மகளிர்கல்லூரி மற்றும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் என்பன இணைந்து நடைபவனியை நடத்தின.
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் முன்றிலில் ஆரம்பமான பேரணி பருத்தித்துறை - யாழ்ப்பாணம் முதன்மைச் சாலையை அடைந்தது. அங்கிருந்து வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் முன்னால் தயாராக நின்ற பேரணியுடன் இணைந்து நகரப் பகுதியை அடைந்தது.
நடைபவனியில் கலந்து கொண்டவர்கள் பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருள்களைத் தடை செய்தல் தொடர்பான பதாகைகளை ஏந்தியிருந்தனர். நடைபவனி சென்ற சாலைகளில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வீதி நாடகங்களை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் நிகழ்த்தினர். (ற-ஜ-109)

## கற்றல் உபகரணம் கையளிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 21
மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட இரு பாடசாலைகளின் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.
வவுணதீவு பிரதேசத்திலுள்ள இருநூறுவில் துர்க்கா பாலர் பாடசாலை மற்றும் இருநூறுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. உதவும் கரங்கள் அமைப்பால் அவை வழங்கப்பட்டன.
உதவும் கரங்கள் அமைப்பின் தொண்டரான கே. லோகிதகாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பிரான்ஸ் தமிழ் மக்கள் உதவும் அமைப்பின் நிதியுதவியுடன் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-10,46)



# டெங்கைக் கட்டுப்படுத்த ஆஸ்திரேலியா உதவி

### அந்நாட்டு அயலுறவுத்துறை அமைச்சர் உறுதி



கொழும்பு, ஜூலை 21
இலங்கையில் அதிகரித்துள்ள டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த ஆஸ்திரேலியா அரசு உலக சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து உயிர் காப்பு உதவிகளை வழங்கத் தயாராக இருக்கிறது.
இவ்வாறு ஆஸ்திரேலிய அயலுறவுத்துறை அமைச்சர் ஜூலி பிசோப் உறுதியளித்தார்.
இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய அயலுறவுத்துறை அமைச்சர் அரச தலைவரை நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
இலங்கையில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக மொனாஸ் பல்கலைக்கழகத்தின் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்த ஆஸ்திரேலிய அரசால் நிதியுதவி வழங்கப்படும். மொனாஸ் பல்கலைக் கழகத்தின் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டமானது ஆஸ்திரேலியாவின் அறிவியல் துறை வளர்ச்சியின் ஓர் சிறந்த உதாரணமாகும். இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக பிரதானமாக வொல்பாச்சியா பக்ரீறியாவை அறிமுகப்படுத்தி டெங்கு பரவலைத்தடுப்பது இதன் நோக்கமாகும்.
வொல்பாச்சியா பக்ரீறியா டெங்கு நோயைத் தொற்ற வைக்கும் நுளம்புகளிடையே ஊடுருவி வைரஸ் உடலில் புகுவதைத் தடுக்கிறது. இந்த பக்ரீறியா மூலம் மேலும் சில பயங்கர நோய்களான சிகா வைரஸ், சிக்கன் குனியா மற்றும் மஞ்சள் காய்ச்சல் ஆகிய நோய்கள் பரவுவதையும் தடுக்கிறது. ஆஸ்திரேலியா அரசு ஒரு மில்லியன் டொலர் உதவியை இலங்கை டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்துக்குவழங்கும்என்று ஆஸி. அயலுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.
இந்தச் சந்திப்பில் ஆள்கடத்தலைத் தடுப்பதற்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக ஆஸ்திரேலியா அயலுறவுத் துறை அமைச்சருக்கு அரச தலைவர் நன்றி தெரிவித்தார்.
நாட்டில்முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கச் செயன்முறையின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.
சந்திப்பில் அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க, அரச தலைவரின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, அயலுறவு அமைச்சின் செயலாளர் எசல வீரக்கோன், ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் பிரைஸ் ஹட்சிசன் ஆகியோர் கலந்துகொண்டனர் - என்றுள்ளது. (ற-ஜ-10)

## பத்தனைப் பொலிஸாரின் அரையாண்டு அணிவகுப்பு



கொழும்பு, ஜூலை 21
திம்புள்ள பத்தனைப் பொலிஸ் நிலையத்தின் அரையாண்டு அணிவகுப்பும், நடமாடும் பொலிஸ் நிலைய திறப்பு விழா நிகழ்வும் நேற்று நடைபெற்றன.
திம்புள்ள,பத்தனைப்பொலிஸ் நிலையத்தின் வருடத்தின் அரையாண்டுக்கான அணிவகுப்பும், மரியாதை செலுத்தும் நிகழ்வும் நடைபெற்றன. நுவரெலியா பொலிஸ் நிலைய அதிகாரி மகிந்த திஸாநாயக்க பொலிஸ் வாகனங்களை சோதனைக்குட்படுத்தினார். பிரதேசத்தில் பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் நடமாடும் பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
திம்புள்ளபத்தனைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நுவரெலியா பொலிஸ் நிலைய அதிகாரி மகிந்த திஸாநாயக்க கலந்து கொண்டார்.
தற்போது திறக்கப்பட்டுள்ள கொட்டகலை கிராம நடமாடும் பொலிஸ் நிலையம் ஒரு மாத காலம் இடைவிடாது செயற்படும்.
இதில் கிராம மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல், முறைப்பாடுகளை பதிவு செய்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளும், சுகாதாரம், கல்வி, கலாசார, ஆன்மிக, விளையாட்டு, போக்குவரத்து, சிரமதானம் போன்ற சேவைகளும் நடைபெறும் என்று நடமாடும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஜ-10)

## அரசமைப்பு தொடர்பாக அறிவூட்டும் கருத்தமர்வு



மன்னார், ஜூலை 21
'புதிய அரசமைப்பை தயாரித்தல்' தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டும் கருத்தமர்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
கருத்தமர்வில் எஸ்.வின்சன் பத்திரன, சட்டத்தரணி திருமதி கோசலை மதன், விரிவுரையாளர் நவரத்தினம் சிவகுமார் ஆகியோர் விரிவுரைகள் வழங்கினர்.
நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் எம்.வை.எஸ். தேசப்பிரிய, மாவட்ட மேலதிக செயலர் திருமதி நந்தினி ஸ்ரான்லிடிமேல், இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் மன்னார் கிளைத் தலைவர் ஜே.ஜே.கெனடி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.
கிராம மட்டத்தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கருத்தமர்வில் கலந்து கொண்டனர்.
மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்புடனும், ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தின் திட்ட நடைமுறைக்கு அமைவாகவும் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ற-ஜ-10, 56)

# காணி அளவீட்டைத் தடுப்பதற்குத் தன்னைத் தாக்கிக் கொண்ட நபர்!

### திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை, ஜூலை 21
தனது காணியைக் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காணி உரிமையாளர் ஒருவர் காணிக்குள் படுத்திருந்து போராட்டம் நடத்தினார். அத்துடன் தனக்குத் தானாகவே கல்லால் அடித்து தலையை உடைத்துக் கொண்டார். இந்தச் சம்பவம் திருகோணமலை, மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மிரிஸ்வெவவில் நேற்று நடந்துள்ளது.
மிரிஸ்வெவவில் தனியாருக்குச் சொந்தமான காணியில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
நில அளவை திணைக்கள அதிகாரிகள் நேற்று அந்தக் காணியில் நில அளவை மேற்கொள்ளச் சென்றனர். அதற்குக் காணி உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தினார்.
"நாங்கள் போருக்கு முன்னர் குடியிருந்த காணியை விட்டுச் சென்று மீண்டும் மீளக்குடியமர்ந்து பல வருடங்கள் ஆகின்றன. தற்போது எனது காணியை [illegible] பொலிஸ்நிலையமொன்றை அமைப்பதற்காக பிரதேச செயலகம் அனுமதி வழங்கியுள்ளது. நில அளவையாளர்களும் பொலிஸாரும் நில அளவையில் நேற்று ஈடுபட்டனர்." என்று காணி உரிமையாளர் தெரிவித்தார்.
காணி உரிமையாளரின் எதிர்ப்பை அடுத்து காணி அளவிடும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ10,45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்.ஐ.வி. தொடர்பான விழிப்புணர்வு தேவை

## மருத்துவர் அனுஷியா சுட்டிக்காட்டு



மட்டக்களப்பு, ஜூலை 21
எயிட்ஸ் தொற்று வந்த பின்னர் வருந்துவதை விடவும், தொற்று ஏற்படுவதற்கு முன்னர் தடுப்பதற்கு ஏற்ற விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். களப் பணியாளர்கள் இது தொடர்பாகக கரிசனை காட்ட வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாலியல் பரிமாற்ற நோய் எயிட்ஸ் தொற்றுக் கட்டுப்பாட்டு பொறுப்பு மருத்துவர் அனுஷியா ஸ்ரீசங்கர் தெரிவித்தார்.

களப்பணிகளில் கடமையாற்றும் அலுவலர்களுக்கும் எயிட்ஸ் தொற்றுப் பற்றிய விழிப்பூட்டல் கருத்தரங்கு வவுணதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எயிட்ஸ் ஒரு ஆட்கொல்லி நோய். சமூக அந்தஸ்து மற்றும் அவமானம் என்பனவற்றால் எயிட்ஸ் தொற்றுக்குள்ளானவர்கள் வெளிவரத் தயங்குகிறார்கள். தங்களை மருத்துவ சிகிச்சைகளுக்குக் கூட உட்படுத்துவதில்லை.

எயிட்ஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக் கூடியது. அவ்வாறான கண்டுபிடிப்புகளில் மருத்துவ உலகம் முன்னேறியிருக்கின்றது. நகரப் புறங்களை விட கிராம மக்களுக்கு எயிட்ஸ் தொற்று பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதில்லை. அதனால் அவர்கள் தாங்களாகவே முன்வந்து தங்களை எயிட்ஸ் தொற்றுப் பரிசோதனை செய்து கொள்வதில்லை.

களப்பணிகளில் எந்த நேரமும் மக்களோடு சேவையாற்றும் கிராம சேவையாளர்கள், சமுர்த்தித் திட்ட அலுவலர்கள், சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள், பெண்கள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் இந்த விழிப்பூட்டலுக்குப் பொருத்தமானவர்கள் எனக் கருதப்படுகின்றது. எயிட்ஸ் ஒரு உயிர்க் கொல்லி நோய் என்ற பயத்தையும் தாண்டி அதனை வராமல் தடுப்பது அவசியம். வந்த பின்னர் அது பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் விழிப்புணர்வு அவசியம்.

குருதிப் பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் எயிட்ஸ் தொற்று அடுத்தவருக்கு பரவாமல் பாதுகாக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்ப தற்கு கிராம மக்களை ஊக்குவிப்பதே எமது விழிப்பூட்டலின் நோக்கம் - என்றார்.

நிகழ்வில் வவுணதீவு உதவி பிரதேச செயலர் எஸ். ராஜ்பாபு, சுகாதார மேற்பார்வை அதிகாரி எஸ். விஜயகுமார், பொது சுகாதார பரிசோதகர்களான எம். தயாளன், பி. முருகதாஸ் உட்பட பிரதேச செயலகத்துடன் இணைந்து களப் பணியாற்றும் சுமார் 80 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(ற-ஜ10,46)

# சாலையில் சென்ற நபர் மீது தாக்குதல்

## பணமும் திருட்டு; போதையில் அடாவடி

வவுனியா, ஜூலை 21
மதுபோதையில் சென்ற இளைஞர்கள் சிலர் குடும்பத் தலைவர் ஒருவரைத் தாக்கி விட்டு அவரிடமிருந்த ஒரு தொகைப் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா நகர்ப்பகுதியில் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

வவுனியா தொடருந்து நிலையப் பகுதியில் மதுபோதையில் நின்ற இளைஞர்கள், தொடருந்து நிலையத்துக்கு அருகிலிருந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த குடும்பத் தலைவரை வழி மறித்து அவர் மீது தாக்குதல் நடத்தினர். அவர் தனது உடைமையில் வைத்திருந்த 62 ஆயிரத்து 100 ரூபா பணத்தைத் திருடிக் கொண்டுதப்பியோடியுள்ளனர். காயமடைந்த குடும்பத்தலைவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக வவுனியாபொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ,10)



மாகாண ரீதியில் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் ஹற்றன் தொடருந்து நிலையத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. ஹற்றன் நகரசபை அதிகாரிகள், தொடருந்து நிலைய அதிகாரிகள் இணைந்து சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர். (ற - ஜ)

# விபத்தில் முதியவர் காயம்



மட்டக்களப்பு, ஜூலை 21
உழவியந்திரத்துடன் விபத்துக்குள்ளான முதியவரின் கால் முறிந்தது. அவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று காத்தான்குடி நகரப் பகுதியில் நடந்தது.

மட்டக்களப்பு கல்முனை சாலையில் காத்தான்குடி நகருக்கூடாக முதியவர் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது உழவு இயந்திரத்துடன்மோதிவிபத்துக்குள்ளானார்.

உழவு இயந்திர இழுவைப் பெட்டியின் கீழ் அகப்பட்டு கால் முறிந்தது. உழவு இயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ஜ,10,46)

# மாகாண ரீதியாக டெங்கு ஒழிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 21
தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்மாகாண ரீதியாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஈச்சந்தீவு கிராமத்தில் முழுமையான டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

பொது இடங்கள், சாலைகள், மைதானம், ஆலயங்கள், வாய்க்கால்கள் என்பன துப்புரவாக்கப்பட்டன. ஈச்சந்தீவு முதியோர் சங்கம், கிராம மட்ட அமைப்புக்கள், மகளிர் சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்களும் கிராம மக்களும் சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்களும் இணைந்து சிரமதானப்பணிகளை முன்னெடுத்தனர்.

"சுற்றாடல் புனிதமானது" என்ற வேலைத்திட்டத்துக்கு அமைவாக மத்திய மாகாணத்தில் நுவரெலியா பிரதேச சபையின் ஊடாக சிரமதானப் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. கொட்டகலை மருத்துவமனைப் பகுதியிலிருந்து, பத்தனை சிறிபாத கல்வியியற் கல்லூரி வரை சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்படும் பல இடங்கள் இதன் போது இனங்காணப்பட்டு ஒழிக்கப்பட்டன. சிரமதானத்துக்குப் பத்தனை சிறிபாத கல்வியியல் கல்லூரியின் மாணவ, மாணவிகள், நுவரெலியா பிரதேச சபையின் செயலாளர், அதிகாரிகள், சுகாதார பரிசோதகர் எனப் பலரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

திருகோணமலையில் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் மற்றுமோர் நடவடிக்கையாக வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பிளாஸ்ரிக் கோப்பைகளை அப்புறப்படுத்தும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (ற-ஜ10,40)


# அம்பாந்தோட்டை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 21
அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடமையாற்றும் அரச மருத்துவர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

"மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் தன்னிச்சையாக மருத்துவர்களை இடமாற்றம் செய்கிறார்" என்று அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அம்பாந்தோட்டை மாவட்ட கிளையின் செயலாளர் அநுர ஜயசேகர குற்றஞ்சாட்டினார்.

அதேவேளை "நீண்ட காலமாக மருத்துவமனைகளில் சேவை புரிந்த மற்றும் நிதி முறைகேடுகளில் ஈடுபட்ட மருத்துவர்களே வேறு மருத்துவமனைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்" என்று அம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளரான மருத்துவர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டார். (ஐ)

# மாணவருக்கு நிதியுதவி



மட்டக்களப்பு, ஜூலை 21
மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பின்தங்கிய மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக நிதியுதவி வழங்கப்பட்டது. இணைந்த கரங்கள் என்ற அமைப்பு நிதி வழங்கியது. பாடசாலை நிர்வாகத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பாடசாலை அதிபர் கே.பாஸ்கரன் மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பைச் சேர்ந்த தொண்டர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மத்திய கிழக்கு நாட்டில் தொழில் புரியும் நலன் விரும்பிகளின் நிதிப் பங்களிப்பின் மூலம் இந்த நிதி பெறப்பட்டது என்று இணைந்த கரங்கள் அமைப்பினர் தெரிவித்தனர்.

(ற-ஜ,10,46)

# வருமான அறவீடு நடமாடும் சேவை

சாவகச்சேரி, ஜூலை 21
சாவகச்சேரி நகரசபையின் வருமான அறவீடு தொடர்பான நடமாடும் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

சபையின் முதலாம் வட்டாரமான மீசாலை மேற்குப் பிரிவு மக்களுக்கான வருமான அறவீட்டு நடமாடும் சேவையை சபையின் செயலாளர் வைபவ ரீதியாக ஆரம்பித்தார்.



மீசாலை பொது நூலகத்தில் நடமாடும் சேவை நடைபெற்றது. இதில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு தமது வரிகளைச் செலுத்தினர்.

இந்த நடமாடும் சேவைக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டது. சபை அலுவலகத்தில் இந்த வருடத்துக்குரிய ஆதன வரி, வர்த்தக தொழில் வரி, சைக்கிள் இலக்கத் தகடுகள் போன்றவை செலுத்தாத வரியிறுப்பாளர்களின் நலன்கருதி வட்டார ரீதியாக நடமாடும் சேவைகள் நடத்தப்படுகின்றன. வரியிறுப்பாளர்களின் வேண்டுகோளின் பிரகாரம் வட்டார ரீதியாக பிரதி வியாழக்கிழமைகளில் நடமாடும் சேவைகள் நடத்தப்படும் என்று சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார். (ற-ஜ,9)

# வழமைக்குத் திரும்பியது கொட்டகலை ரயில் சேவை




கொட்டகலை தொடருந்துத் தண்டவாளம் மற்றும் 60 அடி பாலத்தின் சீரமைப்புப் பணிகள் முடிவுற்ற நிலையில் சிறப்புப் பூசை வழிபாடுகளுக்குப் பின்னர் பரீட்சார்த்த தொடருந்துச் சேவை நேற்று நடத்தப்பட்டது.

கொழும்பிலிருந்து பதுளைக்குப் புறப்பட்ட இரவு தபால் சேவைத் தொடருந்து கடந்த 13ஆம் திகதி கொட்டகலை தொடருந்து நிலையத்துக்கு அண்மித்தபகுதியில்தடம்புரண்டுவிபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் நான்கு தொடருந்துப் பெட்டிகள் குடைசாய்ந்து சேதமடைந்தன.

தொடருந்துப் பாதையைத் துரித கதியில் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. சீரமைப்புப் பணிகள் நேற்று முடிவுற்ற நிலையில் பரீட்சார்த்த தொடருந்துச் சேவை நடத்தப்பட்டது. இனி வழமையான தொடருந்துச் சேவைகள் நடைபெறும் என்று தொடருந்துத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ற - ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க் கந்தனின் காளாஞ்சி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்து முறைப்படி திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. கொடியேற்றத்துக்கான கொடிச்சீலையை சிவஞான முதலியாரின் இல்லத்துக்குச் சென்று ஆலயத்தின் முதன்மைக் குருக்கள் கையளித்தார். ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

(4)




## மூக்குக் கண்ணாடி வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் நுழைவாயில் லயன்ஸ் கழகத்தில் (மாவட்டம் 306 பி1) மூக்குக்கண்ணாடிகளைப் பெறப் பதிவு செய்தவர்கள், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கண் பரிசோதனைக்காக ஏ-9 வீதி கைதடியில் அமைந்துள்ள கழக அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ற)

## ரஞ்சினிக்கு மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 21

நெல்லியடி மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி ரஞ்சினி சிவராஜாவின் மணி விழாவும் சேவை நயப்பு விழாவும் கல்லூரி கலையரங்கத்தில் நாளை பி.ப 3 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(4-109)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவுகளை எரிக்காதீர்கள் பக்குவமாக ஒப்படையுங்கள்

## சுகாதாரப் பிரிவு பொதுமக்களிடம் கோருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 21
பிளாஸ்ரிக், பொலித்தீன், சொப்பிங்பை, ரயர் போன்ற கழிவுகள் ஆங்காங்கே எரியூட்டப்படுவது அவதானிக்கப்பட்டுவருகின்றது. அவ்வாறு எரிப்பதால் நச்சு வாயுக்கள் வெளியாகின்றன.

அவ்வாறான செயற்பாடுகளில் பொது மக்கள் ஈடுபடவேண்டாம்.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். இது தொடர்பில் அவர்கள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,

கழிவுகளை அகற்றிக் கொள்வதற்கு எரியூட்டுதல் ஒரு பாதுகாப்பான முறையல்ல. இவ்வாறு எரிப்பதனால் பல நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தினுள் விடப்படுகின்றன. இவை ஒவ்வாமை, சுவாசப்புற்றுநோய்கள் போன்ற வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தக்கூடியன. சிறுவர்களில் மூச்சுத்திணறலையும் ஏற்படுத்தலாம்.

எனவே மேற்கூறிய கழிவுகளை எரியூட்டாது தவிர்த்தும், சாலைகளில் கண்டபடி வீசாது தவிர்த்தும், வேறாகச் சேமித்து, மாநகரசபை கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இவ்வாறு அகற்றப்படும் கழிவு கள், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாத வகையில் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும்.

சருகுக்கழிவுகளை எரியூட்டாது கூட்டுப்பசளை உருவாக்கப் பயன்படுத்த முடியும்.

சுற்றுச்சூழல் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு கழிவுகளை எரியூட்டாது வேறுபிரித்துப் பொது சுகாதார பொறியில் பிரிவினரின் கழிவகற்றும் வாகனங்களில் கையளித்து ஆரோக்கியம் பேணுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்றுள்ளது. (4)



# சாலை அபிவிருத்தித் திணைக்கள கட்டடதொகுதி கைதடியில் திறப்பு

## ரூபா 21 மில்லியனில் அமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 21
வடக்கு மாகாண சாலை அபிவிருத்தி திணைக்களத்தினரின் பாவனைக்காக ஆய்வு கூடம், களஞ்சியசாலை, அதிகாரிகளுக்கான தங்குமிடம் மற்றும் இயந்திரங்களின் தரிப்பிடம் போன்ற வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதி கைதடியில் திறந்து வைக்கப்பட்டது. அமைச்சின் செய்திக குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின்கீழ் வடக்கு சாலைகள் இணைப்பு செயற்திட்டத்தினூடாக 21 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டது. இதனூடாகச் சாலை வேலைகள், கட்டுமானங்களுக்கு தேவையான மண், கல் போன்ற மூலப்பொருள்களின் தரங்களைத் துரித கதியில் ஆய்வு செய்வதற்கும், அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தும் இயந்திரங்கள், உபகரணங்களைப் பாதுகாப்பாக பராமரிப்பதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் சாலைஅபிவிருத்தி வேலை களை இலகுவாகவும் துரிதமாகவும் முன்னெடுக்க முடியு மென நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

திறப்பு விழாவில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன், அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (4)

# மக்கள் தொடர்பு பிரிவு நேற்றுத் திறக்கப்பட்டது



கொழும்பு, ஜூலை 21
மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் தலைமை அமைச்சர் அலுவலகத்தில் மக்கள் தொடர்புப் பிரிவு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. தலைமை அமைச்சர் அலுவலக பணிக்குழுவின் பிரதித்தலைவர் ரோஸி சேனநாயக்க அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இலக்கம் 101, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தையில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறலுடன் கூடிய மக்கள் சேவையை முன்னெடுப்பது பற்றிக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தலைமை அமைச்சர் அலுவலகம் தெரிவித்தது. அதன் தலைவராக அரசநிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜே.தடல்லகே நியமிக்கப்பட்டார். (ற-ஐ-10)

## ரூபா 3000 தண்டம்

போதையில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டவருக்கு ரூபா 3 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டது. கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் இவ்வாறு நடமாடியவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டம் செலுத்தி னார். (4)

# டெனீஸ்வரனின் அமைச்சுப் பதவியை மீளப்பெறுவதைப் மீள்பரிசீலிக்கவும்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் முதலமைச்சர் விக்கியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 21
அமைச்சர் டெனீஸ்வரனை வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கும் கோரிக்கை தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறு வடக்கு முதலமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் இவ்வாறு கோரியுள்ளது. தமிழீழ விடுதலை இயக்கத்துக்கும் இந்தக் கோரிக்கை கொண்ட கடிதத்தை அனுப்பியுள்ளதாகச் சங்கம் தெரிவித்தது. முதலமைச்சருக்குக் கொடுத்ததாகச் சங்கத்தினர் அனுப்பியள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,

கடந்த காலங்களில் தனியார் போக்குவரத்துத் துறை ஆக்கபூர்வமான சேவையை மக்களுக்குச் செய்வதற்கு எமது அமைச்சரும், அமைச்சு அதிகாரிகளும் கைகொடுத்திருந்தனர்.

தற்போது போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை மாற்றுமாறு அவர் சார்ந்த கட்சியினால் தங்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

வடக்கில் போக்குவரத்துத்துறையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட போக்குவரத்துத் துறையினருக்கு நியதிச் சட்டங்களை உருவாக்கியதோடு இலங்கையில் எங்குமில்லாத வகையில் வடக்கு மாகாணத்தில் 60:40 என்ற இணைந்த நேர அட்டவணையை அறிமுகம் செய்து அதனை வர்த்தமானியில் பிரசுரித்த பெருமை அமைச்சர் டெனீஸ்வரனைச் சார்ந்ததாகவே கருதுகின்றோம்.

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தினை இயங்கச் செய்வதற்கு கடும் பிரயத்தனங்களை அவர் மேற்கொண்டுள்ளார். இவ்வாறான நிலையில் அவரைப் பதவியில் இருந்து நீக்குவதானது தனியார் பேருந்து உரிமையாளர்களது வாழ்வாதாரத்திலும் எமது பேருந்துகளை நம்பி ஜீவனோபாயத்தினை நடத்தும் தொழிலாளர்களையும் பாதிக்கும் செயற்பாடாக நாம் கருதுகின்றோம்.

நீண்ட காலமாக தனியார் பேருந்து ஊழியர்களுக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்டுவரும் முரண்பாடுகளினைக் களையும் ஓர் வடிவமாக வடக்கில் இணைந்த நேர அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் சில நாள்களில் சீராகும் என்று கருதுகிறோம்.

இந்த நிலையில் அமைச்சரை நீக்கும் செயற்பாட்டைத் தாங்கள் பரிசீலனை செய்து நல்லதொரு முடிவை மேற்கொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட தடங்கல்களைக் களையும் பொருட்டு எமது சங்கம் தங்களைச் சந்திப்பதற்கு முயற்சி மேற்கொண்டபோதிலும் தங்களது வேலைப்பளு காரணமாக அது சாத்தியமற்றுபோயிருந்தது.

எமது எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்யும் வகையில் எமது சங்கத்துக்கும் தங்களுக்குமான சந்திப்பு இதுவரை நடந்தேறவில்லை என்ற கவலையான விட்யத்தினையும் தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டுவர விரும்பு கின்றோம்.

வடக்கு மாகாண போக்குவரத்துச் சேவையின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து அமைச்சர் சார்ந்த கட்சியினால் தங்களுக்கு முன்வைக்கப் பட்டிருக்கும் கோரிக்கையினை மீள்பரிசீலனை செய்யுமாறு மிகவும் பணிவாக வேண்டுகிறோம்.

தங்களினால் மீண்டும் மேற்கொள்ளப்படவிருக்கும் நியாயபூர்வமான விசாரணையின் பின்னர் அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவருக்கெதிராக தாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு போக்குவரத்து அமைச்சர் கட்டுப்படவில்லையாயின் நாம் அதற்கெதிராக குரல் கொடுக்க தயங்கமாட்டோம் என்பதனையும் தங்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்து நிற்கின்றோம் - என்றுள்ளது. (4)

## முதியவர்கள் தனித்திருந்த வீட்டில் கொள்ளை

தொண்டைமானாறு, ஜூலை 21
தொண்டைமானாறு உடுப்பிட்டிப் பகுதியில் தனித்திருந்த முதியவர்கள் வீட்டில் பணம், நகை கொள்ளையிடப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் உடுப்பிட்டியில் நேற்று அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்றது.

65 வயது மற்றும் 62 வயதுடைய முதியவர்களின் பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கின்றனர். 4 பேர் கொண்ட திருட்டுக் கும்பல் வீட்டின் புகைக் கூடு பகுதியினூடாக உள்நுழைந்தனர். துணியால் முகத்தைக் கட்டியபடி உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் உள்ளே உள்ள மின்விளக்குகளை அணைத்துவிட்டு முதியவர்களையும் பயமுறுத்தி 10 பவுண் நகைகள், 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றையும் எடுத்துச் சென்றனர். முதியவர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர். சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற-ஐ-10-26)

# வேறு எந்தக்கட்சியிலும் இணையப் போவதில்லை

## மகிந்த அமரவீர உறுதி



கொழும்பு, ஜூலை 21
அரசில் இருந்து விலகினாலும் வேறு எந்தக் கட்சியிலும் இணையப் போவதில்லை. வேறு ஒரு ஒரு கட்சியின் வெற்றிக்காகவும் பாடுபடப் போவதில்லை.

இவ்வாறு அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

வத்தளை திக்கோவிட மீன்பிடித் துறைமுகத்தில் நேற்று நடைபெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 11 பேர் கூட்டு எதிர்க்கட்சியில் இணையப் போகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருக்கின்றேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மைய செயற்குழு எடுத்த தீர்மானத்துக்கு அமைய அரசில் இணைய முடிவு செய்யப்பட்டது.

அரசில் இருந்து விலகுவதாயின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மைய செயற்குழு எடுக்கும் தீர்மானத்துக்கு அமையவே அதுவும் மேற்கொள்ளப்படும்.

எவரேனும் ஒருவர் கட்சியில் இருந்து விலகுவார் என்றால் அவரது நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப்பெறச் செய்வதாகும் - என்றார். (ற-ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரக நோய் தடுத்திட

* வளர்ந்தோர், தினசரி, 3 லீற்றர் சுத்தமான குடிதண்ணீர் அருந்துவோம்.
* அலுவலகத்துக்கு, பாடசாலைக்கு செல்லும்போது குடிதண்ணீரை வீட்டிலிருந்து கொண்டு செல்வோம்.
* விவசாய இரசாயனப் பாவனையை குறைப்போம்.
* சேதன விவசாயச் செய்கையில் ஈடுபடுவோம்.
* வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவோம்.
* 3 வருடங்களுக்கு ஒரு தடவையாவது சிறுநீர், குருதி பரிசோதனை செய்திடுவோம்.



*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*

### குடிமனைக்குள் புகுந்து

## யானையின் அட்டகாசத்தால் பயன்தரு மரங்கள் நாசம்

முல்லைத்தீவு, ஜூலை 21

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முறிகண்டியில் நேற்றுமுன்தினமிரவு நுழைந்த யானை பயன்தரு தென்னை, பலா உள்ளிட்ட பயன்தரு மரங்களை நாசமாக்கியுள்ளன என்று பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள தனியார் குடியிருப்புக் காணிக்குள் நுழைந்த யானை அங்கிருந்த பயன்தரும் நிலையில் இருந்த 30 தென்னைகளை முறித்துள்ளன. மேலும் வாழைத் தோட்டத்தையும் நாசம் செய்துள்ளது.

அதிகாலை ஒரு மணிவரை அந்த யானையைக் கலைக்க முடியவில்லை. பின்னர் அயலவர்களின் உதவியுடன் யானை அங்கிருந்து கலைக்கப்பட்டது என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

வாழ்வாதாரத்துக்காக நீண்டகால முயற்சியில் நடப்பட்ட - வளர்க்கப்பட்ட பயிர்கள் கண்ணுக்கு முன்பாகவே நாசமாகியமை கவலையடையச்செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தனக்கு இழப்பீடு பெற்றுத் தரவேண்டும் என்றும் அவர் கோருகிறார்.

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்கனவே குளங்களின் தண்ணீர் வற்றியுள்ளது. விவசாயம் கைவிடப்படும் அபாயத்தைப் பிரதேச விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில் யானையின் அழிவுகளால் தாம் மிக மோசமாகப் பாதிக்கப்படுவதாக பிரதேசத்தைச் சேர்ந்த வர்கள் கூறுகின்றனர். (4)

## 9 சிறுவர் இல்லங்கள் வடக்கில் பதிவின்றி இயங்கி வருகின்றன

'வடக்கு மாகாணத்தில் 41 சிறுவர் இல்லங்கள் உள்ளன. அவற்றில் 9 சிறுவர் இல்லங்கள் கொழும்பு அரசிடமோ அல்லது மாகாண சபையிடமோ பதிவு செய்யப்படாமலேயே இயங்கி வருகின்றன'

இவ்வாறு வடக்கு மாகாண சிறுவர்கள் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் இல்லங்களில் 1941 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் 9 சிறுவர் இல்லங்கள் இன்னமும் பதியப்படவில்லை. சிறுவர் இல்லங்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் கொழும்பு அரசின் கீழ் பதியப்பட்டு வந்தன. எனினும் வடக்கிலுள்ள 41 சிறுவர் இல்லங்களில் 9 சிறுவர் இல்லங்கள் கொழும்பு அரசின் கீழ் நிர்வகிக்கப்படும்போதும் அவை பதிவு செய்யப்படவில்லை.

வவுனியா மாவட்டத்தில் உள்ள 10 சிறுவர் இல்லங்களில் 7 சிறுவர் இல்லங்கள் பதியப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 8 சிறுவர் இல்லங்களில் 2 சிறுவர் இல்லங்கள் பதியப்படவில்லை. சிறுவர் இல்லங்கள் தொடர்பானவடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டத்தில் மாகாணத்தில் இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களும் பதியப்பட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளடக்க ப்பட்டுள்ள து. அதற்கு அமைய சிறுவர் இல்லங்களை பதிவ தற்கு ஆறுமாத கால அவகாசம் வழங்கப்பட்டது. எனினும் ஒரேயொரு சிறுவர் இல்லம் மாத்திரமே இதுவரை பதியப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் அதிக சிறுவர் இல்லங்களைக் கொண்டதாக யாழ்ப்பாண மாவட்டமே உள்ளது. இங்கு 13 சிறுவர் இல்லங்கள் உள்ளன. மன்னார், முல்லைத் தீவு மாவட்டங்களில் தலா 5 சிறுவர் இல்லங்களும் உள்ளன. முல்லைதீவு மாவட்டத்தில் இயங்கும் 5 சிறுவர் இல்லங்களும் பதியப்பட்டுள்ளன. (4-ஈ)

## கேள்வி கோருதல்
## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தலைவர்.மாவட்டசெயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம். யாழ்ப்பாணம். கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான. தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA).கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழ்க் குறிப்பிடும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு. பொதுநிதி சுற்றறிக்கை. இல.04/2016(i)இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்துக்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்டசெயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2427) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம். மாவட்டச் செயலகம், கண்டி வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டிவீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து 21.07.2017முதல் 10.08.2017 வரை அலுவலக நாள்களில் 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்படும் தொகையினைப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.
6. கேள்விகள் 11.08.2017 ஆம் திகதியன்று காலை 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர். மாவட்ட பெறுகைக் குழு. மாவட்ட செயலகம். கண்டிவீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட சேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகை தந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.
7. கேள்வித்தொடர்பான முன்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்ட செயலகம். கண்டிவீதி. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 04.08.2017அன்று காலை 10:30 மணிக்கு நடைபெறும்.
8. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக்குழுவின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணைவிவரம். | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 01 | JF/DPS/Fish/ CH/V/ 08/2017 | கட்டைக்காடு, முள்ளியான் பொதுமண்டபம் அமைத்தல் - மருதங்கேணி | 2.562 | 1,500.00 | C6, C7&C8 | 25,650.00 | 17.12.2017 | 90 நாள்கள் |
| 02 | JF/DPS/Fish/ AC/V/ 09/2017 | உடுத்துறை ஏலவிற்பனை நிலையம் அமைத்தல் - மருதங்கேணி | 2.562 | 1,500.00 | C6, C7 & C8 | 25,650.00 | 17.12.2017 | 90 நாள்கள் |

**நா. வேதநாயகன்,**
**அரச அதிபர் / மாவட்டச் செயலாளர்,**
**யாழ் மாவட்டம்.**

## INVITATION FOR BIDS (IFB)
## District Secretariat, Jaffna.
## Procurement of Medical Equipment

The Department Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the above Medical equipment as specified below.

| ReferenceNumber | Items | Qty | BidSecurity |
|---|---|---|---|
| NP/GA/BHT/ME/2017/01 | Neonatal CPAP Machine | 01 | 50,000.00 |
| | Infant Incubator | 02 | |
| | Infant Warmer | 01 | |
| NP/GA/BHT/ME/2017/02 | Basic Patient Monitor | 01 | 25,000.00 |
| | Infusion Pump | 03 | |
| | Syringe Pump | 02 | |
| | Pulse Oxy Meter | 02 | |
| NP/GA/BHT/ME/2017/03 | Electronics Infant Weighing Scale | 03 | 25,000.00 |
| | Spot Lamp | 01 | |
| | LED Phototherapy Unit | 01 | |
| | Infant Oxygen Hood | 02 | |

* Non refundable fee Rs.1000/=

1. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna. (021 2222278/4557)during the office hours.
2. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of anon refundable fee asspecified above on working days from Regional Director of Health Services, Jaffna from 21.07.2017 to 10.08.2017 during 09.00 Hours to 15.00 Hours on working days except 12.30 to 13.30 hours. The method of all payments will be by cash.
3. Bids must be delivered on or before 11.00 Hours of 11.08.2017 to the address given below or deposited in the tender box available at the Room of Government Agent, District Secretariat, Kandy Road, Jaffna. Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

N. Vethanayahan,
Government Agent / District Secretary,
District Secretariat,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரசபை ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தியவர் கைது

கொழும்பு, ஜூலை 21
இலங்கை மின்சார சபை ஊழியர்கள் இருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
அம்பதலே பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு மின்சாரத்தைத் துண்டிக்க மின்சார சபை ஊழியர்கள் இருவர் சென்றனர். அங்கு அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் மேற்கொண்ட சந்தேகநபர் தலைமறைவானார்.
மிரிஹான பொலிஸ் மற்றும் முல்லேரியாவ பொலிஸ் அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சிறப்புத் தேடுதலின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இந்தத் தாக்குதலைக் கண்டித்து சிறி ஜயவர்தனபுர பிரதேச மின்சார பொறியியலாளர்கள் நேற்றுமுன் தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ற-ஜ.10)

# யாழ்ப்பாணப் பல்கலை. விஞ்ஞான பீட மாணவர் வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
பல்கலைக்கழக நிர்வாகத்தால் 8 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மாணவர்கள் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது
கடந்த மாதம் 19ஆம் திகதி பல்கலையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் ஈடுபட்டனர் என்று கூறி ஒழுக்காற்று விசாரணைக்கு அமைவாக சம்பவத்துடன் தொடர்புடைய 8 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது. எனினும் அவர்களில் 4 மாணவர்களுக்குச் சம்பவத்துடன் தொடர்பில்லை. உரிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் அந்த மாணவர்களில் 4 பேர் மீதுள்ள பழைய சம்பவங்கள் கருத்திற் கொள்ளப்பட்டன. சந்தேகத்தின் பேரில் மாணவர்களுக்கு வகுப்புத் தடை வழங்கப்பட்டது. அசம்பாவிதங்கள் தொடர்பான ஆதாரங்களின் அடிப்படையில் வகுப்புத் தடை வழங்காமல் வேறு விடயங்களை எடுத்து ஏன் வகுப்புத் தடை வழங்கப்படவேண்டும்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்பு இல்லாத இன்னொரு மாணவிக்கும் வகுப்புத் தடை வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. வகுப்புத் தடை செய்யும் மாணவர் பக்கத்திலும் நியாயமான காரணங்கள் இருப்பதை நிர்வாகம் கருத்தில் எடுக்க வேண்டும். வகுப்புத் தடையை எடுத்து பொதுமன்னிப்பு வழங்க வேண்டும். இதனை வலியுறுத்தி எமது ஒன்றியம் சக மாணவர்களுடன் கலந்தாலோசித்ததன் அடிப்படையில் பீடம் தழுவிய வகுப்பு புறக்கணிப்பு இன்றிலிருந்து (நேற்றிலிருந்து) மேற்கொள்கின்றோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ஜ)



## பொலிஸ் நடமாடும் சேவை முகாவிலில் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூலை 21
கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பளை முகாவில் முன்பள்ளியில் பொலிஸாரின் நடமாடும் சேவை நேற்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றது.
கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறிவர்தன மற்றும் கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபச்ச ஆகியோரால் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நடமாடும் சேவை பளைப் பிரதேச மக்களுக்கு ஒரு மாதகாலத்துக்கு வழங்கப்படவுள்ளது.
நிகழ்வில் மருத்துவம், கண்ணாடி வழங்கல், தொலைந்த ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல், முறைப்பாடுகள், பொது வேலைகள், விளையாட்டு வீடு அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பணிப்பின் கீழ் பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றஞ்சன பண்டாரவால் இந்த நடமாடும் சேவை நடத்தப்படுகின்றது.
இதில் கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடுகளை பதிவு செய்த மக்களுக்கு உடனடியாகத் தீர்வுகள் வழங்கப்பட்டன.
இதில் பாடசாலை மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி ஒன்று வழங்கப்பட்டது. (4-6)

## கமலாசினி மாணவரின் நாடாளுமன்ற அமர்வு

தென்மராட்சி, ஜூலை 21
மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு இன்றுவெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறம்.
வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் வித்தியாலய அதிபருமான இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் அமர்வுக்கு தலைமை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாள்ர் திருமதி சீ.ஏ.திருக்குமாரும் சிறப்பு விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும் வித்தியாலய பழைய சங்க கனடாக் கிளையின் செயலாளருமான திருமதி சிவசோதி ஜெயக்குமாரும் மதிப்புறு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமாரும் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4 - 9)

## வருடாந்தத் திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 21
இணுவில் தெற்கு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
எதிர்வரும் 28ஆம் திகதி மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறு நாள் 29ஆம் திகதி மலை 7 மணிக்குசப்பைரதத்திருவிழாவும் 30ஆம் திகதி தேர்த் திருவிழாவும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ)

# ஆடி அமாவாசை

## வில்லூன்றியில்

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் அதிகாலை சிறப்பு முழுக்கு மற்றும் வழிபாடுகள் இடம்பெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டப வழிபாடும் ஆரம்பமாகும். காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்த வாரியும், காலை 8.30மணிக்கு தீர்த்த மண்டபத்தில் அனுக்கிரகமும், மு.ப.10 மணிக்கு சுவாமி கோயிலுக்கு எழுந்தருளலும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ)

## கீரிமலையில்

ஆடி அமாவாசை தினமான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கீரிமலை முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள குழந்தைவேல் சுவாமிகள் ஆலயக் கடற்கரையில் 15 அடி உயரமான பீடத்தில் அமைந்துள்ள சிவலிங்கத்துக்கு சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.
அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் அன்று அதிகாலை 5 மணிமுதல் இந்த வழிபாடு இடம்பெறும். தந்தையை இழந்தவர்கள் அன்றைய தினம் கண்டகி தீர்த்தத்தில் புனித நீரை எடுத்துவந்து சிவலிங்கப் பெருமானுக்கு தங்கள் கைகளால் அர்ச்சித்து பிதிரர் வழிபாட்டை செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ)

## இந்தியக் குடியரசுத் தலைவராக ராம்நாத் கோவிந்த் தெரிவானார்

இந்தியாவின் 14ஆவது குடியரசுத் தலைவராக ராம்நாத் கோவிந்த் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட மீரா குமாரை விட 4 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகள் வித்தி யாசத்தில் வெற்றிபெற்றார்.
இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த பிராணாப் முகர்ஜியின் பதவிக்காலம் முடிவுக்கு வந்ததை அடுத்து குடியரசுத் தலைவருக்கான தேர்தல் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.
வாக்குகள் எண்ணும் பணி நேற்றுக் காலை ஆரம்பித்து நேற்று மதியம் நிறைவடைந்தது. இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாவின் வேட்பாளரான ராம்நாத் கோவிந்த் தன்னை எதிர்த்துப்போட்டியிட்ட மீராகுமாரை வீழ்த்தி இந்தியா வின் குடியரசுத் தலைவரானார்.
ராம்நாத் கோவிந்த் ஒட்டுமொத்த மாகப் பதிவு செய்யப்பட்ட 10 லட்சத்து 69 ஆயிரத்து 358 வாக்குகளில் 7 லட் சத்து 2 ஆயிரத்து 44 வாக்குகளைப் பெற்றார். மீராகுமார் 3 லட்சத்து 67 ஆயிரத்து 314 வாக்குகளைப் பெற்றார். (ம)

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் அழிப்பு

கிளிநொச்சி, ஜூலை 21
கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்ட நிலையம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.
மயில்வாகனபுரம் காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாக நேற்றுமுன்தினம் கிடைத்த தகவலின்படி அங்கு சென்றபோது கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டறியப்பட்டது.
நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரே சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டு அழித்தனர்.
அங்கிருந்த 8 பரல் கோடாவையும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களையும் கைப்பற்றினர். எனினும் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். ஆனாலும் அவர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.
அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று தருமபுரம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-6)



கூட்டாட்சி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மித்து புதிய அரசமைப்புச் சட்ட வரைவை கொண்டு வருவதே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தேவையாக இருந்தது. மகிந்த ஆதரவு அணியின் எதிர்ப்புக் காரணமாக அது முடியாமல் போனது.
இந்த அரசால் முடிந்தால், கூட்டாட்சி அரசமைப்பைக் கொண்டு வந்து நிறைவேற்றிக் காட்டட்டும் பார்க்கலாம் என்றார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவளம் சார் சிகிச்சை வழங்க மருத்துவ நிபுணர் பற்றாக்குறை

## அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 21

வடக்கு மாகாணத்தில் உளவளம்சார்ந்தசிகிச்சைகளை வழங்குவதற்குத் துறை சார்ந்தவர்கள்பற்றாக்குறையாகவுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மூளைமற்றும்நரம்புப்பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான சிகிச்சை முறைகளை வழங்குவதற்கான கொள்கைகள் பற்றிய கலந்துரையாடல் யாழ்ப்பாண நகர விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்தில் உளவளம்சார்ந்த சேவைகளை வழங்கும் நிபுணர்கள் மிக மிகக்குறைவாகவுள்ளனர். துறைசார்ந்த சிறப்பு வைத்திய நிபுணர்கள் 4பேர்மாத்திரமே உள்ளனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உளவளம் சார்ந்த ஒரு வைத்திய நிபுணர்கூட இல்லை. அதே போல உளவள வைத்திய அதிகாரிகள்20பேர்,தாதியர்கள் 20 பேர் மாத்திரமே எமது மாவட்டத்தில் உள்ளனர். அதிலே 11 வைத்திய அதிகாரிகள் யாழ்ப்பாண மாவட்டத்திலே இருக்கின்றார்கள். மருத்துவ, உளவியலாளர் ஒருவர்கூட இல்லை. உளவளத்துணையாளர்கள் ஒருவர்கூட இல்லை. இவர்களை நியமிப்பதற்கான ஆளணி அங்கீகாரமே இல்லை.

தொழில் வழிச் சிகிச்சையாளர் ஒருவர் மாத்திரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளார். பேச்சு முறையிலானசிகிச்சைவழங்குபவர்கள் இல்லை. தற்போது இருவர்நியமிக்கப்பட்டுள்ளனர். உளவியல் சார்ந்த சமூக சேவை உத்தியோகத்தர்களின் இடத்துக்கு 9 பட்டதாரிகளைஒருமாதத்துக்குமுன்னர் நியமித்திருந்தோம். உளவளம் சார்ந்த செயற்பாடுகளைச் செய்யச் சிரமங்களை எதிர் நோக்குகின்றோம்.

இதனைமுன்னெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்.

மூளை மற்றும் நரம்பு தொடர்பான பிரச்சினை அவர்களுக்கு ஏற்பட்டது, போருக்குப் பின்னரா? என்றுமுதலமைச்சர்என்னிடம் வினவினார். இவ்வாறன பிரச்சினைகள் உள்ள பிள்ளைகளை எவ்வாறு அடையாளம் காணலாம் என்றுநாம்ஆராய்ந்துநடவடிக்கைஎடுக்கஆரம்பித்தால் தான்பிள்ளைகள்எவ்வளவு பேர்உள்ளனர்என்றுஅறிய முடியும்.

பிராந்தியசுகாதாரநிலையத்தின்கீழ் இயங்கும் மாதவம் என்னும்நிறுவனத்தில் இவ்வாறான பிள்ளைகள் 84 பேர்உள்ளனர். அவர்களுக்கான சிகிச்சைகள் பயிற்சி முறைகள்என்பனதற்போது வழங்கப்பட்டுவருகின்றன. எமது மாகாணத்தில் உள்ள இவ்வாறான சிறுவர்களை இனங்கண்டு சிகிச்சை அளித்து அவர்களுக்கான பயிற்சிகளைவழங்கநாம்7 கொள்கைகள் அடங்கிய ஆவணத்தை கவனத்தில் கொண்டு இதனை தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளமுன்வரவேண்டும் என்றார். (4-ரி)

# ஊழியர்கள் இடையே போட்டியின்மை ப.நோ.கூ. சங்கங்கள் நஷ்டமடையக் காரணம்

## கூட்டுறவுத் திணைக்களப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 21

பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களில் நஷ்டம் ஏற்படுவதற்குஅவற்றின்ஊழியர்களிடம் போட்டித்தன்மை இல்லாமையே காரணம் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் கே.சிவகரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

வடக்குமாகாணத்தில்இயங்கிக்கொண்டிருக்கும் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் பல நட்டத்தில் இயங்குகின்றன. இதற்கு முக்கிய காரணம் ஊழியர்கள் போட்டித்தன்மையுடன் செயற்படாதநிலையே. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அவதானித்துப் பார்த்தால், அங்குநிர்வாகசபையில்ஒரு தரப்பினரே தொடர்ச்சியாகப் பல வருடங்கள் இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அந்தச் சங்கங்களை நாம் எவ்வாறு முன்னேற்று வது? இதற்கு நடவடிக்கை எடுக்க முயற்சித்தாலும் அதற்கான சட்ட ஏற்பாடுகள் எமக்கு இல்லை. மேலும் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் நாம் விசாரணைகளை மேற்கொண்டாலும் அது பொதுச் சேவைக்குஅனுப்பப்படுகின்றது. அங்கு சிலசந்தர்ப்பங்களில் குற்றமிழைத்தவர்களுக்குத்தண்டனைவிலக்கப்படுகின்றனர். சந்தர்ப்பங்களும் தொடர்கின்றன.

இவ்வாறான தண்டனை விலக்களிப்புக்கள் இடம்பெறும்போது மீண்டும் சங்கங்களில் குற்றம் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் எமது மாகாணத்துக்கு என்று கூட்டுறவு நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.

மாகாண நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டுச் செயற்பட ஆரம்பிக்கும்போது கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். நியதிச் சட்டங்களை உருவாக்கும் போது அவற்றில் பல சட்ட ஏற்பாடுகள் உள்ளடங்கியிருக்கும்.

வடக்குமாகாணக்கூட்டுறவு நியதிச்சட்டம்மாகாணசபையில் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. அவ்வாறு நியதிச்சட்டம் உருவாகும்போது எதிர்காலத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மோசடிகள் இடம்பெறுவது குறையும்அவைவினைத்திறனாகச் செயற்படக்கூடிய வாய்ப்புக்களும்ஏற்படும்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப் பட்டமையே சங்கங்களில் ஊழல், மோசடிகள் உருவாவதற்கு மூல காரணமாக அமைந்தது. நிவாரணப் பொருள்களைசங்கக்கடைகளில்விநியோகம் செய்யும் போது அதில்வருகின்ற இலாபத்தைச் சிலர் வெளியில் காட்டிக்கொள்வதில்லை. அவர்கள் அதனைத் தாமே எடுத்துக் கொள்கின்றநிலையும் காணப்பட்டது. இதன் மூலமாகமோசடிகள்ஆரம்பமாகி அவை சங்கங்கள் இயங்கமுடியாதநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் 47 பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் காணப்படுகின்றன. அவற்றில்15பலநோக்குகூட்டுறவுச் சங்கங்கள் மோசமான நிலையிலும் 2 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்மிகமோசமான நிலையிலும் காணப்படுகின்றன.

இந்த இரண்டு சங்கங்களில் ஒரு ஊழியர் மட்டுமே பணியாற்றி வருகின்றார். சங்கங்களில் கர்ப்பிணித் தாய்மாருக்கென உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன.

தற்போதுபலநோக்குகூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கினாலும் வடக்கு மாகாணத்தில் இயங்கும் கூட்டுறவு நகர் கடைகளில் அதிக விற்பனை இடம்பெறுகின்றது - என்றார். (4-8)

# நிறை குறைவைச் சுட்டிக்காட்டிய முதியவரைத் தாக்கினார் வியாபாரி

## ரூ.20 ஆயிரம் இழப்பீடு செலுத்த நீதிமன்று உத்தரவு

சாவகச்சேரி, ஜூலை 21

நிறைகுறைவாக உருளைக்கிழங்கு விற்பனை செய்ததைச் சுட்டிக்காட்டிய முதியவரைத் தாக்கிய சந்தை வியாபாரிக்கு சாவகச்சேரி நீதிமன்று 20 ஆயிரம் இழப்பீடு வழங்குமாறு நேற்று உத்தரவிட்டது.

கொடிகாமம் சந்தையில் உருளைக்கிழங்கு வாங்கிய முதியவர் அதனைத் தராசில் நிறுத்தபோது நிறை குறைவாகக் காணப்பட்டது. மேலதிகமாக ஒரு கிழங்கு போடுமாறு குறித்த முதியவர் சந்தை வியாபாரிக்கு கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த வியாபாரி முதியவரைத்தாக்கிக் காயப்படுத்தியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

தாக்கப்பட்ட முதியவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபின்னர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தை வியாபாரி குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அதனையடுத்து முதியவருக்கு 20 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-9)

# ஆலயங்களின்பராமரிப்பிலுள்ளகாணிகளை காணியற்றவர்களுக்குவழங்கவேண்டும்

## அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோருகிறார் சுதந்திரக் கட்சியின் இணைப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணமாவட்டத்தில்பல்வேறுஆலயங்களின் பெயரில் மூதாதையர்களால் எழுதப்பட்ட காணிகளை வீடற்றவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க யாழ்ப்பாண மாவட்டச் செயலரும் பிரதேச செயலாளர்களும் முன்வர வேண்டும். அரசினால் குறித்தகாலத்துக்கு வழங்கப்படும்வறியவர்கள்ஏழைகளுக்கான வீட்டுத்திட்டம் இதன் மூலமாக முழுமை பெறும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட சிறிலங்கா சுதந்திரகட்சியின்அமைப்பாளர்க.கருணாகரன் தெரிவித்தார்.

காணி சம்பந்தமான சிறப்பு இணக்க சபை உறுப்பினர்களுக்கும்பிரதேசசெயலாளர்கள் மற்றும்அதிகாரிகளுக்குமான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

அதில்கலந்துகொண்டபின்னர்அவர்மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாண நகரிலுள்ள பிரபல ஆலயம் ஒன்றில் இதனை விடப் பல ஆதனங்கள் ஆலயத்தின் பெயரில் உள்ளன.

பலஆண்டுகளாகமக்கள்கொட்டில்வீடு, அரை நிரந்தர வீடு, தூண் எழுப்பிய வீடு எனப் பல்வேறு வடிவங்களில் வீடமைத்துள்ளனர்.

இவ்வாறுவீடமைத்தவர்கள்நிரந்தரஅரசவீட்டுத்திட்டத்துக்குநிரந்தரக்காணிஉறுதியின்றி அல்லல்படுகின்றனர்.

எனவே மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலாளர்கள் [illegible] மேலாகக் கோயில் ஆதனங்களில் இருந்தவர்களுக்கு நிரந்தரக் காணிஉறுதிகளைப்பெற்றுவழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆலயங்களின்காணிகளுக்குஉரிமையாளர் என்று எவருமில்லை. சிலர் ஆலய உரிமையாளர்என்றுகூறிபற்றுச்சீட்டுவழங்கிப்பணம் பெறுகின்றனர். சிலர் பற்றுச் சீட்டு எதுவும் வழங்காமல்மாதாந்தம்கோயில்ஆதனத்தில் இருப்பவர்களிடமிருந்து பணம் அறவிடுகின்றனர்.

எனவே முறைப்படி ஆவணங்கள் இல்லாத சகல ஆலய ஆதனங்களையும் கையகப்படுத்தி அவற்றை வீடற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனைவிடத்தற்போது காணிசம்பந்தமான சிறப்பு இணக்கசபை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கோயில் ஆதனங்களில் உள்ள சகலருக்கும் நிவாரணம் கிடைத்து வீட்டுத்திட்டம் கிடைக்க வேண்டும். சில ஆலய உரிமையாளர்கள் ஆலயம்சம்பந்தமானமூலஉறுதிஇல்லாமல் ஐந்து வருட பாவனைக்கு உறுதி எழுதிக் கொடுத்து மக்களை ஏமாற்றி பணம் உழைக்கின்றனர். எனவே காணி அமைச்சு, நீதி அமைச்சு, மத்தியஸ்த சபை ஆணைக்குழு, காணி சம்பந்தமான சிறப்பு இணக்கசபை, மாவட்டச்செயலர், பிரதேசசெயலர்ஆகியோர் கூடிய கவனம் எடுத்து ஆலய உரிமையாளர்களிடமிருந்து வீடற்ற, காணியற்ற மக்களுக்கு, ஏழைகளுக்கு காணிசம்பந்தமான சிறப்பு இணக்க சபையூடாக உறுதி வழங்கிப் பேண்தகு நிலையை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (4-50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கேள்வி அறிவித்தல் நல்லூர் பிரதேச சபை

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றது.
02. தேசியபோட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதி 04/ 2016 (i) ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின்படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.
03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்குப் பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுமேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை ( Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700 –021-300-2508) இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர், பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை,14/5கருவப்புலம் வீதிகொக்குவில்** என்னும் இடத்திலிருந்து 2017.07.21 ஆம் திகதியிலிருந்து.2017.08.10 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதிகொக்குவில்** என்னும் முகவரிக்கு 2017.08.11 ஆம் திகதி மு.ப10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. அட்டவணைI இன் முதல் 05 வேலைகளுக்கும் அட்டவணைII இற்கான வேலைக்கும் அட்டவணைIII இன் 3ஆவது வேலைகளுக்குமான கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63நாள்களும். ஏனைய வேலைகளுக்கான கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 நாள்களும் ஆகும்.
09. கேள்வி பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

I. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி (*PSDG* -2017,கட்டம் - *II* தொடர்ச்சி .. )

| இல | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (*Vat*நீங்கலாக) | மீளளிக்கப்படாதகேள்விப் பத்திரக் கட்டணம் (*VAT,NBT* நீங்கலாக) | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | காரைக்கால் இந்துமயான உள்ளகவீதி,நீர்வசதி மற்றும் எரிகொட்டகை வசதிகள் புனரமைப்பு | 2.11 | 2,000.00 | C8 | 22,000.00 | 02மாதம் |
| 02. | அம்மன் வீதிகுறுக்குவாய்க்கால் புனரமைப்பு-கொக்குவில் | 2.97 | 2,000.00 | C8 | 30,000.00 | 02மாதம் |
| 03. | திருநெல்வேலி இந்துமயான உள்ளகவீதி, நீர்வசதி மற்றும் மடம் அமைத்தல். | 2.28 | 2,000.00 | C8 | 23,000.00 | 02மாதம் |
| 04. | மணியந்தோட்டம் 4ஆம்,5ஆம்,6ஆம்,7ஆம்,10ஆம் குறுக்குவீதிகள் மற்றும் 1ஆம், 9ஆம் இணைப்புவீதி புனரமைப்பு. | 4.48 | 2,000.00 | C8 | 45,000.00 | 02மாதம் |
| 05. | கோண்டாவில் இறைச்சிக்கடைபுனரமைப்பு | 2.21 | 2,000.00 | C8 | 23,000.00 | 02மாதம் |
| 06. | நல்லூர் பிரதேச சபை வாகனதரிப்பிடம் அமைத்தல் | 2.28 | 2,000.00 | C8 | 23,000.00 | 02மாதம் |
| 07. | பலாலி வீதி குறுக்கு ஒழுங்கை 391/1-14 ,கோண்டாவில் | 2.03 | 2,000.00 | C8 | 21,000.00 | 02மாதம் |
| 08. | ஆடியபாதம் வீதிவாய்க்கால் புனரமைப்பு- கொக்குவில் | 0.85 | 2,000.00 | C9 | 9,000.00 | 02மாதம் |
| 09. | கலைவாணி சனசமூகநிலைய வெள்ளவாய்க்கால் புனரமைப்பு- கொக்குவில் | 1.96 | 2,000.00 | C9 | 20,000.00 | 02மாதம் |
| 10. | சைவப் பாடசாலை வீதி புனரமைப்பு மற்றும் திருநெல்வேலிச்சந்தை நடை பாதைக்கான கல்லுப்பதித்தல் | 1.98 | 2,000.00 | C9 | 20,000.00 | 02மாதம் |
| 11. | பெரியதோட்டம் குறுக்குவீதிபுனரமைப்பு,கட்டம் III அரியாலை- | 4.4 | 2,000.00 | C9 | 44,000.00 | 02மாதம் |
| 12. | புகையிரதநிலையவீதிபுனரமைப்பு. கொக்குவில் | 3.35 | 2,000.00 | C9 | 34,000.00 | 02மாதம் |
| 13. | காளிகோவில் பின்வீதிபுனரமைப்பு- கோண்டாவில் | 1.49 | 2,000.00 | C9 | 15,000.00 | 02மாதம் |
| 14. | அம்மன் குறுக்குவீதி புனரமைப்பு கொக்குவில் | 0.4 | 2,000.00 | C9 | 4,500.00 | 02மாதம் |
| 15. | கொட்டைக்காடு இந்துமயான உள்ளகவீதி, மற்றும் மடம் புனரமைப்பு. | 1.61 | 2,000.00 | C9 | 17,000.00 | 02மாதம் |

**மீள் கேள்விகோரல்**

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதிக்கான மற்றும் சபை நிதிவேலைகளுக்கான மீள் கேள்விகள் மேற்குறித்த நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றது. மேலும் பந்தி 2 இல் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணைII,III இல் குறிப்பிடப்பட்டவாறானதரங்களில் கேள்வி சமர்ப்பிக்கப்படாதவிடத்து அதனிலும் கூடியதரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படும்.

II. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதிக்கான மீள்கேள்விகோரல்.

| இல | வேலைவிவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vatநீங்கலாக) | மீளளிக்கப்படாதகேள்விப் பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | நாகதம்பிரான் வீதி புனரமைப்பு, அரியாலை கிழக்கு. | 2.01 | 2,000.00 | C8 | 20,150.00 | 02மாதம் |

III. சபை நிதி வேலைகளுக்கான மீள் கேள்விகோரல்.

| இல | வேலைவிவரம் | அண்ணளவானமதிப்பீட்டுத் தொகை (மில்லியன்)(Vat நீங்கலாக) | மீளளிக்கப்படாதகேள்விப் பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | கலட்டி 2ஆம்வீதி 2ஆம் குறுக்கு ஒழுங்கை கோண்டாவில் | 0.32 | 2,000.00 | C9 | 3,200.00 | 02மாதம் |
| 02. | கோண்டாவில் மேற்கு விக்கினேஸ்வரா வீதி | 1.03 | 2,000.00 | C9 | 10,500.00 | 02மாதம் |
| 03. | நவரட்ணராஜா வீதிமற்றும் 1ஆம், 2ஆம் குறுக்கு ஒழுங்கைகள். கோண்டாவில் | 4.03 | 2,000.00 | C8 | 40,500.00 | 02மாதம் |

01. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2017.08.02ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**
**2017.07.21**

# வடக்கு கல்வித்துறைக்கு பிக்கப் வாகனங்கள் வேண்டும்

*மாகாணக் கல்விச் செயலர் தெரிவிப்பு*

வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களுக்கு இன்னமும் பிக்கப் வாகனங்களின் தேவை உள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களுக்கு அவர்களின் தேவையின் நிமித்தம் சிறப்புச் செயற்றிட்ட நிதியாக 40 மில்லியன் ரூபாவில் கடந்த வாரம் பிக்கப் வாகனங்களை வழங்கியிருந்தோம்.

எனினும் வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களுக்கு இன்னமும் பிக்கப் வாகனங்கள் தேவையாகவுள்ளன. மன்னார் கல்வி வலயம், வவுனியா தெற்கு கல்வி வலயம், மடு கல்வி கல்வி வலயம் ஆகியவற்றுக்கு இன்னமும் பிக்கப் வாகனங்கள் தேவையாகவுள்ளன. எதிர்காலங்களில் நடைமுறைப் படுத்தப்படும் சிறப்புச் செயற்றிட்டங்களுக்கு நிதி கிடைக்கும் பொழுது வாகனங்கள் தேவைப்படும் வலயங்களுக்குப் பிக்கப் வாகனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (4-ரி)

# கோடா வைத்திருந்தவருக்கு ரூபா 25 ஆயிரம் தண்டம்

கிளிநொச்சி ஊரியான் பகுதியில் 24 போத்தல்கள் கோடாவை வைத்திருந்தவருக்கு ரூபா 25 ஆயிரம் தண்டம் விதித்து கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டது. குற்றவாளி ஒரு மாத சிறைத்தண்டனையையும் அனுபவிக்க வேண்டும் என்று மன்று கட்டளையிட்டது. கிளிநொச்சி ஊரியான் பகுதியில் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதே குற்றத்துக்காக முன்னர் 2 தடவைகள் நீதி மன்றால் தண்டிக்கப்பட்டார் என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (4-6)

**கோழிக்கூடுகள் விற்பனைக்கு**
8 அடிநீளமுள்ள இரண்டு
கோழிக்கூடுகள் விற்பனைக்குண்டு.
**0772453673**

**JCB, பக்கோ இயந்திரங்கள் விற்பனைக்கு**
JCB 3CX, 3DX, பக்கோ 200, 1Q ரிப்பர், வடி, இத்தாலி பட்டறை, ஜெனரேட்டர் 35KW England, தொழிற்சாலை உபகரணங்கள் விற்பனைக்கு.
**தொடர்பு.0776001701**

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி இரத்தினம்



யாழ். வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி இரத்தினம் (20.07.2017) வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் (முன்னாள் கணக்காளர்) அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் ( இளைப்பாறிய ஆசிரியர்) - சின்னத்தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மங்கையர்க்கரசி (கொழும்பு) காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னம்மா மற்றும் இராசையா (முன்னாள் உரிமையாளர், மலாயன் கபே யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பரமேஸ்வரி (லண்டன்) காலஞ்சென்றவர்களான செல்லையா (இளைப்பாறிய அதிபர், முன்னாள் கிராம சபை தலைவர், வேலணை), குமாரரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேலணை சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**முதலாம் வட்டாரம்,** **மங்கையர்க்கரசி மனோகரன் ( 077 789 3276),**
**வேலணை கிழக்கு.** **அருள்தாஸ் வரதலட்சுமி ( 071 208 7175),**
**வேலணை.** **லோகநாயகம் ( லண்டன்)**

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா இராஜேஸ்வர சர்மா

நுணாவில் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கற்குழி சாவகச்சேரியை வதிவிடமாகவும் தற்போது திருகோணமலையில் வசித்தவருமாகிய திருமதி யோகம்மா இராஜேஸ்வர சர்மா கடந்த (19 .07.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வர சர்மாவின் அன்பு மனைவியும் பொன்னுத்துரை ஐயர் தம்பதியினரின் அன்பு மகளும் சதாசிவ ஐயர் பாக்கியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தேவபாலசர்மா ,சிவபால சர்மா, சச்சிதானந்தக்குருக்கள் ,ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.07.2017) வியாழக்கிழமை 14 ஆம் ஒழுங்கை முருகன் கோயிலடி லிங்க நகர் திருகோணமலையில் நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**கற்குழி,சாவகச்சேரி.** **தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளில்லா வானூர்தியை தயாரித்தது சீனா

பிஜிங், ஜூலை 21
அமெரிக்காவுக்குப் போட்டியாக ஆளில்லா போர் வானூர்தியை அதிகம் உற்பத்தி செய்வதற்கு சீனா முனைப்புக் காட்டுகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவிடம் உள்ள ஆளில்லா வானூர்திகள் தரையிலிருந்து 15 கிலோமீற்றர் உயரம் வரை பறக்கக்கூடியவை.
ஆனால் சீனா தயாரிக்கவுள்ள வானூர்திகள் 9 கிலோமீற்றர் உயரம் வரைமட்டுமே செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்கா ஒரு வானூர்தியைத் தயாரிக்க செலவிடும் தொகையில் பாதியளவைச் செலவிட்டு சீனா தனது வானூர்தியை உற்பத்தி செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)





# ரக்காவில் குண்டுமழை 30 அப்பாவிகள் சாவு

டமஸ்கஸ், ஜூலை 21
சிரியாவின் ரக்கா நகரில் பதுங்கியுள்ள ஐ.எஸ். ஆயுததாரிகளை குறிவைத்து அரச படைகள் நடத்திய வான் தாக்குதலில் சிக்கி 30 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்டு சிரியாவில் செயற்படும் போர் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கைப்பற்றப்பட்டது. இதையடுத்து சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைத்தோற்கடிப்பதில்உலகநாடுகள் கடும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. சிரியாவின் ரக்கா நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். தற்போதுஆழமாகவேரூன்றியுள்ளது. அந்த நகரில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் சுமார் 30 பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் 15 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# நைஜீரியச் சிறுமிகளை சந்தித்தார் மலாலா

அபுஜா, ஜூலை 21
நைஜீரியாவில் போகோ ஹரம் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட மாணவிகளை நோபல் பரிசு பெற்ற மலாலா நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.
மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் 2014ஆம் ஆண்டு கடத்தப்பட்ட இந்த மாணவிகள் மூன்று வருடத்தின் பின்னர் இந்த வருடம் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் கடத்தப்பட்டபோது தனது கண்டனத்தைப் பதிவுசெய்திருந்த மலாலா நேற்றுமுன்தினம் குறித்த மாணவிகளைச் சந்தித்தார்.
“நைஜீரியாவிற்கு வந்திருப்பது பெண்களின் சக்தியை அதிகரிப்பதற்காக உலகளவில்நான் மேற்கொண்ட பயணத்தின் ஒரு பகுதியாகும். இங்குள்ள இளம் பெண்களிடம் உரையாற்றுவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இவர்கள் பல ஆண்டுகளாக தீவிரவாதிகளின் பிடியில் இருந்தார்கள். தற்போது அவர்கள் குடும்பத்துடன் இல்லாதிருப்பது வருத்தமளிக்கிறது. விரைவில் அவர்கள் குடும்பத்துடன் சேர்வார்கள் என நம்புகிறேன்'' என்று மலாலா தெரிவித்தார். (ம)

# ஆயுததாரிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு

## அமெரிக்கா அறிக்கை

ஆயுததாரிகளுக்கு புகலிடம் அளிக்கும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானைச் சேர்த்துள்ளது அமெரிக்கா.
ஆயுததாரிகளுக்கு புகலிடம் அளிக்கும் நாடுகள் பட்டியலில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சோமாலியா, ஈரான், லிபியா உள்ளிட்ட நாடுகள் உள்ளன என்று அமெரிக்கா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.
லக்சர் இ தொய்பா, ஜெயிஷ் இ முகமது போன்ற தீவிரவாத அமைப்புகள் பாகிஸ்தானில் இருந்துதான் செயல்படுகின்றன. இந்த அமைப்பைச் சேர்ந்த ஆயுததாரிகள் இந்தியாவை இலக்கு வைத்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



# சிக்கிம் எல்லையில் சீனா போர்ப் பயிற்சி

இந்தியா, சீனா இடையே எல்லையில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், சீன இராணுவம் போர் பயிற்சியில் ஈடுபட்டது என்ற தகவல் வெளியாகி உள்ளது.
இந்தியா, பூட்டான், சீனா ஆகிய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடம் சிக்கிம் மாநில எல்லையில் உள்ளது. அங்கு டோக்லாம் என்ற பகுதியில்சீனாசாலைஅமைக்கும் பணியில் ஈடுபட்டது. அதை இந்தியாவும், பூட்டானும் கடுமையாக எதிர்த்தன. சிக்கிம் எல்லையில் இந்தியா தனது சிப்பாய்களைக் குவித்துள்ளது. சீனாவும் தனது சிப்பாய்களைக் குவித்துள்ளது.
இவ்வாறு பதற்றநிலை உள்ள பின்னணியில் குறித்த பகுதியில் சீனா நேற்றுமுன்தினம் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# ட்ரம்புக்கு எதிர்ப்பலை



வொஷிங்டன், ஜூலை 20
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடின் இருவரும் ஜி-20 மாநாட்டில் வைத்து இரகசியமாகவும் சந்தித்தனர் என்று வெள்ளை மாளிகை ஏற்றுக்கொண்டதை அடுத்து ட்ரம்புக்கு எதிர்ப்பலைஅதிகரித்துள்ளது.
ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரில் அண்மையில் இந்த மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் இறுதி நாளில் ட்ரம்ப் - புடின் இருவரும் உத்தியோகபூர்வமாகச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பே இவர்கள் இருவருக்கும் இடையிலான முதல் சந்திப்பாக கருதப்படும் நிலையில் அவர்கள் ஏற்கனவே சந்தித்த தகவல் தற்போது வெளிவந்துள்ளது. மாநாட்டின் இறுதி நாளின் பின்னர் நடைபெற்ற விருந்திலும் இவர்கள் சந்தித்தனர் என்று சொல்லப்படுகிறது.
ட்ரம்ப் அமெரிக்க அதிபரானமைக்கு ரஷ்யா முக்கிய காரணம். ரஷ்யாவுடன் ட்ரம்புக்கு மறைமுக நட்புறவுண்டு என்று அமெரிக்க மற்றும் பன்னாட்டு ஊடகங்கள் தொடர்ந்து குற்றம்சாட்டி வரும் நிலையில் இந்த ட்ரம்புக்கு மேலும் பின்னடைவைக் கொடுத்துள்ளது. (ம)

# இந்தியா - சீனா பதற்றம் அமெரிக்கா கவலை

இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் மிகுந்த கவலையைத் தருகிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. இரு நாடுகளும் பேச்சின் மூலம் தீர்வைக் காண வேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியது.
சிக்கிம் விவகாரம் பரபரப்பின் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் அமெரிக்கா இந்த விவகாரத்தில் தலையிட்டுள்ளது. அமெரிக்காவின் உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளரான நாவேர்த் இந்த முறுகல் நிலைமை தொடர்பில் நேற்று முன்தினம் சில கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.
“இந்தியா - சீனா இடையே நிலவும் பதற்றமான சூழ்நிலை அமெரிக்காவிற்கு கவலையை ஏற்படுத்தி உள்ளது. இருதரப்பு மீதும் நாங்கள் நம்பிக்கையை வைத்துள்ளோம், அமைதிக்காக இருதரப்பும் சிறந்த ஒப்பந் தத்துக்கு வரவேண்டும், அதற்கு இருதரப்பும் பணி யாற்ற வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம)

# பிலாரே மறைவு

காந்தியவாதியான பிலாரே தனது 98ஆவது வயதில் நேற்றுமுன்தினம் மறைந்தார். இந்தியாவின் தேசத்தந்தையான மகாத்மா காந்திக்கு மிகவும் நெருக்கமானவராக பிலாரே இருந்தார். 1944ஆம் ஆண்டு காந்தியை கோட்சே கொல்ல முயன்ற போது காந்தியைப் பிலாரே காப்பாற்றினார் என்று சொல்லப்படுகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாருக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் தளர்த்தப்பட்டன



கட்டாருக்கு விதித்திருந்த 13 நிபந்தனைகளில் 6 நிபந்தனைகள் கைவிடப்பட்டுள்ளன என்று அரபு நாடுகள் அறிவித்தன.

கட்டார், ஈரானில் உள்ள ஆயுதக் குழுக்களுக்கு நிதி உதவி செய்கிறது என்று தெரிவித்து அந்த நாட்டின் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன அரபு நாடுகள். அரபு நாடுகளில் ஒன்றான கட்டாருக்கும் அதையொட்டியுள்ள சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பக்ரைன், எகிப்து ஆகிய நாடுகளுக்கும் இடையே மோதல்போக்கு நிலவி வருகிறது. கட்டார் நாட்டுக்கு ஈரான் மற்றும் துருக்கி ஆகியன ஆதரவாக செயல்பட்டு வருகின்றன.

வளைகுடா நாடுகள் விதித்த பொருளாதாரத் தடையால் கட்டார் தனிமைப்படுத்தப்பட்டது. கட்டாருடன் மீண்டும் நட்புறவைப் பேணவேண்டுமாயின் அது தமது நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும் என்று தெரிவித்து 13 நிபந்தனைகளை விதித்தன அரபு நாடுகள்.

இந்த நிபந்தனைகள் சாத்தியமற்றவை என்று கட்டார் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் அவற்றில் 6 நிபந்தனைகளை வளைகுடா நாடுகள் கைவிட்டுள்ளன என்று தகவல் வந்துள்ளது. எனினும் எந்தத் தடைகளைக் கைவிட்டன என்று முழுமையான தகவல் எதுவும் வரவில்லை. (ம)

# காங்கிரஸ் தலைவராக விரைவில் ராகுல்



புதுடெல்லி, ஜூலை 20

காங்கிரஸ் கட்சிக்கு அடுத்த மாதம் முதல் உள்கட்சி தேர்தல் நடைபெற உள்ளதால், செப்ரெம்பரில் ராகுல் காந்தி காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்பார் என்று தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியில் சோனியா தலைவராகவும், அவரது மகன் ராகுல் துணைத் தலைவராகவும் இருக்கிறார்கள். சோனியாவுக்கு கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவு நீடிப்பதால் காங்கிரஸ் தலைவர் பொறுப்பை ராகுல் ஏற்பார் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் ராகுலை தலைவராக தெரிவு செய்ய காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் பலர் அதிருப்தி தெரிவித்தனர். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை ராகுலை முன்நிறுத்தி எதிர்கொண்டால் காங்கிரசுக்கு தோல்விதான் ஏற்படும் என்று அவர்கள் விமர்சனம் செய்தனர்.

ராகுல்காந்தி மேற்கொள்ளும் பரப்புரைகள் எடுபடாத காரணத்தாலும் அவர் தீவிர அரசியலுக்குச் சரிப்பட்டு வரமாட்டார் என்றும் கூறப்பட்டது. ராகுலுக்கு பதில் அவரது சகோதரி பிரியங்கா வந்தால் பா.ஜ.க.வுக்கு சவால் அளிக்க முடியும் என்றும் கருத்துக்கள் வெளியாகின.

இதற்கிடையே ராகுலின் செயல்பாடுகள் தங்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்று திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி, பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி ஆகியோரும் கூறி இருந்தனர். சோனியாவிடம் பேசுவது போல ராகுலிடம் பேச இயலவில்லை என்று அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

எனவே ராகுல் காங்கிரஸ் தலைவராவது தள்ளிப்போகும் என்று சமீபத்தில் ஒரு தகவல் வெளியானது. ஆனால் சோனியாவின் உடல்நிலையை கருத்தில் கொண்டு தலைவர் பதவியை விரைவில் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ராகுலுக்கு ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு அடுத்த மாதம் முதல் உள்கட்சி தேர்தல் நடைபெற உள்ளது. அப்போது ராகுலை ஏகமனதாக தலைவர் பதவிக்கு தேர்வு செய்வார்கள் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அதேநேரம் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பதவியை சோனியா தன்வசம் வைத்திருப்பார் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)



## 6 நாடுகள் மீதான தடை

# நிபந்தனையுடன் நடைமுறைக்கு

வொஷிங்டன், ஜூலை 21

ஆறு இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு ட்ரம்ப் விதித்த தடைகளை ஏகப்பட்ட நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டது அந்தநாட்டின் உச்ச நீதிமன்றம்.

அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய 6 நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடைவிதித்து உத்தரவு பிறப்பித்தார் ட்ரம்ப். ஆனால் இந்த முடிவு முட்டாள்தனமானது என்று தெரிவித்த அமெரிக்காவின் மாகாண நீதிமன்றங்கள் அதை இல்லாது செய்தன. தனது உத்தரவு நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அவசியமானது என்று தெரிவித்த ட்ரம்ப் நீதிமன்றங்களின் தடையை எதிர்த்து மேன்முறையிடு செய்தார்.

வழக்கை விசாரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம் ஏகப்பட்ட நிபந்தனைகள் மற்றும் மாற்றங்களுடன் ட்ரம்பின் முடிவை, அதாவது மேற்குறிப்பிட்ட ஆறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதித்து தீர்ப்பிட்டது.

ட்ரம்ப் தனது உத்தரவில் ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய 6 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய வேண்டுமாயின் அவர்களின் தாய், தந்தை, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், வருங்கால கணவன் அல்லது மனைவி ஆகியோர் அமெரிக்காவுக்குள் வசித்தால் மட்டுமே சாத்தியம் என்று தெரிவித்தார். மேலும் தாத்தாபாட்டி உள்ளிட்ட ஏனைய உறவினர்கள் எவரும் அமெரிக்காவுக்குள் நுழைய முடியாது எனவும் அந்த தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் தாத்தா, பாட்டி மற்றும் ஏனைய உறவினர்களும் அமெரிக்கா வரலாம். தாத்தா, பாட்டியை தூரத்து உறவாகக் குறிப்பிட்டது முட்டாள்த்தனம் என்றும் எனவும் குறிப்பிட்ட நீதிபதி அதில் மாற்றத்தைச் செய்து ட்ரம்பின் உத்தரவை நடைமுறைப்படுத்தினார். (ம)

## காஷ்மீரில் வெள்ளம்



புதுடெல்லி, ஜூலை 21

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஜம்மு - காஷ்மீர் மாநிலம் டோகா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக டோகா மாவட்டத்தின் தாத்ரி நகரின் பல இடங்களில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. வீடுகள் மற்றும் கடைகள் வெள்ளத்தில் சேதமடைந்தன. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் பல முக்கிய நெடுஞ்சாலைகள் முடங்கியுள்ளன. மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (ம)



மெக்சிக்கோவின் மைய மிருகக் காட்சிச் சாலையில் பிறந்து இரண்டு மாதங்களேயான பெயரிடப்படாத யானைக்[illegible] நட்பைப் பாராட்டுகின்றன. அது தொடர்பான ஒளிப்படங்கள் [illegible] வெளியிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் ஊடாக அளவுக்கதிகமான அதிகாரம்

## இப்படிச் சொல்கிறார் ஊவா முதலமைச்சர்

கொழும்பு, ஜூலை 21
13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அளவுக்கு அதிகமானவை என்று ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசாநாயக தெரிவித்துள்ளார்.

பதுளையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.


அவர்மேலும்தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர்.ஜயவர்தன இந்தியாவுடன் இணைந்து 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கிய அதிகாரங்கள் அதிகமாகும். அந்த அதிகாரங்கள் அனைத்தும் நடைமுறையில் இல்லை.

இந்த நிலையில்தான் புதிய அரசமைப்பின் ஊடாக அதிக அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் நாடு இரண்டாகப் பிரிக்கப்படவுள்ளது என்றும் வதந்திகள் பரப்பப்படுகின்றன. எதுவும் உண்மை இல்லை. அரசமைப்பு தயாரிக்கப்பட்டு சட்ட வரைவாக வெளிவரும் வரை இதுதொடர்பில் வெளிவரும் எந்தவொரு செய்தியையும் நம்பவேண்டாம் என்று மக்களிடம் கேட்கின்றோம்.

நாட்டுக்கு ஆபத்தான அரசமைப்பாக அது நிச்சயம் இருக்காது. அப்படி இருந்தால் நாங்களே அதை எதிர்ப்போம். இந்தப் பதவிகளைத் தூக்கி வீசிவிடுவோம். ஆனால், வருவதற்கு முன் அதைப் பற்றி எம்மால் எதுவும் கூற முடியாது.

ஆனால், நாட்டு மக்களைக் குழப்ப நினைக்கும் சிலர் வாய்க்கு வந்தபடி அரசமைப்பைவிமர்சிக்கின்றனர். அதில் என்ன இருக்கின்றது என்று தெரியாமல் எப்படி அதை விமர்சிக்கமுடியும் என்று மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியல் செய்வதற்கு எதுவும் இல்லாததால் இவ்வாறு கூறித் திரிகின்றனர். இவ்வாறானவர்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். என்றார். (கு-3)




## இ.போ.ச. பேருந்தின் மீது காரில் வந்தோர் தாக்குதல்

### அதன் சாரதி படுகாயம்

கொழும்பு, ஜூலை 21
மட்டக்களப்பு குருக்கள்மடம் பகுதியில் கடந்த செவ்வாய் இரவு இரவு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்த நிலையில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான திருகோணமலையில் இருந்து கல்முனை வரையில் சேவையில் ஈடுபடும் பேருந்து மீது குருக்கள்மடம் பகுதியில் வைத்து கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்வீச்சுத் தாக்குதலின் போது பேருந்துக் கண்ணாடிகள் உடைந்து சேதமாகியுள்ளதுடன் சாரதி படுகாயமடைந்தார்.

சிவப்பு நிறக் கார் ஒன்றில் வந்த நபர்களே தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றிருக்கின்றனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழ்மை காலை திருகோணமலை மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து சிலர் குறித்த சாரதி மற்றும் நடத்துநருடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவப்புநிறக் காரில் வந்த நபர்கள் மற்றும் திருகோணமலை மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து தகராறில் ஈடுபட்ட நபர்கள் குறித்து பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (த-ய)

## அமெரிக்கச் சட்டத்தினால் தமிழ் அதிகளுக்கு பாதிப்பு

கொழும்பு, ஜூலை 21
நவுறு மற்றும் மனுஸ் தீவுகளில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள், அமெரிக்காவின் தீவிரவாதச் சட்டத்தால் அமெரிக்காவில் குடியேறும் வாய்ப்பு நிராகரிக்கப்படலாம் என்று ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்குப் படகுகள் மூலம் அகதிகளாகச் சென்றவர்களில், அடைக்கலம் பெறுவதற்குத் தகுதி பெற்ற ஒரு தொகுதியினரை நவுறு மற்றும் மனுஸ் தீவுகளில் உள்ள கடல் கடந்த முகாம்களில் ஆஸ்திரேலியா, தங்க வைத்துள்ளது. இவர்களை மூன்றாவது நாடு ஒன்றில் குடியேற்றுவதற்கான முயற்சிகளிலும் ஆஸ்திரேலியா ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய, இந்த முகாம்களில் உள்ள 1250 அகதிகளை தமது நாட்டில் குடியேற்றுவதற்கு அமெரிக்கா இணங்கியிருந்தது.

எனினும், நவ்று மற்றும் மனுஸ் தீவு முகாம்களில் உள்ள 240 இலங்கைத் தமிழ் அகதிகளில், பெரும்பாலானவர்கள், அமெரிக்காவில் குடியேறும் வாய்ப்பை இழக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செப்ரெம்பர் 11 தீவிரவாதத் தாக்குதலை அடுத்து அமெரிக்காவில் கொண்டு வரப்பட்ட தேசப்பற்றுச் சட்டத்தினாலேயே இலங்கைத் தமிழ் அகதிகள் அமெரிக்காவில் குடியேறுவதற்கான தகுதியை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் பெரும்பாலான தமிழ்ப் பிரதேசங்கள் இருந்தன. இதனால், அங்கு வாழ்ந்தவர்கள், புலிகளுக்கு உதவியளித்தவர்கள் என்ற வரையறைக்குள் உள்ளடங்கக் கூடிய நிலையுள்ளது. குடியேற்றக் கொள்கை தொடர்பான வொசிங்ரன் நிறுவனத்தின் இணை நிறுவுநரான, கத்தே நியூலன்ட் இது குறித்து தெரிவிக்கையில், இந்த பொருள் ஆதரவு என்ற விடயம் மிகவும் பரந்துபட்ட ஒன்று என விபரித்தார்.

பணம், உணவு, இருப்பிடம், பயிற்சி, மற்றும் எல்லா வகையான உதவிகளும் இதில் உள்ளடக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)



இலங்கை வந்துள்ள சிங்கப்பூர் அயலுறவு அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் நேற்று முன் தினம் அலரி மாளிகையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார். நாட்டின் நல்லிணக்க முயற்சிகள் மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து இதன்போது பேசப்பட்டுள்ளது. (த)

## திருமலைக் காட்டில் ஆண் சிசுவின் சடலம்

திருகோணமலை, ஜூலை 21
திருகோணமலை - அரியமான்கேணி காட்டுப் பகுதியில், உருக்குலைந்த நிலையில் ஆண் சிசுவொன்றின் சடலமொன்று, மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை ஆடு மேய்த்துக்கொண்டிருந்த நபரொருவர், சிசுவின் சடலமொன்று இருப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து, சடலம் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சேருநுவர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## சு.க 66ஆவது ஆண்டு விழாவுக்கு மகிந்தவுக்குச் சிறப்பு அழைப்பு

கொழும்பு, ஜூலை 21
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்குமாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு சிறப்பு அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி சுதந்திரக் கட்சியின் 66ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு நடைபெறவுள்ளது. கொழும்பு கெம்பல் மைதானத்தில் இந்த நிகழ்வு நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு முன்னாள் அரச தலைவர்களான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோருக்குச் சிறப்பு அழைப்பிதழ்கள் அனுப்பி வைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ய)

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெற்றதே மாபெரும் வெற்றி

## மகிந்த அணியின் விமர்சனத்துக்கு தலைமை அமைச்சர் ரணில் பதிலடி

கொழும்பு, ஜூலை 21
தேசிய அரசு இரண்டு வருடங்களில் செய்தது என்னவென்று சிலர் (மகிந்த அணியினர்) கேட்கின்றனர். 500 மில்லியன் மக்களை உள்ளடக்கிய உலகின் பணக்காரச் சந்தையில் பிரவேசிப்பதற்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொண்டதே மாபெரும் வெற்றியாகும்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இலங்கையின் பொருளாதாரத்தை சக்திவாய்ந்ததாக மாற்ற வேண்டுமாயின் ஆசிய பங்குச்சந்தையில் ஆழமாகக் காலூன்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



ஐரோப்பிய வர்த்தக மண்டலம் கொழும்பில் நேற்று முன் தினம் ஏற்பாடு செய்திருந்த பொருளாதார அபிவிருத்தி மூலோபாயங்களை மீளக் கட்டமைத்தல் தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் கண்டி முதல் அப்பாந்தோட்டை வரை கைத்தொழில் வலயத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காகப் புதிய விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் அமைக்கப்படவுள்ளன.

தேசிய அரசு சிறந்த முறையில் ஆட்சி செய்கின்றது. இந்த நிலையில், சிலர் (மகிந்த அணியினர்) இரண்டு வருடங்களில் செய்தது என்னவென்று கேட்கின்றனர். 500 மில்லியன் மக்களை உள்ளடக்கிய உலகின் பணக்கார சந்தையில் பிரவேசிப்பதற்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொண்டதே மாபெரும் வெற்றியாகும். அதன் மூலம் உலகில் பெரும் சந்தை வாய்ப்பைக் கைப்பற்றிக்கொள்ள முடியும்.

அத்துடன், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மூலம் புதிய யுகமொன்றை நோக்கிச் செல்லும் பயணத்தையும் ஆரம்பித்துள்ளோம்.

இலங்கையின் பொருளாதாரத்தை சக்திவாய்ந்ததாக மாற்ற வேண்டுமாயின் எமது நாடு பூகோள ரீதியில் அமைந்துள்ள ஆசிய பங்குச்சந்தையில் ஆழமாகக் காலூன்ற வேண்டும். ஆசியாவின் மையமாக நாம் காணப்படுவதால் ஆசியாவின் பொருளாதார கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைக்க முடியும் - என்றார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கடும்போக்கற்ற அறிக்கையிடல் ஊடகவியலாளர்களிடம் தேவை

## நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 21

ஊடகவியலாளர்கள் நடுநிலையாகக் கடும்போக்கற்ற முறையில் அறிக்கையிடல் வேண்டும். எவ்வாறாயினும் ஊடகவியலாளர்கள் ஊடகத்துறையின் விழுமியங்களிலிருந்து விலகுவதற்குப் பல காரணங்கள் பொறுப்பாக அமைகின்றன. தனிப்பட்ட உணர்வுகள், சுய அக்கறை, பாரபட்சம், வாசகர்களின் விருப்பங்கள் என்பன ஊடகவியலாளர்களையும் நிறுவனங்களையும் அவர்களுடைய கடப்பாட்டிலிருந்து விலகத் தூண்டுகின்றன.

இவ்வாறு தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் கொழும்பு, கண்டி, குருநாகல் மாவட்டங்களில் நல்லிணக்க நட்புத்தன்மை கொண்ட ஊடக நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வி லேயே அவர் மேற்கண்டவாறு கூறியதாக, அவரது அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

கென்யாவின் அனுபவங்களின் படி ஊடகத்துறை சமாதானத்தை ஊக்குவிப்பதற்குப் பங்களிப்புச் செய்யும் அதேவேளை சமாதானத்துக்கு குந்தகத்தை ஏற்படுத்திய நிகழ்வுகளும் காணப்படுகின்றன. 1990ஆம் ஆண்டுகளில் கென்யாவில் ஊடகத்துறை இன மற்றும் மதங்களுக்கிடையில் வெறுப்புணர்வுகளைத் தூண்டக் கூடிய பேச்சுக்களை முதன்மைப்படுத்தியதன் மூலம் குழப்பங்களை ஏற்படுத்தியமை மட்டுமல்லாது இன அழிவுக்கும் இட்டுச்சென்றதாக அறியப்படுகின்றது. இதன் பின்னர் கென்ய அரசு ஊடகங்களில் வெறுப்புணர்வுகளைத் தூண்டக் கூடிய பேச்சுக்களைக் கண்காணிப்பதற்கான பொறிமுறையை முன்னெடுத்தது.

ஊடகத்துறை சமூகத்தின் மனோநிலை, உணர்வு என்பவற்றை மாற்றக் கூடியதும் ஒழுங்குபடுத்தக் கூடியதுமான சக்தி படைத்தது என்று செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் இது பற்றிக் கலந்துரையாடுகையில் ஊடகத்துறையின் பொறுப்பு பாரபட்சமற்ற, நடுநிலையான அறிக்கையிடலுடன் தொடர்புபட்டது எனவும் அதேவேளை இனங்கள், மதங்கள், கலாசாரங்கள் தொடர்பான பல்லினத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு இருப்பதாகவும் கூறப்பட்டது.

சமாதான ஊடகவியல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டபோது செய்தியாளர்களும், ஊடக ஆசிரியர்களும் எதனை அறிக்கையிடுவது? எவ்வாறு அறிக்கையிடுவது? என்பது தொடர்பாக தெரிவுகளை மேற்கொள்ளும் போது முரண்பாடுகள் தொடர்பாக வன்முறைகளை தூண்டாதவாறு அறிக்கையிடல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ஊடகவியலாளர்கள் பிரச்சினைகளின் ஓர் அங்கமாக இல்லாமல் பிரச்சனைகளின் தீர்வின் ஓர் அங்கமாக அமையவேண்டுமென கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

ஊடகவியலாளர்களின் கண்ணோட்டத்தில் சரியானதும் உண்மையானதுமான தகவல்களை வெளிப்படுத்தல், நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல், வேறுபட்ட மூலகங்களிலிருந்து தரவுகளின் உண்மைத்தன்மையை மெய்ப்பித்தல், வல்லுநர்களின் கருத்துக்களை உள்வாங்கல், ஆவணங்கள் மூலம் ஆதாரப்படுத்தல், முக்கியமான கருத்துக்களை நடுநிலையாக வெளிப்படுத்தல் என்பன பக்கச்சார்பற்ற ஊடகத்துறைக்கு இன்றியமையாததாகும்.

ஊடகத்துறை நடுநிலையாகவும் பக்கச்சார்பற்றதாகவும் இருக்கின்ற அதேவேளை எதனை அறிக்கையிடுவது ? எவ்வாறு அறிக்கையிடுவது ? என்பது தொடர்பாக தார்மீகப் பொறுப்புக்குவகை கூறும் அடிப்படையில் நல்லிணக்கம், ஒருங்கிணைப்பு, சகவாழ்வு, நிலைத்து நிற்கக்கூடிய சமாதானம் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கி அறிக்கையிடுவது இன்றியமையாததாகும் என்று பரிந்துரைக்கப்பட்டது என்று தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (த-5)

# மைத்திரிபாலவுக்கு சு.க. அமைச்சர்கள் இரண்டு நிபந்தனை

## நிறைவேற்றாவிடின் எதிரணியில் இணைவோம் என எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 21

அரசில் இருந்து விலகி எதிர்க்கட்சியில் அமர்வதற்குத் தீர்மானித்துள்ள சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் அரசதலைவருக்கு இரண்டு நிபந்தனைகளை விதிக்கத் தீர்மானித்துள்ளனர்.

தேசிய அரசைக் கலைத்துவிட்டு அரசை ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒப்படைக்கவேண்டும் அல்லது மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராகக் கொண்டு சுதந்திரக் கட்சி ஆட்சியை அமைக்கவேண்டும் என்பதே அந்த நிபந்தனைகளாகும்.

இது குறித்து பிரதி அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

இந்த அரசுடன் நாங்கள் இணைந்ததன் நோக்கத்தை அடைய முடியவில்லை. இதனால் இந்த அரசில் தொடர்ந்தும் இருப்பதில் அர்த்தமில்லை. ஒன்றும் செய்யாமல்மக்கள் எதிர்பார்த்த சேவையைச் செய்யாமல் அரசுடன் இருப்பதைவிட எதிர்க்கட்சியில் இருப்பது மேல் என்று நாங்கள் கருதுகிறோம்.

அரச தலைவரைச் சந்தித்து இதுபற்றிப் பேசியபோது டிசெம்பர் மாதம் வரை பொறுமையாக இருக்குமாறு கூறினார். அதன்படி நாம் டிசெம்பர் வரை இருப்போம். அரசை விட்டுப் போகமாட்டோம். மீண்டும் அரச தலைவரைச் சந்தித்துப் பேசி இரண்டு நிபந்தனைகளை அவரிடம் முன்வைக்கவுள்ளோம். அந்த நிபந்தனைகளை ஏற்றால் நாம் அரசுடன் இருப்போம். இல்லாவிட்டால் போய்விடுவோம்.

இரண்டு முதன்மைக் கட்சிகளும் இணைந்து கொண்டு செல்லும் இந்தத் தேசிய அரசுக்கு முடிவு கட்டவேண்டும். ஒன்று ஐக்கிய தேசிய கட்சியிடம் ஆட்சியை ஒப்படைத்துவிடவேண்டும் அல்லது மகிந்தவைத் தலைமை அமைச்சராகக் கொண்டு சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்கவேண்டும்.

இந்தக் கோரிக்கையை நாம் அரச தலைவரிடம் முன்வைக்கவுள்ளோம்.

இதை ஏற்றால் அரசுடன் இருப்போம். இல்லையேல் எதிர்க்கட்சியில் இருப்போம். இரண்டு கட்சிகளும் சேர்ந்து ஆட்சி அமைப்பதால் எவருக்கும் எந்தப் பிரயோசனமும் இல்லை- என்றார். (த-3)

# குளத்தில் மூழ்கிய மனைவியை காப்பாற்றிய கணவர் மாயம்

## கடற்படை உதவியுடன் தேடுதல்

கொழும்பு, ஜூலை 21

குளத்தில் நீராடிக் கொண்டிருந்த வேளை நீரில் மூழ்கிய மனைவியைக் காப்பாற்றிய கணவர் காணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ராஜரட்ணம் என்ற இளைஞரே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

குறித்த இளைஞர் தனது மனைவியுடன் நேற்று முன் தினம் இரவு குளத்தில் நீராடிக் கொண்டிருந்தபோது மனைவி நீரில் மூழ்கியுள்ளார். கணவன் உடனடியாக மனைவியைக் காப்பாற்றியுள்ளார். இதன்போதே அவர் காணாமற்போனதாகக் கூறப்படுகின்றது.

குளத்தின் கற்கள் நிறைந்துள்ள பகுதி ஒன்றில் அவர் காணாமற்போயுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபரைத் தேடும் நடவடிக்கையில் கடற்படையினரின் உதவி பெறப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

# கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார் ரணில்

கொழும்பு, ஜூலை 21

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 30ஆம் திகதி மட்டக்களப்புக்குப் பயணம் செய்யவுள்ளார்.

இதன்போது அவர் மட்டக்களப்பில் 55 கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைக்க செய்ய உள்ளார் என கிழக்கு மாகாண முதலமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வுகளில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ராஜித சேனாரத்ன, ஜோன் அமரதுங்க, பைசர் முஸ்தபா, மலிக் சமரவிக்ரம மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

இதன்போது, ஏறாவூரில் 120 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நகரசபைக் கட்டடம் தலைமை அமைச்சரால் திறந்து வைக்கப்படவுள்ளது. அத்துடன், ஏறாவூரின் வாவிக்கரைப் பூங்காவை அண்மித்த பகுதியில் 100 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள சுற்றுலாத் தகவல் மையம் மற்றும் சுற்றுலாத் தளத்துக்கான அடிக்கல்லும் நடப்படவுள்ளது.

ஆரையம்பதியில் 100 மில்லியன் ரூபா செலவில் அமையப்பெறவுள்ள சுற்றுலாத் தகவல் மையம் மற்றும் வர்த்தகக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லும் தலைமை அமைச்சரால் நடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ய)

# அங்கொட லொக்காவை இந்தியா இலங்கையிடம் ஒப்படைக்க தயார்

கொழும்பு, ஜூலை 21

பிரபல பாதாள உலகக்குழுத் தலைவர் அங்கொட லொக்காவை இலங்கையிடம் ஒப்படைக்கத் தயார் என இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அங்கொட லொக்காவை ஒப்படைக்குமாறு கோரினால், அவரை ஒப்படைப்பதற்குச் சந்தர்ப்பம் உண்டு எனத் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோதமான முறையில் இந்தியா ஊடாக டுபாய் செல்ல முயற்சித்தபோது அங்கொட லொக்காவை இந்திய அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

நுழைவிசைவு இன்றி தங்கியிருப்போரைத் தடுத்து வைக்கும் சிறப்புப் பிரிவு ஒன்றில் அங்கொட லொக்கா இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ய)

# பல்கலை மாணவர் மீதான அடக்குமுறைகள் குறித்து தூதரகங்களுக்கு முறையீடு

## இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் மற்றும் எதேச்சதிகாரப்போக்குகள் குறித்து வெளிநாட்டுத் தூதரகங்கள் சிலவற்றுக்கு இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எழுத்து மூலமுறைப்பாடொன்றைசமர்ப்பித்துள்ளது.

இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதுவரகம், ஆஸ்திரேலிய தூதரகம், சீனத் தூதரகம் மற்றும் ரஷ்யத் தூதரகம் ஆகியவற்றுக்கு இந்தமுறைப்பாடுகையளிக்கப்பட்டிருப்பதாக இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உப செயலாளர் மருத்துவர் நவீன் டீ சொய்சா தெரிவித்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் தங்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்க பிரிட்டன் தூதுவர் சம்மதம் தெரிவித்துள்ளார் எனவும், அடுத்த சில தினங்களில் இந்த முறைப்பாட்டின் பிரதிகளை ஏனைய நாட்டுத் தூதரகங்களுக்கும் கையளிக்கவுள்ளதாகவும் மருத்துவர் நவீன் டீ சொய்சா மேலும் கூறினார். (த)

# உமாஓயா திட்டத்தை நிறுத்தவே முடியாது

## பாதுகாப்பான வழிமுறையை அரசு ஆராய்ந்து வருவதாக ராஜித விளக்கம்

கொழும்பு, ஜூலை 21

உமாஓயா திட்டத்தை நிறுத்தவே முடியாது. 75 வீதமான பணிகள் முடிவடைந்துள்ளதால் மக்களுக்குப் பாதுகாதுகாப்பான முறையில் அந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதே சிறந்ததாக அமையும் என்று அரசு தெரிவித்துள்ளது.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உமாஓயா திட்டத்தின் 75 வீதமான பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இன்னமும் 25 வீதமான பணிகள் மாத்திரமே எஞ்சியுள்ளன. இந்தத் திட்டத்தை தற்போது நிறுத்தினால் பெரும் இழப்புகள் அரசுக்கு ஏற்படும்.

இந்தத் திட்டத்தைப் பாதுகாப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வதே சிறந்ததாக அமையும். இங்கு பொருத்தப்பட்டுள்ள இயந்திரத்தை பின்னோக்கிக் கொண்டுவர முடியாது. முன்னோக்கியே கொண்டுசெல்ல முடியும். நோர்வே நிபுணர்கள் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றனர். மாத இறுதியில் ஜேர்மன் சிறப்பு நிபுணர்கள் வருகைதரவுள்ளனர் - என்றார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விமானப்படைப் பெண் விடுதிக்கு பின்னால் சிசுவின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 21
கட்டுநாயக்க விமானப்படை முகாமின் பெண்கள் விடுதியின் பின்புறத்தில் அழுகிய நிலையில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
விடுதியின் பின்புறத்தில் சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விமானப்படையினர் சந்தேகத்துக்கிடமான முறையில் பொதி ஒன்று இருப்பதைக் கண்டுள்ளனர்.
பின்னர் விமானப்படை முகாமின் உயர் அதிகாரி ஒருவருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சீதுவைப் பொலிஸ் நிலையத்திற்கு இது குறித்து தகவல் வழங்கப்பட்டுள்ளது.
குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் பொதியைச் சோதனையிட்டபோது அதில் அழுகிய நிலையில் சிசு ஒன்றின் சடலம் இருப்பதைக் கண்டுள்ளனர்.
கறுப்புநிறப் பொலித்தீன் பை ஒன்றில் துணியினால் சுற்றப்பட்ட நிலையில் சிசுவின் சடலம் காணப்பட்டுள்ளது.
அதன் பின்னர் பொலிஸார் பெண்கள் விடுதியினுள்ள சோதனை மேற்கொண்டபோது விடுதி யிலுள்ள படுக்கை ஒன்றின் விரிப்பில் இரத்தக்கறை படிந்திருந்ததை அவதானித்துள்ளனர். எனினும், அந்தக் கட்டிலில்தங்கியிருந்தவிமானப்படை வீராங்கனை வயிற்றுவலி காரணமாக விமானப்படை வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது.
இந்நிலையில் குறித்த பெண்ணிடம் சீதுவைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-ய)

## எம்.பிக்களின் கல்வித் தகைமை விவரமெதுவும் மன்றில் இல்லை

### நாடாளுமன்ற பிரதிச் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21
நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் நாடாளுமன்றில் கிடையாது என நாடாளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் நாயகம் நீல் இத்தாவெல தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றச் செய்தியாளர்களுக்காக நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் நாடாளுமன்றுக்குத் தெரிவாகும் உறுப்பினர் ஒருவரின் கல்வித் தகைமைகள் எவை எனக்கோரும் அதிகாரம் நாடாளுமன்றுக்குக் கிடையாது.
எந்தவொரு நபரும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகக்கூடிய குறைந்தபட்ச தகுதிகள் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.
பூட்டான் போன்ற நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்கப் பட்டக் கற்கைநெறியொன்றைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியது அடிப்படைத் தகுதிகளில் ஒன்றாகும்.
எவ்வாறெனினும், இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களைத் திரட்டும் பணிகள் ஓரளவுக்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது - என்றார். (த-ய)

## ஞானசாரரின் செயல்கள் ஏற்கக் கூடியவை அல்ல

### கொழும்பு மேலதிக நீதவான் சாட்சியம்

கொழும்பு, ஜூலை 21
பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனக் கொழும்பு மேலதிக நீதவான் ரங்க திசாநாயக்க தெரிவித்துள்ளார்.
ஞானசார தேரர் ஹோமாகம நீதிமன்றில் குழப்பம் விளைவித்த சம்பவம் குறித்து கடந்த செவ்வாய்க்கிழ்மை மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டது.
இந்த விசாரணைகளில் சாட்சியமளித்த நீதவான் ரங்க திஸாநாயக்க மேலும் கூறியதாவது:
நீதிமன்றுக்குள் செல்லிடப்பேசி ஒலித்தாலோ, கொட்டாவி விட்டாலோ விளக்கமறியலில் வைப்பதற்கு அதிகாரம் உண்டு. இவ்வாறான ஓர் பின்னணியில் ஞானசார தேரரின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.
ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பிலான சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டபோது ஹோமாகம நீதிமன்றில், ஞானசார தேரர் கலகத்தில் ஈடுபட்டார்.
நீதிமன்றின் மீது கட்டளையிடும் தொனியில் கருத்துக்களை வெளியிட்டார்.
ஏற்கனவே திட்டமிட்ட வகையில் ஞானசார தேரர் இவ்வாறு நடந்து கொண்டது தெளிவாகியது. நீதிமன்றில் கலகத்தில் ஈடுபட்டமை ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமல்ல - என்றார். (த-ய)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முற்படுமாறு சிராந்திக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 21
முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் மனைவி சிரந்தி ராஜபக்சவுக்கு லஞ்ச ஊழல் ஆணைக்குவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 22ஆம் திகதி லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு எதிர்க்கட்சி இணைவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுவரும் நிலையில் இவ்வாறான அழைப்பு தெளிவான அரசியல் சூழ்ச்சி என கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.
ஆரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணக்கப்பாட்டு அரசியலில் ஈடுபட ராஜபக்ச தரப்பினர் தீர்மானித்துள்ளனர். கலந்துரையாடலின் மூலம் இது தொடர்பில் சாதகமான நடவடிக்கையை முன்னெடுப்பதுடன், எதிர்வரும் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் இருவரும் கலந்து கொண்டுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது. (த-ய)

# சு.காவை காப்பாற்ற டிசெம்பர் வரையில் காத்திருக்க முடியாது

### கூறுகின்றது மகிந்த தரப்பு

கொழும்பு, ஜூலை 21
நாட்டையும் சுதந்திரக் கட்சியையும் காப்பாற்றவேண்டுமென்றால் டிசெம்பர் வரை காத்திருக்காது உடனடியாக அரசை விட்டு விலகி மகிந்தவுடன் வந்து இணையுமாறு அரசில் இருந்து விலகத் தீர்மானித்துள்ள மைத்திரி தரப்பு அமைச்சர்களுக்கு மகிந்த அணி வேண்டுகோள் விடுத்துள்ளது.



இது தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்ததாவது:
சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகாரத்தை வழங்கி நாளுக்கு நாள் அந்தக் கட்சியைப் பலப்படுத்தும் வேலையைத்தான் செய்கின்றது. வட மத்திய மாகாண சபையிலும் அதுதான் நடக்கின்றது.
சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தித் தனித்து ஆட்சி அமைக்கும் திட்டம் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு இல்லை. அவர் வேறு நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளார். இதனால்தான் அவரது அணியில் இருந்து 18 பேர் விலகி மகிந்தவுடன் இணைவதற்குத் தீர்மானித்துள்ளனர்.
முடியுமானவரை மிக வேகமாக வந்து மகிந்தவுடன் இணையுமாறு நாம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். அப்போதுதான் உடனடியாக எம்மால் ஆட்சி அமைக்க முடியும். அரசிலிருந்து விலகத் தீர்மானித்துள்ள 18 போரையும் டிசெம்பர் வரை பொறுத்திருக்குமாறு அரச தலைவர் கேட்டுள்ளார்.
அவ்வளவு காலம் காத்திருக்காது உடனடியாக வந்து இணையுமாறு நாம் சுதந்திரக்கட்சி அமைச்சர்களிடம் கேட்டுக்கொள்கிறோம். அநேகமாக, அருந்திக்க பெர்னாண்டோ போன்றவர்கள் டிசெம்பர் வரை இருக்க மாட்டார்கள் என்று தெரிகிறது. அதற்கு முன்பே அவர் விலகி வந்து எம்முடன் இணைந்துவிடுவார்.
இந்த அரசை நீண்ட காலம் பயணிப்பதற்கு அனுமதி வழங்கமுடியாது. நாளுக்கு நாள் சுதந்திரக் கட்சியும் நாடும் சீரழிந்துகொண்டு செல்கின்றன. நாட்டையும் கட்சியையும் காப்பாற்ற வேண்டுமென்றால் மகிந்தவின் கரங்களை நாம் உடனடியாகப் பலப்படுத்தவேண்டும் - என்றார். (த-3)

## மலையகத்தில் வறட்சியால் மரக்கறி விலைகள் உயர்வு

நுவரெலியா, ஜூலை 21
ஊவா மாகாணத்தில் நிலவிவரும் வறட்சியான கால நிலை காரணமாக விவாசாயிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.
தோட்ட மற்றும் கிராமப்புர மக்கள் மரக்கறி உற்பத்தியைச் சிறப்பாகச் செய்துவரும் நிலையில் தற்போது வரட்சியால் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.
உமாஓயா மற்றும் ஹால் ஓயா ஆகியவற்றில் நீர்மட்டம் குறைந்துள்ளமையே இதற்குக் காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால் வெலிமடை, ஊவா பரணகம மற்றம் பண்டாரவளைப் பிரதேசங்களில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளன.
கெப்பட்டிபொல பொருளாதார மத்திய நிலையத்தில், கோவா ஒரு கிலோ விலை - 60 ரூபா தொடக்கம் 75 ரூபாவரையும், கறிமிளகாய் ஒரு கிலோ விலை - 170 ரூபா தொடக்கம் 190 ரூபாவரை யும், உருளைக் கிழங்கு ஒரு கிலோ விலை - 130 ரூபாவும், போஞ்சி ஒரு கிலோ விலை - 110 ரூபா தொடக்கம் 120 ரூபா வரையம், பச்சைமிளகாய் ஒரு கிலோ விலை - 220 ரூபா தொடக்கம் 250 ரூபா வரைவும், சலாது இழை 95 ரூபாவும், கரட் ஒரு கிலோ விலை - 120 ரூபாவிலிருந்து 160 ரூபா வரைவும் விற்கப்படுகின்றன என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.
(த-ய-43)

# கிராம பாடசாலைகளை மையமாக்கி அரச ஊழியரை உருவாக்கவேண்டும்

### யோகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

கொக்கட்டிச்சோலை,ஜூலை 21
பாடசாலைகளை மையமாகக் கொண்டு ஒவ்வொரு கிராமங்களிலும் குறைந்தது இரு அரச ஊழியர்களை உருவாக்க முடியும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார்.
பாடசாலைகளுக்கான காவலாளி, சிற்றூழியா போன்ற நியமனங்களை அந்தக் கிராமங்களிலே உள்ளவர்களுக்கு வழங்குகின்றபோது, கிராமங்களில் இருந்து இரு அரச ஊழியர்கள் உருவாக்கப்படுவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.
கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
தமிழ்ப்பிரதேசங்கள் அதிகளவில் கிராமங்களாகவே இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் உள்ள பாடசாலைகளுக்குக் கிராமத்திலே உள்ளவர்களைச் சிற்றூழியர்களாக நியமிப்பதற்குக் கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆலய வரலாறு



ஈழத்திருநாட்டிலே வரலா றுக்கும் அப்பாற்பட்ட மாவிட்ட புரம் ஸ்ரீ கந்தசுவாமியார் திருப்பதி தேவஸ்தானத்தின் 39 ஆவது ஆதீனகர்த்தாவும் பிரமத குருவுமாகிய அடியேனது குரு வருளுடன் கந்தப்பெருமானின் திருவருள் கிடைக்க ஆசீர்வதித்து வாழ்த்துக்களும் தெரிவிக் கிறேன். ஈழத்திருநாட்டிலே கோயிற்கடவை என்னும் கிரா மத்தில் ஆரியரும், நாகரும் இவர்கள் வழித்தோன்றல்களும் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வேல்பெருமானும் சிவலிங்கமும் வைத்து வழிபாடு நடத்தி வந்தனர்.

பல அரசர்களின் அரசாட்சிக் காலங்களில் சைவத்துக்கும் தமிழுக்கும் எழுச்சியும் வீழ்ச்சியும் ஏற்பட்டது. சோழர்காலம், பல்லவர்காலம், பாண்டியர்காலம், வன்னியர் காலம், கண்டி அரசர்கள் காலம் என்பவற்றில் பல மாற்றங்களைக் கண் டோம். மாவிட்டபுரக்காலம் 7 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் என்கிறார்கள். கலிங்க தேசத்து அரசனின் புத்திரியாக கனக சுந்தரி பிறந்தநாள். தீர்த்தசேவையின் போது ஹயக்கிரீவமுனிவரை ஏளனம் செய்ததனால் முனிவர் கோபம் கொண்டு மறு பிறவியில் கனகசுந்தரியானவள் குதிரை முகத்துடனும் குன்ம நோயுடனும் பிறக்க வேண்டுமென சாபமிட்டார். கனகசுந்தரி தனது தவறை மன்னித் தருள வேண்டுமென மனமிரங்கி நிற்க ஈழநாட்டின் வடபால் அமைந்துள்ள கோயிற்கடவை என்னும் ஸ்தலத்தில் முருக வழிபாட்டினால் சாபவிமோசனமாகி சுகவாழ்வு வாழ்வாய் என முனிவர் மனமுவந்தருளினார். இதன் பிரகாரம் மன்னவன் திசை உக்கிரச் சோழனுக்குப் புத்திரியாகப் பிறந்து அங்கசுந்தரி எனும் பெயருடன் வாழ்ந்து வருகையில் பருவ வயதளவில் முனிவரிட்ட சாபம் தொடுதற்கு ஆரம்பித்தது. இதனால் குதிரை முகம் பெறப்பட்டாள் அங்கசுந்தரி. அசரீரி வாக்கின் பிரகாரம் ஈழநாட்டுக்கு வந்த அங்கசுந்தரி கோயிற்கடவையில் ஆரியர், நாகர் இவர்களினால் பூசை செய்யப்பட்டு அனுகிரகித்துக் கொண்டிருக்கும் வேல முருகப் பெருமானையும் சிவலிங்கப் பெருமானையும் வழிபட்டு குதிரைமுகம் நீங்கப் பெற்று அந்தத் தலத்துக்கு குதிரைமுகம் விட்டபுரம் (மாவிட்டபுரம்) எனப் பெயரிட்டு தனது தந்தை உக்கிரப் பெருவழுதிக்கு அறிவித்து சிதம்பரம் தீஷிதர் பரம்பரையினரையும் காங்கேயமூர்த்தியும் ஏனைய சிப்பந் திகளையும் கயாத்துறை எனும துறைமுகத்தில இறக்கி மாவிட்ட புரத்தில் பிரதிஷ்டை செய்து ஆலய திருப்பணி செய்வித்து வந்தாள். முருகப்பெருமான் காங்கேயமூர்த்தி கயாத்துறையில் இறங்கியத னால் இன்றும் கயாத்துறை காங்கேசன்துறை எனப்பெயர் பெற்று விளங்குகிறது.

யாதுமினியீர்.

மருவுமடியார்கள் வினைதீர்த்து அவர்கள் தம் மனதில் விளையாடும் வெற்றிவேல் சேவல்கொடி சகிதம் மரகத மயூரவாகனன் கலியுகவரதன் அடியவர்கள் துன்பங்களைக் களைந்து அனுக்கிரகித்துக் கொண்டிருக்கும் மஹாவல்லி கஜவல்லி சமேத ஸ்ரீ கந்த சுவாமியாரது திருப்பாதங்களைப் போற்றி மேலும் தங்கள் யாபேருக்கும் அபரிமிதமாக அனுக்கிரகிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து இதய சுத்தியுடன் தரும் விண்ணப்பம். மாவைக்கந்தன் ஆலயம் ஆயிரம் வருடங்கள் பழமையானது. ஈழ நாட்டின் முதன்மையானது. ஏனைய ஆலயங்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது. சைவர்களது கேந்திர முக்கியத்துவம் கொண்டது. குமார தந்திர ஆகம சாஸ்திர விதிகளுக்கு அமைந்தவாறு அந்தணர்கள் ஆற்றும் கிரியைகளது செயற்பாடுகள் மூலமாகச் சைவர்களைப் புண்ணிய சீலர்களாக வாழ வகை செய்யும் நித்திய கர்மானுஷ்டானங்களை நடத்தி அதன் வழி அன்பைப் பெருக்க அன்பு மூலம் அருளமுதம் பெற்று உள்ளத் தெளிவு கொண்டு உயரிய மனிதனாக வாழவும் ஆற்றுப்படுத்தும் ஸ்தாபனமாக மாவையாலயம் நிலை பெற்று வருகின்றது என்பதை யாவரும் அறிவர். 15 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரும் தொடர்ந்து ஒல்லாந்தரும் ஈழநாட்டு வழிபா ட்டு ஸ்தலங்களைத் துவம்சம் செய்து அழித்தபோதும் சைவப் பெரு மக்கள் மௌன விரதங்களால் சிவமயமான வாழ்வினைக் கைக் கொண்டு அகமகிழ்ந்தே இருந்தனர். இப்போது வடகீழ் மாகாணக் கோயில்களை மதப்பற்றற்றோர் சமய

நெறிகளுக்கு யோக்கியமற்ற ஈனர்கள் இடித்துப் பொடியாக்கியுள்ளார்கள். கீரிமலை, மாவிட்டபுரம், திருக்கேதீஸ்வரம் இன் னும் ஆலயங்களும் இடிபாட்டுக்குள் திட்டமிட்ட செயற்பாடுகளால் பெருஞ்சேதங்களுக்கானாயின. இருப்பினும் சைவமக்கள் உள்ளங்களை எவராலும் இடித்துப் பொடியாக்க இயலவில்லை. ஏனெனில் சமயக் குரவர்கள், சமயத் தொண்டுகளைச் கிரம மாகப் பேணி ஏனையோருக்குப் போதித்து முன்னெடுத்தவர்களுடைய ஆசிகளாலும் நாம் செய்த தானதரும புண்ணியங்களாலும் நன்னெறி போற்றி வாழ்ந்த வாழ்க்கைகளின் பயனாகவும் இன்னும் பல பேறு பெற்ற புண்ணியங்களாலும் அனைவரது சிவ சிந்தனைகளை அழிக்கவும் இயலவில்லை. என் செய்வது அதர் மத்தை எதிர்த்து தர்மத்தைக் காக்க வேண்டுமே. எனவே சைவ ஆலயத்தில் நித்திய, நைமித்திய, காமிய பூசைகள், உற்சவங்களை நடத்த வேண்டிய அனுசரணைகள் தேர், சப்பரம், வாகனங்கள் காணாமல போயிருக்கும் உற்சவமூர்த்திகளுடன் 150 கிலோ பெறுமதி வாய்ந்த உலகப் பிரசித்தி பெற்ற வெள்ளிக்கொடி ஸ்தம்பக்கவசங்கள் என்பவற்றைச் சேகரித்து பழைய ஸ்தானத்தில் கோயில செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த வேண்டிய அவரமும் அவசியமும் எழுந்துள்ளது. இவற்றுக்கு அடியார் பெருமக் களின் உளங்கனிந்த ஆதரவுகள் வேண்டப்படுகின்றன. சமுத்திரத்திலிருந்து நீர் நீராவியாக வானுயர்ந்து அங்கிருந்து சிறு சிறு துளிகளாகச் சேரும் நீரே பெருவெள்ளம் இந்த உலகத்தில் உள்ள சைவ மக்கள் மனம் வைத்தால் அவர்களது எண்ணங்கள் வான் தேவர்களிடம் சென்று அந்தத் தேவர்கள் மூலமாகவும் வேண்டிய வளங்கள் வெள்ளம்போல் பெறலாம். இவ்வாறு யசுர்வேத வாக்கி யம் கூறுகிறது. தேவர்களது ஆசிகளுக்காகவே

## வாழ்த்துச் செய்தி

மாவைக் கந்தன் கோயில் கொண்டெழுந்தருளி இலங்கை நாட்டை அருளாட்சி செய்யும் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்சுவாமி திருக்கோயில் அனைவரையும் பிரமிக்க வைக்கும் வெகு ஆச்சரியமான புராதன வரலாற்றை கொண்டு விளங்குகின்றது. அத்துணை பெருமைக்குரிய புண்ணிய ஷேத்திரத்தின் திருத்தேர் விழாவை முன்னிட்டு வெளிவரவிருக்கும் அனுபந்தத்திற்கு ஒரு செய்தியை கொடுப்பதற்கு எமக்கு வாய்ப்பளித்த மாவை ஆதீனகர்த்தாவிற்கு நன்றி கூறுகின்றேன்.

வேதங்களின் சாரத்தை சாறு பிழிந்து இனிய தமிழ் மொழியில் உலகிற்கு அளித்த திருமூலர் சுவாமிகள் இலங்கை நாட்டை சிவபூமி என பகிர்ந்துள்ளார். அத்தகைய இலங்கையின் சிரசாக விளங்கும் யாழ்ப்பாணமோ, பல நூற்றுக்கணக்கான சைவ ஆலயங்கள் சூழ்ந்த தீபகற்பமாகவே சாட்சியளிப்பது பெருமைக்குரியது. இத்தீபகற்பத்தின் " கோயிற்கடவை " என பண்டைக்காலம் முதல் வழங்கி வரப்பெறுகின்ற திருநகரில் உள்ள "மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில் " மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையை உடையதென்று யாழ்ப்பாண பல் கலைக் கழகத்தின் வேந்தரும் மூத்த வரலாற்று பேராசிரியருமான கலாநிதி சி.பத்மநாதன் அவர்கள் உறுதிபட தெரிவிக்கின்றார். கி.பி 8ஆம் நூற்றாண்டில் சோழ இளவரசி மருதப்புரவீகவல்லி மாவை கந்தனை வழிபாடியற்றி சாப விமோசனம் பெற்ற செய்தி வரலாற்றில் மிகவும் பிரசித்தமானது. அத்தகையதொரு தெய்வீக அருட்கடாட்சத்திற்கு தகுந்த காணிக்கையாக சோழ பெருமன்னன் உக்கிரசிங்க பெருவழுதி தமிழ்நாட்டின் திருக்கோயில்களுக்கு இணையாக ஒரு பாரிய புதுக் கோயிலை அவ்விடத்தில் நிர்மாணம் செய்து திருக்குடமுழுக்கு பெருவிழா கண்டது இப்புனித ஷேத்திரம். 1200 ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் தில்லைச் சிதம்பரம் தீட்ஷதர் பரம்பரையில் வந்தவர்கள் மாவை ஆதீன கர்த்தாக்களாக இன்றைக்கும் இருந்து இத்திவ்விய ஷேத்திரத்தை பாரம்பரிய மரபு முறையில் பரிபாலனம் செய்வதை உலகில் வேறெங்கும் காண முடியாது. அன்று தொடக்கம் மாவிட்டபுரம் என்ற திருநகர் பாரத நாட்டிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே மிக மிக அந்நியோன்னியமான ஆன்மீக கலாசார தொடர்பை பேணிவருகின்றமையை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் நினைவு கூருகின்றேன்.

மாவைக் கந்தன் தேரேறி திருவீதியுலா வந்து ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அருள்பாலிக்கும் இவ்வேளையில் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில் பண்டைய மாட்சிமையை பெற்று திருக்குடமுழுக்கு பெருவிழா கண்டு இலங்கை நாட்டின் உன்னத திருத்தலமாக விளங்கி இந்நாட்டு மக்களுக்கு அருட்கடாட்சத்தை அபரீதமாக வழங்க வேண்டுமென எமது நல்லாசிகளை தெரிவிக் கின்றேன். மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதி குருக்கள் ஐயா தலைமையில் அவர்தம் ஆற்றுப்படுத்தலுடன் நடைபெறும் திருப்பணிகள் யாவும் இனிதே நிறைவேற மாவை கந்தன் அனுக்கிரகம் நிறைவாக கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**ஆ.நடராஜன்**
**இந்திய துணைத்தூதுவர்**
**யாழ்ப்பாணம்.**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செ

மாவிட்டபுரம் கந்தப் பெருமானின் தேர்த்திரு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். இத் திருத்தலம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதனை அனைவரும் அறிவர். கி.பி 08 ஆம் நூற்றாண்டில் திசை உக்கிர சோழ னின் மகள் மாருதப்புரவீக வல்லி குதிரை முகமும் மனித உடலும் கொண்டிருந்தாள். சாந்தலிங்கன் என்னும் முனிவனின் வழிகாட்டலில் கீரிமலைக்குச் சென்று அங்கே தவம்புரிந்த நகுல முனியை வணங்கி அவரின் ஆசியுடன் கீரிமலையில் தீர்த்தமாடி கோயிற்கடவையில் எழுந்தருளிய கந்தசுவாமியாரை பல தடவை வணங்கி குதிரை முகம் மனித முகமாக மாறியமையால் மாவிட்டபுரம் கந்தசுவாமியார் ஆலயம் சிறப்புடன் அமைக்கப் பட்டமையை வரலாற்றில் நாம் அறிகின்றோம்.

முருகனின் அருளுக்கு பாத்திரமான சோழ இளவரசின் வேண்டுதலுக்கு அமைய கந்தசுவாமியா ரின் சிலா விக்கிரகம் சோழ தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்டமையும் இந்த சுவாமியாரை இறக்கிய இடம் காங்கேசன்துறை என அழைக்கப்படுவதும் இலங்கை

விளம்பர அ



# துர்க்கா மல்ரி சென்ரர்

ரைப்பிங், போட்டோகொப்பி வேலைகளும்
அனைத்து ஸ்ரேசனறிப் பொருள்களும் மற்றும் அழகுசாதனப் பொருள்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
**மல்லாகம்.**

# சிவகுரு மல்ரி ஸ்பொட்

கட்டடப் பொருள்கள் , எலெக்ரிக்கல் பொருள்கள்
மொத்த சில்லறை விற்பனையாளர்.
ஏழாலை வடக்கு, ஏழாலை.
077 389 9557
021 224 3220
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

# கந்தன் ஸ்ரோர்ஸ்

பிரதான சாலை,
பண்டத்தரிப்பு.

# K.V.R. ராதா கிருஸ்ணன் மருந்தகம்,

கே.கே.எஸ். வீதி,
மாவிட்டபுரம்.

# சாரங்கா நகைமாடம்

MONEY EXCHANGE (PVT) Ltd.
NO.157/1,
Kasthuriyar Road, Jaffna.



021 222 6972

# அம்பாள் ரயர் கடை

K.K.S. வீதி,
மாவிட்டபுரம்.

# சிற்பாலயம் ஆனந்தி அன் கோ

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லி சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியின்
## மாவை ஆதீனப் பேரரசு
# ள்மிகு மாவிட்டபுரம்
# ந்தசுவாமி கோயில்
# த்திருவிழா சிறப்பிதழ்
## (22.07.2017) சனிக்கிழமை



ில் ஆலயங்கள் தோறும் யாகங்கள் நடை- எனவே அழிபோற்றி அல்லது முடி கூடவல்ல லை பெருமானாக அமைந்த இந்த ஆலய மா- வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்தலமுமாயி- ய, சமூக, கலை, கலாசாரங்களைப் பேணிப் முன் ... டுத்துச் செல்ல அதற்கான வழி- றுப்படுத்த கூறும் அடியார்கள் வினை தீரக் னத்துச் செயற்பாடுகளும் இந்த ஆலய நடை ப்பட்டுள்ளன. எனவே இத்தகைமையான சீராகவும் சிறப்பாகவும் தெய்வீகமாகவும் ய வேண்டுமென ஒரு கால் மனதில் சிந்தி- ும் அவ்வாறு சிந்திக்குமாறு ஆற்றுப்படுத்தி கமைவாக உங்கள்கைங்கரியங்களையும் விணணப்பிக்கிறேன். பிறப்பு, வளர்ப்பு, சுழற்சிக்குள் தான் மனிதன் வாழ்வு அமை- உண்மை. இந்தப்பிறப்பு இறப்பிற்கிடையே தொண்டுகள் தான் தர்மங்களாக அமைந்து வுக்கு துணைதரும். இதனை சகல சாஸ்திர கூறுகின்றன. இந்த வகையில் தங்களையும் ்கள் மூலம் தர்மங்களைச் செய்து இன்புறுக தொண்டுகள் கூட அந்தணர்களாகிய எமக் வை ஆலயச் சிவத்தொண்டுகளை நினைத்து ங்கள் ஆற்றுக என விணணபிக்கி றேன். லையுடை ஏறு வேல் முருகன் புகழ் விளங்கும் த் தன்னகத்தே கொண்டிருக்கும் மாவைக் க்கும் பாத்திரமாகுக எனவும் வேண்டுகி ஒரு விநாடி முருகப்பெருமானை மனதில் து விருப்பத்திற்கு அமைவாக எமக்காதரவு களுக்கு உதவுமாறு இத்தால் இரந்து நிற்கி களுக் ... ல ஐஸ்வரயங்களையும் மாவை துதவ வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன். து தாங்களது அன்பான பேராதரவுகளை ்துக் காத்திருக்கின்றேன்.

### துச்செய்தி

முதல் கட்டிய கோபுரம் இவ் ஆலயத்தில் ந்திருப்பதும் சிறப்புக்குரியன.

ன்மையான சிறப்பினை உடைய மாவிட்ட தசுவாமியார் தேரிலே ஏறி நேரிலே வரு காட்சி தனி அழகானது. இவ்வாறு அழகன் ர் தேரில் வருவதைக்காண அடியவர்கள் அலைமோதுவதும் அவன் அருளை பேறும் பக்தி பூர்வமானது. ஆகவே றய தேர்த்திருவிழா சிறப்புற நிகழ வாழ்த் ள வழங்கி கந்தசுவாமியாரை பிரார்த் றேன். அழகுடன் மாவிட்டபுரம் பதி யிலே ந்து அடியவர்களின் பிணியை நீக்கி சுரக்கும் கந்தப்பெருமானின் தேர்த்திரு இனிதே நிறைவு பெறவும் என் நல் வாழ்த் ளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்**
**யாழ்மாவட்டம்.**

### தேர்த்திருவிழா (22.07.2017) சனிக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 4.30 மணி | உஷக்காலப் பூசை |
| காலை | 5.30 மணி | ஸ்நபனாபிஷேகம் |
| காலை | 6.30 மணி | காலை சந்தி பூசை |
| காலை | 7.00 மணி | வசந்த மண்டப பூசை ஷண்முகப் பெருமான் தேருக்கு எழுந்தருளல் |
| காலை | 8.45 மணி | ரதா ரோகணம் தேர் திருவீதி பவனி |
| பகல் | 2.00 மணி | பச்சை சாற்றி சுவாமியதாஸ்தானம் |
| மாலை | 4.00 மணி | உச்சிகாலப் பூசை, திருவருட் பிரசாதம் வழங்குதல் |
| மாலை | 5.30 மணி | ஸ்நணாபிஷேகம் |
| மாலை | 6.30 மணி | சாயரட்டை பூசை |
| இரவு | 7.00 மணி | வசந்த மண்டப பூசை தொடர்ந்து தேரடித்திருவிழா |
| இரவு | 8.30 மணி | சிருவருட் பிரசாதம் வழங்குதல் |
| இரவு | 9.30 மணி | அர்த்த ஜாம பூசை |

### தீர்த்தம் ஆடிஅமாவாசை - 23.07.2017 ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 3.30 மணி | உஷக்காலப் பூசை |
| காலை | 4.00 மணி | அபிஷேகம் |
| காலை | 4.30 மணி | காலை சந்தி பூசை |
| காலை | 5.00 மணி | வசந்த மண்டப பூசை |
| காலை | 5.30 மணி | சுவாமி கீரிமலை தீர்த்தத்திற்கு புறப்பாடு |
| காலை | 6.30 மணி | கண்டதித் தீர்த்தம் |
| மாலை | 6.00 மணி | கீரிமலையிலிருந்து புறப்பாடு |
| மாலை | 8.30 மணி | மாவிட்டபுரம் சாயரட்டை பூசையை தொடர்ந்து திருவருட்பிரசாதம் வழங்குதல் |
| இரவு | 9.30 மணி | இரண்டாம் கால பூசை தொடர்ந்து அர்த்த ஜாம பூசை |

### தேர்த்திருவிழா சிறப்பு நிகழ்ச்சி வெளியீடு

**மாவை பிள்ளைத்தமிழ் நேரம் - பிற்பகல் ஒரு மணி - 22.07.2017**

தேவார பாராயணம் - பண்ணிசை கலாநிதி **நா.மு.வி.நவரத்தினம்**
ஆசியுரை - ஆதீனகர்த்தா
வெளியீட்டுரை - பேராசிரியர் கலாநிதி **மா.வேதநாதன்** தலைவர் இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
பிரதம விருந்தினர் - மாண்புமிகு **ஸ்ரீமான் ஆ.நடராஜன்** யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர்.

### வாழ்த்துச் செய்தி

"தீயன புரிந்தாரேணும் குமாரவேள் திரு-முன்னுற்றால் தூயவராகி மேன்மைத் தொல்கதி அடை-வார் " என்கிறது கந்தபுராணம். நாளை ஆன்மாக்களின் தீமைகளை அழித்து அருள்புரிவதற்காக மாவைக்கந்தன் தேரேறி வீதிவலம் வருகின்றார். மானிடப் பிறப்பெடுத்த நாமெல்லாம் முருகப் பெருமானைத் தரிசித்து உய்வு பெறுவோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு "

**ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
**நல்லை ஆதீனம்.**

### ஆதீனகர்த்தாவின் அருளாசி

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயிலின் இரதோற்சவ பெருவிழாவிற்கு வந்திருப்போரையும் இவ்வினிய தெய்வீக திருத்தலத்தை உள்ளன்போடு நினைத்து மனமுருகி வழிபடுவோரையு ஈழத்திருநாட்டை வாழ்விடமாகக் கொண்டோரையும் தாய்நாட்டை விட்டு பிறதேசங்களில் வாசம் செய்து இத்திருப் பூமியை நினைப்போரையும் இங்கு வாழும் சகல உயிரினங்களையும் மாவைக் கந்தன் அனுக்கிரகம் பண்ணி காப்பாராக.

மூவாயிரம் ஆண்டுகள் தொன்மையும் சிருஷிகள், முனிவர்கள், ஞானிகள், சித்தர்கள் முதலானோரால் பூசிக்கப் பெற்று தெய்வீக அருளொளி எங்கெங்கும் வீசுவதுமான மாவைக்கந்தன் திருவிழாக்கள் மகிமையை ஒரு பொழுதும் சொல்ல முடியாது சொல்லில் அடங்காது. அதிசயம் அனேகமுள்ள மாவைத் திருத்தலம் பண்டைக் காலத்தில் அரசர்களால் வணங்கப் பெற்றது. பிரிட்டிஷ்காரர் ஆட்சியின் பொழுது பல ஆங்கிலேய தேசாதிபதிகள் விஜயம் செய்து வழிபட்டதை யாழ்ப்பாண கச்சேரி பதிவேடுகள் கூறுகின்றன. தற்பொழுது ஆட்சி தலைவர்கள், கந்தபெருமானின் அருள் கடாட்சத்திற்காக வருகிறார்கள். இத் தருணத்தில் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயிலின் திருப்பணிகளை நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். 1990 ஆம் ஆண்டுகளின் பொழுது நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் திருக்கோயிலும் ஆலய சொத்துக்களும் அடைந்த பேரழிவுகள் நூறு கோடிகளுக்கும் மேல் என கூறுவது மிகையன்று இதனைக் கண்டு ஆற்றொணா துயரடைந்த எமது தகப்பனாரும் குருநாதருமாகிய மஹாராஜஸ்ரீ து.ஷண்டுகநாத குருக்கள். முருகப்பெருமான் வேண்டுதலுக்கு அமைய திருப்பணி வேலைகளை மனம், மொழி, மெய் ஆகின திரிகரண சுத்தியுடன் எண்ணற்ற சிரமங்களை பொருள்படுத்தாது மாவைக் கந்தன் அருள்துணை கொண்டு ஆற்றி வந்ததை உலகம் அறியும்.

மாவைக் கந்தனுக்கு திருக்குட முழுக்கு பெருஞ்சாந்தி விழா காண வேண்டுமென்று மாழவ ஆதீனம் எல்லா முயற்சிகளையும் அல்லும் பகலும் எடுத்து வருவதை மாவைக் கந்தன் அடி யார்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். செய்ய வேண்டிய திருப்பணிகள் மாலைபோல் எம்முன் இருப்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

சைவப் பெருமக்களே ! நீங்கள் எல்லோரும் மனது வைத்தால் இத் திருப்பணிகளை விரைவாக நிறைவேற்றலாம். கந்த பெருமானுக்கு திருக்குட முழுக்கு பெருஞ்சாந்தி விழா விரைவில் காணலாம். அன்று தான் ஈழமணித் திருநாடு மாட்சிமையை மீண்டும் அடையும். இது சத்தியம்.

எல்லோருக்கும் ஆதீனப் பேரரசின் ஆசிகள் கிடைப்பதாக .

### செஞ்சொற் செல்வரின் செய்தி

சரித்திர முக்கியத்துவம் மிக்க மாவிட்டபுரம் கந்தப் பெருமான் தேர்ஏறி வலம் வரும் திரு நாள் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். பஞ்சரதப்பவனி நடைபெற்ற மாவை வீதியில் முருகப் பெருமான் திருக்காட்சியை காணும் பேறு மகத்தானது. போரின் அனர்த்தங்களால் மிகவும் பாதிக்கப்பட்ட இத்திருக்கோயிலில் மீண்டும் பஞ்ச ரதபவனியை எதிர்பார்த்து பக்தர்கள் காத்திருக்கிறார்கள். பல கோடி ரூபா செலவில் ஆலயத் திருப் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. மகாராஜ ஸ்ரீ.ச.இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்களின் அயராத முயற்சியினால் பாரிய திருப்பணி வேலைகள் பூர்த்தியடையும் நிலை யிலுள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும். இலங்கையில் அபிஷேகக் கந்தன் என்று அழைக்கப்படும் மாவிட்டபுரம் கந் தன் ஆலயத்தில் இன்றும் அபிஷேகத்துக்குக் குறைவில்லை எண்ணற்ற திரவியங்களால் முறைப் படி நடைபெறும் அபிஷேகங்கள் உள்ளத்தை ஈர்க்கும்.

அல்லல் போக்கி ஆறுதல் தரும் மாவை வேலன் தேர் ஏறும் திருநாளில் அனைத்து சைவமக்களும் குடும்பமாக வருகை தந்து வழி பாடு செய்து நல்வாழ்வு கேட்டல் அவசியமாகும்.

**கலாநிதி ஆறு. திருமுருகன், தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை, தலைவர்**
**சிவபூமி மடம், கீரிமலை.**

### வாழ்த்துச் செய்தி

முருகவணக்கம் மிகவும் தொன்மை வாய்ந்தது. உலகம் எங்கும் முருகவழிபாடு சிறந்து விளங்கும் ஒரு காலகட்டத்தில் இன்று வாழ்ந்து வருகின்றோம். இலங்கையிலுள்ள கந்தன் ஆலயங்களுள் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திற்குத் தனிச் சிறப்புண்டு. 25 நாள்கள் திருவிழா நடைபெறும் இவ்வாலயத்தின் இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழா 22.07.2017 சனிக்கிழமை சிறப்பாக நடைபெறத் திரு வருள் கைகூடியுள்ளது. தேர்த்திருவிழாவானது இறைவனின் ஐந்தொழில்களுள் ஒன்றான அழித்தல் தொழிலைக் குறித்து நிற்பதாகச் சிவாகமங்கள் குறிப்பிடு கின்றன. உலகமுய்ய உதித்த முருகன் இலங்கையில் நிரந்தர சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தி மக்கள் நல்லவண்ணம் வாழத் திருவருள் பாலிக்க வேண்டுமென இத்தேர்த்திருவிழாவில் மாவைக்கந்தனைப் போற்றி வணங்கி வாழ்த்துகின்றோம்.

**பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்**
**தலைவர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்**

அனுசரணை

ஸ்ரீ முருகன் கபே
K.K.S. வீதி, மாவிட்டபுரம்.

செந்தூரன் மல்ரி ஸ்பொட்
K.K.S. வீதி, மாவிட்டபுரம்.
077 493 5243

தேவன் சண் இரும்பகம்
கே.கே.எஸ். றோட், மாவிட்டபுரம்.

கதிர்வேலன் றேடர்ஸ்
K.K.S. வீதி, மாவிட்டபுரம்.

U.M.C. இரும்பகம்
K.K.S. வீதி, மாவிட்டபுரம்.

MITHURSIKAN CONCRETE
PRODUCT CENTER
K.K.S. ROAD, TELLIPPALAI

காளி கிறீம் கவுஸ்
கட்டுவன்றோட், மல்லாகம்
077 087 0516

வேலவன் றேடர்ஸ்
K.K.S. வீதி, மாவிட்டபுரம்.

றதி வெல்டிங் சொப்
கம்மாலை வெல்டிங், பூட்டுவேலைகள்
வடக்கு வீதி.மாவிட்டபுரம்.
076 858 5556

அம்பிகா கிறீம் ஹவுஸ்
மலை வேம்படி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

ராணி கச்சான் வாணிபம்
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தலை நிமிர்வோம்!

யாழ்ப்பாணம் வந்திருந்த சிங்கப்பூர் அயலுறவுத்துறை அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் யாழ்ப்பாணத்தவர்களே மறந்திருந்த அவர்களின் பெருமைகள் பலவற்றை மீட்டுப்பார்த்திருக்கிறார். அத்தோடு ஈழத்தமிழர்களுக்கு உறைக்கும் விதத்தில், நீங்கள் இந்த உலகத்தின் மற்றைய பாகங்களுக்கெல்லாம் உழைத்துக்கொடுத்தது போதும், இனியாவது உங்களுக்காக உழைக்கப்பாருங்கள் என்று குத்திக்காட்டிவிட்டும் போயிருக்கிறார்.

இலங்கையின் அரசியல் பொருளாதாரத்தில் அடிக்கடி உச்சரிக்கப்படும் ஒரு சொற்றொடர், ''ஒரு காலத்தில் இலங்கையைப் போன்று வளரவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தது சிங்கப்பூர், இன்றோ சிங்கப்பூரைப் போன்று வளர வேண்டும் என்று சொல்லும் நிலையில் நாம் இருக்கின்றோம்'' என்பதுதான். கொழும்பில் இருந்தபடி போருக்குத் தலைமையேற்று ஒரு குருதிச்சகதியை இலங்கையில் உருவாக்கிய சகல தலைவர்களும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இதனைக் கூறித்தான் இருக்கிறார்கள்.

அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் கூறியது முற்றிலும் சரியானது. ஒரு காலத்தில் தெற்காசியாவிலேயே அதிகம் படித்த சமூகமாகத் தமிழ் இனம்தான் இருந்தது.

இலங்கையைப் பார்த்து சிங்கப்பூர் வளர்ந்தது மட்டுமல்ல, அந்த நாட்டைக்கட்டி வளர்ப்பதற்கான அடித்தளத்தை இட்டவர்களில் தமிழர்களுக்கும் மிகக்கணிசமான பங்கு இருக்கிறது என்று ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் விவியன். அதிலும் குறிப்பாகக் கல்வி, மருத்துவம், வீதிக் கட்டமைப்பு என்பவற்றின் பிதாமகர்கள் தமிழர்கள்தான் என்ற உண்மையையும் அவர் போட்டுடைத்திருக்கிறார்.

இங்கிருந்து சென்ற தமிழர்கள் பலரே சிங்கப்பூரை இந்த அளவுக்கு வளர்த்தெடுத்தார்கள் என்றால், தம்மை அரவணைத்துச் செல்லும் ஒரு அரசு கொழும்பில் இருந்திருந்தால் இலங்கையையும் அவர்கள் எவ்வளவு தூரத்துக்கு வளர்த்துவிட்டிருப்பார்கள் என்ற சிந்தனை, விவியனின் பேச்சைக் கேட்டதும் ஒரு கணம் மின்சாரமாகத் தாக்குகின்றது.

சிங்கப்பூரில் மட்டுமல்ல 19 ஆம் நூற்றாண்டுகளில் மலேசியா உள்ளிட்ட பல நாடுளிலும் நிர்வாகத்தில் சிறந்து விளங்கியவர்கள் தமிழர்களே. கல்வியே இனிவரும் காலத்தில் பலம் என்று உலகம் மாறி வந்த காலத்தில் அதனோடு ஒத்திசைந்து ஓடி தம்மையும் தாம் சென்ற இடங்களையும் வளர்த்தவர்கள் தமிழர்கள்.

துரதிஷ்டவசமாகத் தமிழனின் அந்த அறிவும், அதனால் அவனுக்குக் கிடைத்த அதிகாரமுமே இலங்கையில் அவன் மேல் வெறுப்பும் இனத்துவேசமும் மேலோங்கக் காரணமாகியது என்பதும், அதனால் இலங்கை கெட்டுக் குட்டிச் சுவராகிப் போனது என்பதும் மறக்க முடியாத, மறக்கப்படக்கூடாத தனிக் கதை.

தமிழர்களின் பலம் என்ன என்பதையும், அதனை நாம் பயன்படுத்தாமலேயே காலத்தை வீணடிக்கின்றோம் என்பதையும் எமக்கு நாசுக்காகக் குத்திக்காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார் அமைச்சர் விவியன். அவர் தெளிவாகக் குறிப்பிடுகிறார், ''உலகத்திற்குச் சேவையாற்றக்கிடைத்த பொக்கிசமாகத் தமிழர்கள் இதுவரை உழைத்துக் கொடுத்தது போதும். உங்கள் அறிவும் திறமையும் இனிமேலாவது உங்களை மேம்படுத்தவும் யாழ்ப்பாணத்தை மேம்படுத்தவும் பயன்படட்டும். அதற்கு நீங்கள் தகுதியானவர்கள், பொருத்தமான வர்கள். அதற்காக நீங்கள் நீண்ட காலம் காத்திருந்தும் விட்டீர்கள். எனவே இனியாவது உங்கள் அறிவையும் திறமையையும் உங்களுக்காகப் பயன்படுத்துங்கள்'' என்கிறார்.

போரில் இருந்து மீண்டு வரும் ஒரு சமூகத்திற்கு உந்து சக்தியளிக்கக்கூடிய ஒரு உரை அது. தனது பெருமையை, திறமையை மறந்திருந்த, தூக்கத்தில் ஆழ்ந்திருந்த சமூகத்தைத் தட்டியெழுப்பும் உரை அது. விவியன் அழகாகச் சொன்னார், நாங்கள் இப்போது செய்வது உங்கள் மூத்தோர்கள் செய்த வற்றுக்கான கைமாறு ; இது வெறும் உதவியோ தொண்டுப் பணியோ அல்லவென்று. அந்த மூத்தோரின் மூச்சுக் காற்றிலிருந்து பலம் பெற்று எழுந்து, நாம் இழந்துவிட்ட பெருமைகளையும் திறமைகளையும், திரும்பப் பெறவேண்டும். அனைத்துத்தமிழர்களும் ஒன்றிணைந்து இப்போது செய்யவேண்டியது அதுதான். அதுவேதான் இந்த உலகின் முன்னாள் தமிழினைத் தலைநிமிர்ந்து நிற்க வைக்கும்.

# நாட்டுக்கு கேடு ஏற்படுத்தும் அரசின் அபிவிருத்திச் செயற்பாடுகள்



சிங்களமூலம்: நிசரணி குணசேகர (லங்காதீப)
தமிழில் வீ.எஸ்.ரீ

இலங்கையில் மண்சரிவு அபாயத்துக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 13 வரை உயர்ந்துள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில் கம்பகா, கொழும்பு , காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, மற்றும் குருநாகல் மாவட்டங்களும் உள்ளடங்குகின்றன.

இந்தச் சிக்கலான, ஆபத்தான நிலைக்கு, சரிவான நிலப்பகுதிகளில் மக்கள் முறையான அனுமதியற்ற விதத்தில் கட்டடங்களை நிர்மாணித்தலே காரணமென துறைசார் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மண்சரிவு அபாயம் எதுவுமற்ற நிலையிலிருந்த நாடு, மண்சரிவு அபாயமுள்ள நாடாக ஆகி வருவதாக பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே துறைசார் வல்லுநர்களால் எச்சரிக்கை விடுவிக்கப்பட்டு வந்துள்ளது. இது குறித்து எந்தவொரு தரப்புகளைச் சேர்ந்த அரசியல் வாதிகளும் இதுவரை காலமும் எதுவித அக்கறையும் செலுத்தியதில்லை என்பதே யதார்த்தம்.

துறைமுக நகரான கொழும்புக்கு ஏற்படத்தக்க சுற்றுச் சூழல் பாதிப்புக்குறித்து முன்னர் எதிர்க் கட்சியில் தாம் இயங்கிய வேளையில் கடும் விமர்சனங்களை மேற்கொண்டு வந்த ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், தற்போது அவசர அவசரமாக உருவாக்கப்படும் கொழும்பு துறைமுக நகர் தொடர்பாக எந்த வித கருத்தையும் வெளியிடுவதைத் தவிர்த்து மௌனம் காக்கின்றனர்.

### மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகமே

பத்து ஆண்டுகள் காலமாக நீடித்த மகிந்தவின் நிர்வாக வேளையில் இந்த நாட்டின் சுற்றுச் சூழல் பெருமளவில் பாதிக்கப்பட்டதென்பது சகலரும் அறிந்த உண்மை. ஆனால் இன்று நாடு முகம் கொடுத்துவரும் சகல சுற்றுச் சூழல் பாதிப்புக்களுக்கும் மகிந்த தரப்பின் முன்னைய கால நிர்வாகத்தின் மீது பொறுப்பைச் சுமத்திவிட்டு கூட்டாட்சி அரசுத் தரப்பினர் விடயத்தை கைகழுவி விட்டு விட இயலாது. மகிந்த தரப்பின் தவறான கொள்கை நிலைப் பாட்டையே தற்போதைய கூட் டாட்சி அரசும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமானால், அத னால் ஏற்படத்தக்க பலாபலனுக்கான பொறுப்பின் ஒரு பகுதியை, இன்றைய மைத்திரி -ரணில் ஆத ரவு மற்றும் வாக்கு ஆதரவு வழிமுறைகளால் செலுத்தப்படும் நிலை ஏற்பட்டாகும்.

பூமி வெப்பமடைதல் காரணமான காலநிலை மாற்றத்துக்கு உள்ளான நாடுகளுள் ஒன்றாக இலங்கையும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியப் பெருங்கடலில் ஏற்படும் உஷ்ணத்தால் நீர் மட்டம் உயர்வதன் காரணமாக இலங்கை உட்பட்ட வட்டகை நாடுகள் பலவற்றில் பருவகால சுழற்சி தடைப்பட்டோ அல்லது மாற்றமுற்றோ போவதால் குறித்த நாடுகளில் தொடர்ச்சியான வறட்சிநிலை மற்றும் கடும் மழை வீழ்ச்சி ஏற்பட நேர்கிறது.

அந்த வகையில் இலங்கையில் இடம்பெறும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்தும் பொருளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தார அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக நிலைமை மேலும் உக்கிரமடைகின்றது. காடழிப்பு மற்றும் பொருத்தமற்ற இடங்களில் கட்டப்படும் கட்டடங்கள் காரணமாக மண்சரிவு அபாயம் உயர்வடைந்து வருகின்றது. முன்னைய அரசால் திட்டமிடப்பட்ட கண்டி - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் இன்றைய அரசால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமானால், சுற்றுச் சூழல் நிலைமை மேலும் தீவிரமடைய வாய்ப்புண்டு.

கடந்த பல ஆண்டுகளாக கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு வரும் வடக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வறட்சிப் பாதிப்பு, இயற்கை இடர்ப்பாதிப்பு என்பவற்றால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து தற்காலிக இடங்களில் வாழ நேர்ந்துள்ள மக்கள் எதிர்வரும் தேர்தல்களில் தமது தரப்புக்கு ஆதரவளிப்பார்கள் என ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனரா? வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தவென புதிய நிறுவனமொன்றை உருவாக்குவதாலோ அல்லது முன்னைய ஆட்சியாளர்கள்மீதுபழிசுமத்துவதாலோ மட்டும் குறித்த பிரச்சினைக்கு இன்றைய அரசால் தீர்வுகாண இயலுமா?

**உமா ஓயா சிக்கல் தொடர்கதையே**

உமா ஓயா வேலைத்திட்டம் முன்னைய ராஜபக்ச அரசால் ஆரம்பிக்கப்பட்டதொன்றே. அந்த வேளையில் ஈரானிய அரச தலைவராகவிருந்த மொகமட் அகமதின் நஜாட்டின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை முன்நிறுத்தியே ராஜபக்ச அரசால் உமாஓயாத் திட்டம் அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டது. மாகம்புர, ராஜபக்ச துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் என்பவற்றுக்கு நீர் விநியோகிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதே அந்தத் திட்டம். ஈரானிய அரச தலைவர் மகிந்தவின் நெருங்கிய நண்பரானபடியால் எந்தவிதப் பரிசீலனைகளுமின்றி உமாஓயாத்திட்டத்தை முன்னெடுக்கத் தேவையான நிதியை ஈரானிய அரச வங்கியொன்றான எக்சீம் வங்கி மூலம் கடனாக வழங்க ஈரானிய அரச தலைவர் ஒப்புக் கொண்டார். தமது பெயரைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் செயற்பட்ட ராஜபக்ச குடும்பத்தினர், குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்புக் குறித்து கணக்கில் எடுக்கவே இல்லை. சுற்றுச்சூழலியலாளர்களது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது ராஜபக்ச அரசு குறித்த உமா ஓயா திட்டத்தை ஆரம்பித்தமை இந்த விதத்திலேயே யாகும்.

**வேலைத் திட்டங்களால் ஏற்படத்தக்க பாதிப்புக்களுக்கு அரசே பொறுப்பு**

உமா ஓயாத்திட்டம், கொழும்பு துறைமுக நகரத்திட்டம், மீதோட்டமுல்ல குப்பை மேடு என்பவற்றால் ஏற்பட்டுவரும் பாதிப்புக்களுக்கான பொறுப்பை ராஜபக்ச தரப்பினர் தட்டிக் கழிக்க இயலாது. ஆனால் அந்தப் பொறுப்பை முற்றுமுழுதாக ராஜபக்ச தரப்பினர் மீது சுமத்தி விட்டுத் தாம் தப்பித்துக் கொள்ள இன்றைய அரசாலும் இயலாது. ஏனெனில், குறித்த திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்ததைத் தொடர்ந்து உருவாகிய பாதிப்புக்களைச் சுட்டிக்காட்டி அந்தப் பிரதேச மக்கள், அந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் 2015 இல் கூட்டாட்சி அரசு உமாஓயாத் திட்டத்தை முன்னெடுப்பதை இடை நிறுத்திய போதிலும் சில மாதங்களின் பின்னர் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த திட்டத்தின் 80 சதவீதமான வேலைகள் பூர்த்தியான நிலையில் தற்போது அதனால் குறித்த பிரதேசத்தில் ஏற்பட்டுவரும், ஏற்படவுள்ள பாதிப்புக்களது அபாயம் உயர்வடைந்துள்ள போதிலும், குறித்த திட்டத்தின் மீதி வேலைகளைத் தொடரவோ அல்லது நிறுத்திவிடவோ இயலாத நிலை உருவாகியுள்ளது. அதேவேளை குறித்த திட்டத்துக்காகப் பெற்றுக்கொண்ட கடனுக்கான வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனது தவணைத்தொகையையும் அரசு செலுத்தியே ஆக வேண்டியுள்ளது.

**சிக்கலுக்கு மேல் சிக்கல்களை எதிர்நோக்கும் கூட்டாட்சி அரசு**

உமா ஓயாத்திட்ட கட்டுமானப்பணிகளால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரிய நிவாரணங்களை வழங்கி சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பையும் நல்லாட்சி அரசால் 2015ஆம் ஆண்டிலேயே நேர்சீர் செய்திருக்க வாய்ப்பிருந்தது. ஆனால் அந்த விதம் செயற்படத்தக்க அரசியல் சக்தியையும், திறனையும் கூட்டாட்சி அரசு அந்த வேளையில் கொண்டிருக்கவில்லை. அது தற்போது பூதாகரமான பிரச்சினையொன்றாக உருமாறியுள்ளது. குறித்த உமா ஓயாத்திட்டத்தில் என்று மட்டுமல்லாது, மீதோட்டமுல்ல குப்பை மேட்டுப்பிரச்சினை, கொழும்பு துறைமுக நகர நிர்மாணம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நீண்டதொரு காலத்துக்குச் சீனாவுக்கு குத்தகைக்கு வழங்குவது ஆகிய விடயங்களிலும் நல்லாட்சி அரசு திடமான முடிவுகளை மேற்கொள்ளத் தவறியதால், தற்போது பல தரப்பட்ட சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

இந்தச் சின்னஞ்சிறு தீவான இலங்கையின் சுற்றுச் சூழல் பாதிப்பு இந்த அளவுக்கு வேகமாக அதிகரிக்குமானால், இந்த நாட்டின்பெரும் நிலப்பரப்பில் தண்ணீர்த்தட்டுப்பாடு ஏற்படுவதன் மூலமோ அல்லது பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதன் மூலமோ அதுவுமன்றேல் நிலப்பரப்பு திடீரென கீழிறங்குவதன் மூலமோ மக்கள் வசிக்க இயலாத பிரதேசங்களாக மாறும் அபாயமுண்டு. அத்தகையதொரு பாதிப்பை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற பெரும் நாடுகளால் தாங்கிக் கொள்ள இயலுமேயன்றி இலங்கையால் எந்த விதத்திலும் தாங்கிக் கொள்ள இயலாது.

> *“உமா ஓயாத்திட்டத்தில் என்று மட்டுமல்லாது, மீதோட்டமுல்ல குப்பை மேட்டுப்பிரச்சினை, கொழும்பு துறைமுக நகர நிர்மாணம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நீண்டதொரு காலத்துக்குச் சீனாவுக்கு குத்தகைக்கு வழங்குவது ஆகிய விடயங்களிலும் நல்லாட்சி அரசு திடமான முடிவுகளை மேற்கொள்ளத் தவறியதால், தற்போது பல தரப்பட்ட சிக்கல்களுக்கு அரசு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.*



இத்தகைய சிக்கல்கள் குறித்து அரசு மட்டும் அலட்சியமாக இருப்பதாகக் கொள்ள முடியவில்லை. இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி நாட்டையே சிக்கல்களுக்கு உள்ளாக்க முயலும் நாட்டுப் பற்றாளர்கள் தரப்பினர்களும், மேற்குறிப்பிட்ட பாதிப்புக்கள் குறித்து எந்தவித அக்கறையும் கொண்டிருக்கவில்லை என்பதே யதார்த்த உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மா புளிப்பது அப்பத்துக்கு நல்லது

அடிப்படைச் சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாத்தல், ஊக்குவித்தல் தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன், அண்மைய தமது இலங்கைக்கான பயணத்தின் முடிவில் இலங்கை நிலவரம் குறித்து வெளியிட்ட அறிக்கை, பன்னாட்டுச் சமூகம் மற்றும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு மட்டத்தில் முக்கி யத்துவம் வாய்ந்ததொன்று. அதே சமயம் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, பென் எமர்சனுடனான தமது சந்திப்பின்போது இலங்கை நிலவரம் குறித்த பென் எமர்சனது கருத்து நிலைப்பாடு குறித்து அவருடன் முரண்பட்டுக் காரசாரமான கருத்துப் பரிமாறல்களில் ஈடுபட்டமை பன்னாட்டு ரீதியில் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அந்த வகையில் நீதி அமைச்சருக்கும், பன்னாட்டு மனித உரிமை ஆர்வலர்களுக்கும் இடையில் தலைதூக்கியுள்ள தற்போதைய பிணக்கு தொடர்ந்தும் முரணான கருத்துப் பரிமாறல்கள் மூலம் தொடருமானால்தான் இலங்கையின் போக்குக் குறித்து பன்னாட்டுச் சமூகம், குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இறுக்கமானகடும்நிலைப்பாட்டைக் கைக்கொள்ள அது வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பான மனித உரிமைகள் விடயத்தில் நல்லாட்சி அரசும், மகிந்த தரப்பும் கடைக்கொள்ளும் தமிழர் விரோதப் போக்கு தொடர்வது பன்னாட்டு மட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்கள்மீதான அனுதாபம் உயர வழிவகுக்கும்.

இலங்கை தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை நிறைவேற்ற இலங்கை அரசு கால அவகாசம் கோரியதை எதிர்க்காது, வேளைக்கேற்ற உசிதமான நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்ததால் தான் ஐ.நா. நிபுணர்கள் இப்போது இலங்கைக்கு வந்து உண்மைநிலையைக் கண்டறிந்து அறிக்கையிட முடிந்திருக்கிறது. அந்த வகையில் அரசுக்கும் பென் எமர்சன் போன்ற ஐ.நா.அதிகாரிகளுக்குமிடையில் மனித உரிமைகளைக் கடைப்பிடிக்கும் விடயத்தில் முரண்பாடுகளும் கருத்துவேறுபாடுகளும் முற்றிப்பெருக்க வாய்ப்புண்டு அத்தகையதொரு நிலையே ஈழத்தமிழ் மக்களது இன்றைய நிலை குறித்த பன்னாட்டுக் கவனத்தை ஈர்க்கவல்லது.

மொத்தத்தில் மா நன்றாகப் புளிப்பது நல்ல அப்பம் கிடைக்க வழி வகுக்கும் என்பது யதார்த்தமே.

ஜே.சாம் போல்
மன்னார்.

# இலங்கையில் அதிகம் முதலிடும்படி பன்னாட்டுச் சமூகத்துக்கு அழைப்பு



## டாக்காவில் விடுத்தார் மைத்திரி

இலங்கையின் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராயும் சிறப்பு முதலீட்டு மாநாடு ஒன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நகரில் இடம்பெற்றது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் இடையில் வருடாந்தம் 42 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடு உடைய சந்தைப் புரள்வு காணப்படுகிறது. அதனடிப்படையில் சந்தைப்புரள்வினை எதிர்வரும் வருடங்களில் இரு மடங்காக அதிகரிப்பது குறித்து இருநாட்டு அரச தலைவர்களும் ஏற்கனவே ஏற்படுத்தியிருந்த இணக்கப்பாடு தொடர்பில் இந்த மாநாட்டின் போது கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் இந்த மாநாட்டு நிகழ்வின் போது எரிவாயு, வங்கி மற்றும் ஆடை த்தொழிற்சாலை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலங்கை முதலீட்டாளர்கள் பங்களாதேஷில் முதலீடு செய்துள்ளமை குறித்தும், அந்த துறைகளில் காணப்படும் மேலதிக வாய்ப்புக்கள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வேண்டுகோளை பங்களாதேஷ் முதலீட்டாளர்களிடம் அரச தலைவர் முன்வைத்தார்.

இந்த விசேட முதலீட்டு மாநாட்டில் இரு நாடுகளினதும் அயலுறவுத் துறை அமைச்சர்கள் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## வணிக நிறுவனங்களுக்கான பாதுகாப்புச் சேவைகள் நடைமுறைக்கு

### சிறிலங்கா ரெலிகொம் அறிமுகப்படுத்தியது

உலகளாவிய ரீதியிலே இணையப் பாதுகாப்புத் தீர்வுகளை வழங்கும் போட்டி நெற் மற்றும் வணிகங்கள், செல்லின சந்தைப் பிரிவுகளுக்கான டி.டி.ஓ.எஸ் பாதுகாப்பில் முன்னணியிலுள்ள நெற் ஸ்கவுட் இன் பாதுகாப்பு பிரிவான அர்பர் நெற்வேக்ஸ் உடன் இணைந்து சிறி லங்கா ரெலிகொம் வணிக நிறுவனங்களுக்கான பாதுகாப்புச் சேவைகளை எஸ்.எல்.ரி அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி ரெலிகொம் நிறுவனத்தின் நிர்வகிக்கப்பட்ட பாதுகாப்பு சேவைகள் இலங்கையிலுள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறிய வணிக நிறுவனங்க ளுக்கான பல் செயற்பாட்டுத் தீர்வுகளை வழங்கவுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள சிறி லங்கா ரெலிகொம் இன் வணிகதீர்வுகள் பிரிவின் பொது முகாமையாளரான எம் ஐ டீன,

"தகவல் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் முன்னெப்போதுமில்லாத வகையில் குறிப்பாக வணிகச் செயற்பாடுகள் மீதாக அதிகரித்து வருவதால் ஒரு பல் செயற்பாட்டு வலையமைப்புப் பாதுகாப்பு கட்டமைப்பின் தேவை மிகவும் அவசியமாகிறது. தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான ரெலிகொம் செலவுப்பயனுறுதியுள்ளதும் பாதுகாப்பானதுமான ஆரம்பம் முதல் இறுதிவரையான இணைய இணைப்பை வாடிக்கையாளருக்கு வழங்குவதில் கவனத்தைச் செலுத்துகிறது. நிர்வகிக்கப்பட்ட பயர்வோல் சேவையும் டி.டி.ஓ.எஸ் பாதுகாப்புச் சேவையும் பழைய புதிய வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கவுள்ளது. தவிர, மின்னஞ்சல் பாதுகாப்பானது கணினி. முகில் சேவையை அடிப்படையாகக்கொண்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர் இச்சேவையைப் பதிவு செய்வதைத் தொடர்ந்து தமது பயர்வோலினை நிர்வகித்துக்கொள்ளமுடியும்" - என்றார்.

மேலும் ரெலிகொம் இன் நிர்வகிக்கப்பட்ட பாதுகாப்புச் சேவையில் அடங்கியுள்ள தான மூன்று உற்பத்திப் பொருள்களாக வணிகங்களின் வலையமைப்புக்களுக்கான பாதுகாப்பை வழங்கும் மனேஜட் பயர்வோல், வணிகங்களின் வலையமைப்புக்களுக்கான கேற்வே மின்னஞ்சல் பாதுகாப்பு வணிகங்களின் வலை யமைப்புக்களை டி.டி.ஓ.எஸ். தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் டி.டி.ஓ.எஸ் புறொற்றெக்சன் சேவிஸ் என்பன விளங்குகின்றமை நோக்கத்தக்கது.

## மூன்றரை மாத காலப் பகுதியில் 217 பில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளது

### மத்திய வங்கி தெரிவிப்பு

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே 217 பில்லியன் தொகை மதிப்பீடுடையதான பணத்தை மத்திய வங்கி அச்சிட்டுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக அரச செலவுகள் வெகுவாக உயர்வடைந்துள்ளதாகவும் அவை வருமானத்தை விடவும் பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள், ஓய்வூதியம் மற்றும் அமைச்சரவைக் கொடுப்பனவுகள் போன்றவற்றினால் அதிகளவு பணத்தை அரசு செலவு செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதேபோன்று வட்டி வீதங்கள் உயர்வடைந்துள்ளதால் அரசு பொருளாதாரச் சமனிலையை ஈடுசெய்துகொள்ளமுடியாத அளவுக்கு பணத்தை அச்சிட்டு வருகின்றது என்பதான குற்றச் சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

> இந்த ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியிலே 217 பில்லியன் ரூபா தொகை மதிப்பீடுடையதான பணத்தை மத்திய வங்கி அச்சிட்டுள்ளது.

## ரூபாவின் பெறுமதியை மத்திய வங்கி நிர்வகிப்பதில்லை

### ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி கைவிரிப்பு



டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை நிர்வகிப்பது தொடர்பிலான நடவடிக்கைகள் எவையும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுவதில்லை என்ற கருத்தை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி வெளிப்படுத்தியுள்ளார். இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

"மத்திய வங்கி இந்த விடயங்களை நிர்வகிக்கும் போது அந்நியச் செலாவணி வீணாக செலவிடப்படும். தவிர செலாவணிக் கையிருப்பு வீழ்ச்சியடைவது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடி நிலைமைகளை ஏற்படுத்திகொள்வதற்கு காரணமாக அமைந்துவிடும்" - என்றார்.

CSE COLOMBO STOCK EXCHANGE


கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

20/7/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -10.76 | 6,684.47 | 6,695.23 |
| S&P SL20 | -0.82 | 3,837.26 | 3,838.08 |
| வியாபாரப்புரள்வு | | 1,005,656,060 | 781,559,550 |
| உள்நாடு- கொள்வனவு | | 313,992,928 | 326,695,456 |
| விற்பனை | | 660,246,660 | 440,202,336 |
| வெளிநாடு- கொள்வனவு | | 691,663,100 | 454,864,096 |
| விற்பனை | | 345,409,344 | 341,357,216 |

| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| எக்போ லங்கா | EXPO.N | 6.70 | 50,123,911 | 325,830,239 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 174.00 | 1,728,977 | 302,149,516 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.R | 9.50 | 4,842,135 | 48,198,456 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி | COMB.N | 137.30 | 280,098 | 38,620,448 |
| சேவ்ரோன் லூப்ரிக்கன் | LLUB.N | 150.00 | 173,741 | 26,175,113 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 955.00 | 23,177 | 22,246,798 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 109.70 | 181,405 | 19,955,131 |
| லங்கா ஐ ஓ சி | LIOC.N | 33.90 | 578,082 | 19,691,140 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 230.00 | 84,318 | 19,390,059 |
| பெஸ்கப்பிற்றல் ஹோல்டிங்ஸ் | CFVF.N | 33.50 | 319,234 | 10,679,743 |




- பங்குலாபம் -

சேவ்ரோன் லூப்ரிக்கன் ரூபா 2.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 249 |
| விலை உழைப்பு | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லியூர்த்தேவி

# உயிர்கள் இடத்தே அன்புகொள்வோம்

## மனதாலும் செயலாலும் ஒருங்கிணைவு பெறும் பணி



இறை இயலின் படைப்பார்ந்த தத்துவங்களிடையே ஆறறிவு படைத்த மனிதர்களும் தனித்துவம் பெறுகின்றனர். பிறப்பு இறப்பு என்ற இரு பெரு நிலைகளிடையே ஆயுளோடு உந்தப்பட்டு இன்ப துன்பங்களையும், மகிழ்வின் நிலைத்திருப்புகளையும் அனுசரித்துப் பயணம் கொள்கின்றனர். ஆணவம், கன்மம், மாயை என்ற இயல்நிலையற்ற உபகாரங்களோடு இணைவுகொண்டு அந்தரிக்கின்றனர். அதனிடை ஆன்மீகம், தியானம், இறை பக்தி வழியே அமைதியின் பிரார்த்தங்களையும் பெற்று ஓய்வு கொள்கின்றனர்.

**பிள்ளைப் பருவம்**

இந்த இயல்நிலைகளின் பாதை ஓரம் மழலையுறுகின்ற பிள்ளைப் பருவம் அற்புதமானது, ஆனந்த மயமானது. கள்ளங்கபடமற்ற குழந்தைத் தனங்களின் நடை பயில்வு அது. உண்மையில் எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் ஆண்டவனின் அருள் உருவம் எனலாம். இந்தக் காலம் என்பது ஆனந்தமாகவும், அமைதி நிறைந்ததாகவும் அமைய வேண்டும். கடவுள் நம்பிக்கை உறுதுணையாக இருக்க வேண்டும். பிரார்த்தனைகளும் அதனோடிணைந்து நீதிக் கதைகளை வாசித்தும் கேட்டும் இருக்கும் பண்பு நிலை வளம் பெற வேண்டும். இதன்படி பிள்ளைப் பருவத்தில் கைக்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்க நெறிகளை தயார் நிலைப்படுத்தும் பணிகளில் பெற்றோர், குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நண்பர்கள் என அனைவருமே முக்கிய பங்காளிகளாக விளங்குகின்றனர். ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டியவர்களாகத் திகழ்கின்றனர்.

இங்கு நீதிக் கதைகள் எனும்போது அவை நல்வழிப்படுத்தல்களையும், அறிவுரைகளையும் வழங்கவல்லன. ஒழுக்கநெறிகளைக் கற்பிக்கின்றன. அந்தவகையிலே ஸ்ரீ இராமகிருஷ்ணபரமகம்சரின் 'உயிர்களிடத்து அன்பு கொள்' என்ற நீதிக் கதைதனைப் பற்றி அங்கு ஊடாடும் வெளிகளை இங்கு நோக்குவோம்.

**உயிர்களிடத்து அன்பு**

நல் அதிகாலை பொழுது மலர்கிறது. வழக்கம். பேரொளியே பகலவன் தன் ஒளிக்கதிர்களை வீசிக் கொண்டு வான வீதியிடை மெதுவாக தோற்றம் தந்து அசைவுறுகிறான். இயற்கை அன்னை இருளின் போர்வை விலத்தி ஒளியின் திருமுகம் கண்டு களிப்புறுகிறாள். இந்த சந்தர்ப்பத்திலே இத்தனை இன்பமயமான காட்சிகளையும் கண் குளிரக் கண்டு களிப்பெய்தினான் யானை முகனான கணேசன்.

**பிள்ளை நேயமான கலை**

இதனிடையே அசைவு கொண்டு இதே கலை ஒளியில் நந்தவனம் சென்று விளையாடலாமே என்றும் நினைத்தான். ஆனாலும் கணேசனோடு விளையாடுவதற்கு தோழர்கள் எவரும் வருகைதரவில்லை. சிந்தனைப் பொழுது அவ்விடமிருந்து நகரவில்லை. அவனுடைய மனம் விளையாட்டு என்ற கலையுணர்வை காண்பியம் செய்வதிலேயே இருந்தது. சமையலறை நோக்கி நகர்ந்தான் கணேசன். தனது தாயார் பார்வதி தேவியின் முதுகைக் தட்டிக் குழைந்தபடி 'அம்மா நான் தோட்டத்துக்கு விளையாடப் போகலாமா..?' என்று குழந்தைத் தனமான கொஞ்சலோடு கெஞ்சிக் கேட்டான். 'சரி போகலாம், ஆனால் விரைவில் திரும்பிவிட வேண்டும்' என்று கூறினாள் பார்வதி. ஆம் அன்னையே என்றவன் ஆர்வ மேலீட்டோடு தோட்டத்துக்கு ஓடினான். அங்கு பூத்துக்குலுங்கிய மலர்களை இரசித்தான். அவற்றைப் கொய்து அவை கொண்ட மனம் கவர் வாசனையை நுகர்ந்து மகிழ்ந்தான். பலவர்ண வண்ணத்துப் பூச்சிகளைக் கண்களுள் புகைப்படம் எடுத்துக்கொண்டான். அவற்றின் அசைவு நோக்கித் தானும் ஓடினான். மரங்களில் ஏறிப் பலகனிகளை உண்டு மகிழ்ந்தான். ஆறங்கரை நாடி நீந்தினான். அழகிய புள்ளி மான்களைப் பிடிக்க முயன்றான். இறுதியில் களைப்படைந்தவனாய் மரத்தடியில் அமர்ந்து கொண்டான்.

**அரவணைப்பு**

இப்போது மியாவ்... மியாவ்....என்று கத்தியடியே கணேசனின் செல்லப் பூனையும் அவ்விடம் வந்தது. கணேசனின் மடி மீது அமர்ந்து கண்ணயர்ந்து தூங்க ஆரம்பித்தது.

இந்த அதிகாலைப் பொழுதில் என்ன தூக்கம் என்று எண்ணியபடி பூனையை தூக்கத்திலிருந்து எழுப்பினான். முன்னங் கால்களைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான். கையில் ஒரு தடியை வைத்துக் கொண்டு தான் சொல்லப் போவதைத் திருப்பிக் கூற வேண்டும் எனப் பணித்தான். ஏதும் புரியாதது போல திரு திருவென்று விழித்துப் பார்த்த பூனை மறுகணமே கணேசனின் மடிமீது ஏறி அமர்ந்து கொண்டு தூங்க ஆரம்பித்தது.

**தண்டனை**

தன் கட்டளைக்குப் பணிய மறுத்த செல்லப் பூனை மீது கோபம் கொண்டவனாய் இறுகப் பற்றியபடி பூனையின் முகத்தில் தன் கைகளால் விறாண்டிக் காயப்படுத்தினான். வேதனை தாங்காது பூனை அவன் மடியிலிருந்து நழுவிக் குதித்து ஓடியது. கணேசன் குழந்தைத் தனத்தோடு தனக்குள் சிரித்துக் கொண்டான். சிறிது நேரம் தோட்டத்தில் சுற்றித் திரிந்து விட்டு வீடு திரும்பினான். தோட்டத்தில் ஓடியாடித் திரிந்ததில் கணேசனுக்குப் பசி உணர்வு இயல்பாய் தொற்றிக் கொண்டது. சமையல் அறைக்குச் சென்ற கணேசன், 'அம்மா உணவு தயாரா..? என்று கேட்டான். பார்வதியும் புன்சிரிப்பு டன் ' எல்லாம் தயாராக உள்ளது கணேசா, கைகால்களை சுத்தம் செய்து வா. அதற்குள் என் காயங்களுக்கு மருந்திடுகிறேன்." என்றார். அம்மாவுக்குக் காயங்களா..? ஒன்றும் புரிய வில்லையே...! என கணேசன் சிந்தனை வயப்பட்டான். தாயின் அருகாகச் சென்று உற்றுப் பார்த்தான்.




அவரின் அழகு முகத்தில் பயங்கரமான கீறல்கள் இருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தான். 'அம்மா, உங்களை இப்படிக் காயப்படுத்தியது யார்..? என வினவினான். பதிலேதும் கூறாத கணேசனின் தாய் தந்தையிடம் கூறிக் கயவனைத் தண்டிக்கும் படியாக செய்கிறேன் என்று கோபமாகக் கூறினார். பின்பு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு 'அந்தக் குற்றவாளி என் அன்பு மகன் கணேசனே. அவனைத் தவிர வேறு யாருமில்லை.' என்றார். தாயார் என்ன கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாதவனாய் கணேசன் அன்னைக்கு நான் துன்பம் இழைத்தேனோ..? அது கனவிலும் நடக்காத காரியமன்றே என உணர்வு நிலைப்பட்டான். இத்தனை நேரமும் நான் தோட்டத்தில் அல்லவா விளையாடிக் கொண்டிருந்தேன். வேறு பையன் ஒருவன் என்னைப்போலவே வேடமிட்டுக்கொண்டு அன்னையைக் காயப்படுத்தியிருக்கக்கூடும் என நடந்தவைகள் பற்றி தன் கணிப்புகளை ஞாபகம் கொண்டான்.

**அறிவுரையும் பரிகாரமும்**

இத்தனை செயல்நிலைகளையும் உ[illegible] கொண்ட பார்வதி 'என் கண்ணே க[illegible] நீ தோட்டத்தில் விளையாடிக் கொண்[illegible] தபோது யாருக்காவது துன்பம் செய்[illegible] என்று கேட்டாள். கணேசனும் 'நான[illegible] டனும் சேர்ந்து விளையாட வில்லை[illegible] எனப் பதிலுரைத்தான். 'நீ உன் செல்[illegible] பூனையுடன் விளையாடி அதற்குத் தீங்[illegible] இழைத்தாயா..?' என்று மீண்டும் வினவி னாள் பார்வதி. இந்த சந்தர்ப்பத்திலே தன் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்த பூனைக்குத் தான் கொடுத்த தண்டனையை கணேசன் நினைத்துப் பார்த்தான். இதற்கும் அன்னையின் முகத்தில் காணப்படும் கீறல்களுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் எனக் குழப்பமடைந்தான். தாயிடமே குழப்பத்துக்கான விளக்கம் தரக் கேட்டான். பார்வதி சிரித்துக் கொண்டு. 'குழந்தாய் நான் உலகத்திற்கே அன்னை என்பது உனக்குத் தெரியுமல்லவா..? நானே இந்த உலகத்திலுள்ள அனைத்து ஜீவ ராசிகளாகவும் இருப்பவள். எனவே எந்த உயிரைத் துன்புறுத்தினாலும் அது என்னைத் துன்புறுத்தியதாகவே அமையும்.' என்றாள். தெளிவு பெற்றவனாய் கணேசன் உண்மை விடயங்களை உணர்ந்து கொண்டான். அன்னையின் முன் மண்டியிட்டு வணங்கினான். பின்பு இன்றுமுதல் மனதாலும் செயலாலும் நான் எந்த ஒரு ஜீவராசிக்கும் துன்பம் தர மாட்டேன் இது சத்தியம் என்று உறுதி மொழி எடுத்துக்கொண்டான்.

ஆக, தெய்வமகன் கணேசன் செய்த சத்தியத்தை நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். இன்பமான வாழ்வியல் பயணத்தை நாடி நகர்ந்திட எல்லா உயிர்களிடத்தும் அதீத அன்பினையும், பரிவினையும் கொண்டிருக்க வேண்டும். நல்லவைகளைச் சிந்திக்க வேண்டும். தீமைகள் விடுத்து நன்மைகள் தரும் ஆனந்தங்களை அரவணைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பெரியோர்களை மதித்து நடக்க வேண்டும். அறிவுரைகளைக் கேட்டு நல்வழிப்பட வேண்டும். குழந்தைகள் மட்டுமன்றி எல்லோருமே இந்த விடயங்களை ஏற்றிருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் துன்பமில்லாமல் அமைதியான இன்பமான வாழ்க்கையை வாழலாம்.



“ தெய்வமகன் கணேசன் செய்த சத்தியத்தை நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். இன்பமான வாழ்வியல் பயணத்தை நாடி நகர்ந்திட எல்லா உயிர்களிடத்தும் அதீத அன்பினையும், பரிவினையும் கொண்டிருக்க வேண்டும். நல்லவைகளைச் சிந்திக்க வேண்டும். தீமைகள் விடுத்து நன்மைகள் தரும் ஆனந்தங்களை அரவணைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பெரியோர்களை மதித்து நடக்க வேண்டும். அறிவுரைகளைக் கேட்டு நல்வழிப்பட வேண்டும். ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி தவறிவிட்டாய் விக்னேஸ்வரா !

நீதியின் தராசு எப்போதுமே சரியாக இருக்க வேண்டும். அது பக்கம் சார்ந்து சரிந்து விடக் கூடாது. ஆள்கள் பார்த்து அவர்களுக்கு ஏற்றால் போல் நீதியை வளைத்து விடக்கூடாது. நீதி நிலைநாட்டப்படுகின்றதோ இல்லையோ ஆகக் குறைந்தது நீதி நிலைநாட்டப்படுவது போலாவது இருக்க வேண்டும். இந்தப் பால பாடத்தை அறியாமல், நீதியரசராக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இருந்திருக்க மாட்டார்.

ஆனால் அவர் இப்போது செய்யும் காரியங்கள், நீதியை மண்ணுக்குள் அடக்கம் செய்யும் வகையில் அமைந்திருக்கின்றன. ஜனரஞ்சகமான தோற்றத்தையும், வசீகரிக்கும் பேச்சாற்றலையும் கொண்டிருக்கும் விக்னேஸ்வரன், அதனை வைத்தே தான் நீதியைக் குழிதோண்டிக்கும் புதைக்கும் செயற்பாடுகளை மூடி மறைத்து வருகின்றார்.

அமைச்சர்கள் மீதான விசாரணைக்குழுவின் விவகாரத்தில் நீதியைச் சாகடிக்கும் நடவடிக்கையில் முதலமைச்சர் ஈடுபட்டார். விசாரணைக்குழு இரு அமைச்சர்களை பதவி விலக்க பரிந்துரைத்த அதே கணத்தில், ஏனைய இரு அமைச்சர்களை விசாரணைகளிலிருந்து விடுவித்தது. ஆனால் விசாரணைக்குழுவின் பரிந்துரைக்கு மாறாக முதலமைச்சர் செயற்பட்டிருந்தார்.

தனக்கு ஏற்றால்போல், விசாரணைக்குழுவின் பரிந்துரைகளை மாற்றிக் கொண்டார். ஏனைய இரு அமைச்சர்களையும் கட்டாய விடுவிப்பில் செல்லுமாறு பணித்ததும், அவர்கள் மீது மற்றொரு விசாரணை நடத்த வேண்டும் என்பதும், முதலமைச்சரது நீதி தவறிய செயற்பாட்டின் விளைவுகள். முன்நோக்கத்துடன், தான் எதிர்பார்த்த முடிவு கிடைக்க வேண்டும் என்பதற்கான செயற்பாடுகளே அவை.

இப்போது கிடைத்த வாய்ப்பை கட்டிப்பிடித்திருக்கிறார் முதலமைச்சர். அதிலும் நீதியிலிருந்து பிறழ்ந்து நடவடிக்கை எடுக்க முற்பட்டிருக்கின்றார்.

பதவி விலகிய இரு அமைச்சர்களின் வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் முதலமைச்சர் கட்சித் தலைவர்களுடன் பேசினார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவுடன் பேசிய போது, அனந்திக்கு அமைச்சுப் பதவி வழங்க இருக்கும் திட்டத்தை முதலமைச்சர் தெரிவித்திருந்தார். அதற்கு மாவை., அனந்தி மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அவருக்கு அமைச்சுப் பதவி வழங்க வேண்டாம். எங்கள் கட்சிக்குரிய அமைச்சுப் பதவியை ஆனோல்ட்டுக்கு வழங்குங்கள் என்று கூறியது. ஆனால் முதலமைச்சரோ, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை வெறுப்பேற்றும் வகையில், அந்தக் கட்சியின் பரிந்துரையை உதாசீனம் செய்து அந்தக் கட்சி வேண்டாம் என்றவரை அமைச்சராக்கி அழகு பார்த்தார்.


இப்போது, ரெலோ அமைப்பு டெனீஸ்வரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததாகச் சொல்லி அவரை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரியது. அதற்கு முதலமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார். இங்கே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரு தீர்ப்பு. அதேபோன்ற விவகாரத்தில் ரெலோவுக்கு ஒரு தீர்ப்பு.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதியை எவ்வளவு தூரம் தூக்கி எறிந்து விளையாடுகின்றார் என்பதற்கு இதைவிட வேறு சிறந்த இலகுவான உதாரணச் சம்பவங்கள் கிடைக்காது.

பக்கம் சார்ந்து, பாரபட்சமாக நடந்து, அதுவும் அதனை வெளிப்படையாகவே செய்யும் இவருக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீண்டும் கொண்டுவந்ததில் தப்பே இல்லை என்று தோன்றுகின்றது.

பத்தி எழுத்து

## வரலாற்றில் இன்றைய தினம் 21.07.2017



1969-சந்திரனில் நடந்த முதலாவது நபரானார் விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங்

356-உலகின் பழைமையான அதிசயங்களில் ஒன்றான ஆற்றிமிஸ் கோவில் திட்டமிட்ட தீ வைப்பினால் எரிந்தழிந்தது

365-கிரேக்க கிரெட் தீவில் ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக லிபியா மற்றும் எகிப்துக் கரைகளில் சூறாவளி தாக்கியதில் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர்.

1831-முதலாம் லியோபோல்ட் பெல்ஜியத்தின் முதலாவது அரசாகப் பதவியேற்றார்.

1907-பயணிகள் நீராவிக் கப்பல் எஸ்.எஸ். கொம்பியா. கல்போர்னியாவுக்கு அப்பால் நீராவிப் படகொன்றுடன் மோதி மூழ்கியதில் 88 பேர் உயிரிழந்தனர்

1925-ரென்னஸி டேய்ரனில், உயர் கல்லூரி ஒன்றின் உயிரியல் ஆசிரியரான ஜோன் ரி.ஸ்கோப் கூர்ப்புக் கொள்கையைக் கற்பித்த குற்றத்துக்காக 100 அமெரிக்க டொலர் குற்றப்பணம் செலுத்தத் தீர்ப்பளிக்கப்பட்டது.

1954-முதலாவது ஜெனிவா மாநாடு வியட்னாமை வடவியட்னாம், தென் வியட்னாம் எனப் பிரித்தது

1969-சந்திரனில் நடந்த முதலாவது நபரானார் விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங்

1970-எகிப்தில் பதினொரு ஆண்டுகளாக அமைக்கப்பட்டு வந்த அஸ்வான் அணைக்கட்டின் கட்டுமானம் நிறைவடைந்தது.

1976-அயர்லாந்து குடியர சுக்கான பிரிட்டன் தூதுவர் ஐ.ஆர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்

1986 -தமிழ்மொழி மாநில கோரிக்கைக்கு அரசின் பதில் ஏதும் இல்லை எனினும் கூட்டணியுடன் ஜே.ஆர். தொடர்ந்து பேச்சு.

2005 -நேபாளத்தின் முதல் அரச தலைவராக ராம் பரன் யாதவ் அறிவிக்கப்பட்டார்.

2016 - மருத்துவமனை நிர்வாகத்துள்ளேயே தாதியர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் அறிவுறுத்தல்.

2016-காணி அளவீட்டை நிறுத்தக் கோரி திருக்கேதீஸ்வரத்தில் கவனவீர்ப்பு.

## ஆடி மாத பலன் 2017

### சிங்கம்

மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

துணிச்சலாக எதையும் செய்து வெற்றிபெறும் சிம்ம ராசியினரே இந்தக் காலகட்டத்தில் ராசிநாதன் சூரியனின் சஞ்சாரத்தால் வீண் அலைச்சல், காரியத் தடை ஆகியவை அகலும். சுக்கிரனால் தடை நீங்கிக் காரியங்கள் நடந்து முடியும். அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த முயற்சி கைகூடும். தேவையான வசதிகள் உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். உடல் சோர்வும், மன குழப்பமும் நீங்கும். செலவு கட்டுக்குள் இருக்கும்.

தொழில், வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்கும். கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் கவனமாக எதையும் செய்வது நன்மையைத் தரும். தேவையான பண உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம் எதிர்பார்த்தபடி காரியம் முடியும். சக ஊழியர்கள் ஆதரவும் இருக்கும்.

குடும்பாதிபதி புதனின் சஞ்சாரத்தின் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கணவன், மனைவி இருவரும் மனம் விட்டுப் பேசுவது நல்லது. குடும்ப விஷயங்களை அடுத்தவரிடம் கூறி ஆலோசனை கேட்பதைத் தவிர்ப்பது நன்மை தரும். குழந்தைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர், நண்பர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது.

பெண்களுக்கு உடல் சோர்வும் திடீர்க் கவலைகளும் ஏற்பட்டு நீங்கும். பணவரத்து திருப்தி தரும். மதிப்பும், மரியாதையும் கூடும்.

கலைத்துறையினர் வாகனங்களை உபயோகப்படுத்தும் போது கவனம் தேவை. பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளை செய்து பக்குவமான அணுகுமுறையைக் கையாள்வது அவசியம். பணவரத்து அதிகரிக்கும். காரியங்களில் தடங்கல்கள் ஏற்படலாம். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும்.

அரசியல்துறையினருக்கு காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். கவனமாகச் செயற்படுவது நல்லது.

**மாணவர்களே:** கல்வியில் வெற்றி பெற எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வீர்கள். சக மாணவர்கள் ஆதரவும் இருக்கும்.

**பரிகாரம்:** பிரதோஷ காலத்தில் சிவனை வணங்குவதன் மூலம் எல்லா நன்மைகளும் உண்டாகும். தடைகள் நீங்கும்.

**மகம்:**
இந்த மாதம் அடுத்தவர் செய்யும் நற்காரியங்களுக்கு ஆதரவாக இருப்பீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறும். உடல் ஆரோக்கி யம் உண்டாகும். வீண்கவலை நீங்கும். தடைபட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை காணப்படும்.

**பூரம்:**
இந்த மாதம் தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இருந்த தடைகள் விலகும். போட்டிகள் குறையும். புதிய கொள்வனவுக் கட்டளைகள் பெறுவதற்கான தடைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான அலைச்சல் குறையும்.

**உத்திரம் 1ஆம் பாதம்:**
இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான போக்கு காணப்படும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் குறித்து கவலை உண்டாகலாம். வீண்செலவு குறையும். பயணங்கள் செல்ல நேரிடலாம்.

### நாளை

22.07.2017
சனிக்கிழமை
ஆடி - 06

திதி: சதுர்த்தசி மா.06.48 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப. 12.50 வரை
சுபநேரம்: 03.01–04.31 வரை
ராகுகாலம்: 09.01–10.31 வரை

போதாயன அமாவாசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

யாழ்ப்பாணம், ஜூலை 21

இந்திய மீனவர்களின் படகுகளை மாத்திரம் விடுவிப்பதா? படகுகளுடன்சேர்த்து உடைமைகளையும்விடுவிப்பதா? இவ்வாறுபருத்தித்துறை நீதிவான் மன்று விளக்கம் கோரியுள்ளது.

இலங்கையில்தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களது 42 படகுகளை விடுவிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் 27 படகுகளும், மன்னாரில் 15 படகுகளும் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள 27 படகுகளில், ஊர்காவற்றுறைநீதிவான் எல்லைப்பிரதேசத்தினுள் 9 படகுகளும், பருத்தித்துறை நீதிவான் எல்லைப்பிரதேசத்தினுள்18படகுகளும்உள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் படகுகளை விடுவிப்பதற்கான பரிந்துரை, யாழ்ப்பாணக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் இரண்டு நீதிமன்றங்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றால் 9 படகுகளையும் அயலுறவுத்துறை அமைச்சிடம் பாரப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. பருத்தித்துறை நீதிமன்றால், படகுகளை மாத்திரம் விடுவிப்பதா? அல்லது படகுகளுடன் உடைமைகளையும் வழங்குவதா ? என்ற விளக்கத்தைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது. (த-5,101)

## பாடசாலைகளில்...

ஓதுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது பற்றிய சுற்றறிக்கை பாடசாலைகளுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் வழிகாட்டலில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தெய்வீக சேவைத் திட்டத்தின் கீழ், இந்து மாணவர் சேவாலயத்தின் முயற்சியால் உருவாக்கப்பட்ட சிவபுராணம் இசை இறுவட்டு நேற்று வெளியிடப்பட்டது.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் பிற்பகல் 3 மணியளவில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. அதில் முதன்மை அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இரவீந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னைய காலங்களில் பாடசாலைகளில் ஆன்மிகம் சார்ந்த செயற்பாடுகள் அநேகம் இடம்பெற்றன. காலப்போக்கில் அவை குறைந்து விட்டன.

பாடசாலைகளில் காலைப் பிரார்த்தனைகளின்போது திருமுறைகள் ஓதப்படுவது வெகுவாக குறைவடைந்துள்ளது. இதனை வளர்த்து மாணவர்களை ஆன்மிகப் பாதையில் வழிநடத்த வேண்டிய கடமை எமக்கு உள்ளது. பாடசாலைகளில் அதிபர்கள் ஆசிரியர்கள் முதலில் இவற்றைச் செய்வதில் முன்மாதியாக இருந்தால்தான் மாணவர்களும் அதன்படி நடப்பார்கள்.

பாடசாலைக் கல்வியை விட தனியார் கல்வியை மாணவர்கள் நாடிச் செல்வதாலும், இத்தகைய ஆன்மிக விடயங்களில் ஈடுபட அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. எல்லாவற்றுக்கும் முன்மாதிரியாக இருந்த எமது சமயம் தற்போது முறையாகப் பின்பற்றப்படாமல் உள்ளது. ஆனால் ஏனைய சமயத்தவர்கள் தமது சமயத்தை வளர்க்கும் நோக்கில் முன்னோக்கிச் செல்கிறார்கள். பாடசாலைக் காலத்தில் மாணவர்களின் ஆன்மிகச் செயற்பாடுகள் வளர்க்கப்பட வேண்டும். பாடசாலைகளில் வெள்ளிக்கிழமைகளில் காலைப் பிரார்த்தனையின் போது சிவபுராணம் ஓதுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அது பற்றிய சுற்றறிக்கை ஒவ்வொரு பாடசாலைக்கும் விரைவில் அனுப்பப்படும். மாணவர்கள் கல்வியை மேலோட்டமாகக் கற்காமல் ஆழமாகக் கற்றால் மாத்திரமே பரீட்சையில் வெற்றி பெறமுடியும். கல்வியுடன் இணைந்ததாகத் தலைமைத்துவதையும் வளர்த்துக் கொள்ளவேண்டும் - என்றார்.

இறுவட்டு வெளியிட உறுதுணையாக இருந்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சிறப்பு அதிதியாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும், மதிப்புறு அதிதியாகக் கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜாவும் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மாணவர்கள் ஆசிரியர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (4,ரி)

## கன்னை...

பட்டமைக்கு ஒட்டுமொத்த உறுப்பினர்களும் கூட்டாக ஒன்றிணைந்து நிதி அமைச்சரிடம் மேன்முறையீடு செய்துள்ளனர்.

நிதி அமைச்சருக்கான மேன்முறையீட்டை, சகல உறுப்பினர்கள் சார்பிலும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எழுத, அந்த மேன்முறையீட்டுக் கடிதத்தை, முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பித்த கே.சயந்தன் மற்றும் அஸ்மின் ஆகியோர் நிதி அமைச்சரிடம் கொண்டு சென்று கையளித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. அதிஉச்சபட்சமாக 40 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனத்தை இறக்குமதி செய்யும்போது 65 சதவீதம் வரி விலக்கு கிடைக்கும் வகையிலான அனுமதிப் பத்திரமே வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அதிஉச்சபட்சமாக 45 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனத்தை இறக்குமதி செய்யும்போது 70 சதவீதம் வரி விலக்குக் கிடைக்கும் வகையிலான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

இந்தப் பாரபட்சம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் அனைவரும் கவலையடைந்துள்ளனர். இது தொடர்பில் கொழும்பு அரசின் நிதி அமைச்சுக்கு மேன்முறையீடு செய்ய உத்தேசித்தனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் சார்பில், எம்.கே.சிவாஜிலிங்கம் முதலமைச்சருடன் இது தொடர்பில் பேசியுள்ளார். முதலமைச்சர், மாகாண சபை உறுப்பினர்களின் மேன்முறையீட்டுக் கோரிக்கையை ஏற்றுள்ளார். நிதி அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தை, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான கே.சயந்தன், அஸ்மின் ஆகியோர் நிதி அமைச்சரிடம் எடுத்துச் சென்று சமர்ப்பித்துள்ளனர். நிதி அமைச்சருடன் இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். நிதி அமைச்சர் சாதகமான பதிலை வழங்கவில்லை என்று தெரியவருகின்றது.

இதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, ஆளும் கட்சி இரண்டு அணியாகக் கன்னை பிரிந்து மோதிக்கொண்டிருந்த ஏக காலத்திலேயே, இந்த விடயமும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (த-5)

### பெயர் மாற்றம்

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியில் வசிக்கும் **கந்தசாமி சுசீலா** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **கந்தசாமி சுசீலா தேவி** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

- கந்தசாமி சுசீலாதேவி -

### வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் எமது **டிஷ்அன்ரனா உபகரணங்கள் விற்பனை/பொருத்துதல்/ றிப்பயர் செய்யும் நிறுவனத்துக்கு** கீழ்காணும் வெற்றிடங்கள் உண்டு உணவு தங்குமிடத்துடன் திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.

- **விற்பனையாளர் (கடையில் மட்டும் விற்பனை)**
- **டிஷ் அன்ரனா பொருத்துனர்**
- **கிளீனிங் மற்றும் ஸ்டோர்உதவியாளர்.**

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

தொடர்பு: T. குமார்
077 771 0785




### வாடகைக்கு

கொழும்பு Deans Road இல் கண் ஆஸ்பத்திரி. U.K. விசா காரியாலயம் இவற்றுக்கு அருகில் அறைகள் நாள், வார வாடகைக்கு விடப்படும்.

077 378 7373

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

கைதடி கோப்பாய் சந்தியிலிருந்து 150 M தூரத்தில் A9 பாதைக்கு அருகில் பொன்னம்பலம் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் 8.5 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு.0714765998

### மணமகள் தேவை

செவ்வாய் குற்றமற்ற சக்தி வாய்ந்த சாதக அமைப்புள்ள மகம் நட்டசத்திரத்தில் 1981 ஆம் ஆண்டு பிறந்த குருக்களுக்கு மணமகள் தேவை.

திருஞானசம்பந்தர்
C/o : ஜே.சிவகணேஸ்
40, சமாது ஒழுங்கை,
திருகோணமலை.
071 847 4668/072 330 7623




### வேலை வாய்ப்பு

**கொழும்பிலுள்ள விளம்பரத் தட்டிகள் தயாரிக்கும் நிறுவனமொன்றிற்கு வெல்டிங்வேலை, கூலிவேலைகள் ஆகியவற்றிற்கு ஆள்கள் தேவை.**

சம்பளம் - 25000/- தங்குமிடவசதிகள், உணவு, மேலதிக நேரக்கொடுப்பனவுகள் ஆகியன உண்டு.

யாழ். 075 709 0632
கொழும்பு - 071 685 5942

## சுவிசேஷ விடுதலைப் பெருவிழா

கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.
தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்.
தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்
மத்தேயு :- 7:7



**அன்பான சகோதர சகோதரிகளுக்கு இறைவனின் திருநாமத்தில் வாழ்த்துக்கள்**

வியாதிகள், பாவக்கட்டுக்கள், பிசாசின் பிடி, நோய்களினால் நிம்மதி இல்லாத வாழ்க்கை வாழ்ந்து குடும்பத்திலும் சமாதானமில்லாது சண்டைகளால் எல்லாவற்றையும் இழந்து மரணம்தான் முடிவென்று எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் ஜனங்களே உங்கள் விடுதலைக்காக நடத்தப்படும் இந்த சுவிசேஷ பெரு விழாவுக்கு வாருங்கள். தேவனால் உலகெங்கும் வல்லமையாய் பயன்படுத்தப்படும் தேவமனுஷனால் உங்களுக்காக ஜெபிக்கப்படும். நிச்சயமாக விடுதலையை இயேசு உங்களுக்குக் கொடுப்பார்.

இடம் :- ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கு
காலம் :- 22,23 ஜூலை 2017 (சனி, ஞாயிறு)
நேரம் :- மாலை 5.00 மணி

ஒருங்கமைப்பு:- தேவவார்த்தை மிஷனறி சபை (ஊர்காவற்றுறை)
தலைமைப் போதகர் அ.அருள்ராஜா
தேவவார்த்தை மிஷனறிசபை, ஊர்காவற்றுறை, இலங்கை.
077 600 0542

வணபோதகர் சுவிசேஷகர் பாஸ்கரன்
விசுவாச வாழ்வு திருச்சபை
நெதர்லாந்து 077 600 0937
george.kathiresu@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கூழாமுறிப்புக்...

யாக விசாரணை நடத்தப்படவேண்டும். இந்தத் தீ இயற்கையாக உருவானதாகத் தெரியவில்லை. திட்டமிட்ட ரீதியில் இதனை எரித்ததாகவே வலுவாகச் சந்தேகிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் கூழாமுறிப்புப் பகுதியில் காடழித்து குடியேற்றம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பில் கடும் விவாதம் நடைபெற்றது.

சட்டவிரோத காடழிப்பு, குடியேற்றத்தை எதிர்த்து இளைஞர்களால் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில், கூழாமுறிப்புக் காட்டின் ஒரு பகுதி தீயில் எரிந்து சாம்பராகியுள்ள சம்பவம் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

இது இயற்கையாக நடந்ததைப் போன்று தெரியவில்லை. திட்டமிட்ட ரீதியில், காட்டை அழித்து வெட்டவெளியாக்கும் முயற்சியின் முன்நகர்வாகவே நோக்கவேண்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணியற்ற தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு காணி வழங்கப்படுவதை யாரும் எதிர்க்கவில்லை. ஒரு சமூகத்துக்கு மாத்திரம் காணிகள் வழங்கப்பட்டுக் குடியேற்றம் நடைபெறுவதைத்தான் எதிர்கின்றோம். எமது மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து வருகின்றார்கள். வன்னியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர், இரு இனங்களிடையேயும் விரிசல் ஏற்படுத்தி, இனவாதத்தைக் கிளறி விடும் வகையில் செயற்பட்டு வருகின்றார். முஸ்லிம் மக்களே அவரால் பாதிக்கப்பட்டும் இருக்கின்றனர்.

இந்தப் பின்னணிகளை எல்லாம் அடிப்படையாக வைத்து நோக்கும் போது, இந்தக் காடு தீயில் எரிந்து சாம்பரானதை வெறும் சாதாரண சம்பவமாகக் கடந்து செல்ல முடியாது. மாவட்ட நிர்வாகம், எவருக்கும் பக்கம் சாராமல் உரிய விசாரணை நடத்திக் குற்றவாளிகள் கண்டறியப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றேன் என்றுள்ளது. (த-5)

## ரணிலை...

ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலியும், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் உடனிருந்தனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜூன் மாதம் அமெரிக்கா சென்றபோது ஜெப்ரி பெல்ட்மனைச் சந்தித்து அரசமைப்பு மறுசீரமைப்பு, நல்லிணக்கம் போன்றவற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகள் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, ஜெப்ரி பெல்ட்மன் மற்றும் அனைத்து மத பேரவைப் பிரதிநிதிகளையும் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான செயலர் ஜெப்ரி பெல்ட்மன் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவருமான இரா.சம்பந்தனை இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (ற)

## கட்சிகளின்...

தாக கட்சிகள் தமது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வு இல்லாத நிலையிலும், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றது. மகிந்த அணியினர் கலந்துகொள்ளவில்லை. இதற்கான முன்னறிவிப்பை வழிநடத்தல் குழுவுக்கு அவர்கள் வழங்கியிருந்தனர்.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் ஏற்கனவே ஆராயப்பட்ட விடயங்கள் மீள்பரிசீலனை செய்து நேற்று இறுதிப்படுத்தப்பட்டது. அதில் சில திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இறுதிப்படுத்தப்பட்ட இடைக்கால அறிக்கை, அனைத்துக் கட்சிகளும் கையளிக்கப்பட்டுள்ளது. இடைக்கால அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விடயங்களுடன் முரணான நிலைப்பாடு காணப்படுமாயின் அது தொடர்பில் எதிர்வரும் செவ்வாய்க் கிழமைக்கு முன்னதாக அறிக்கையாகத் தருமாறு கோரப்பட்டுள்ளது. அவற்றை இடைக்கால வரைவுடன் இணைப்புச்செய்து, அரசியல்நிர்ணயச்சபைக்கு சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (த-5)

## மக்களின்...

யாழ்ப்பாணம், ஜூலை 21

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அதேபோன்று கடல்நீர் வற்றிப் போனதால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப் பரிந்துரைக்கலாம் என்று கருதுகின்றேன். எங்களுக்கே குடிதண்ணீர் போதாமல் உள்ளபோது, இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் மக்களின் குடிதண்ணீர்க் கிணறுகளை வைத்திருப்பது குற்றம். இல்லையென்றால் அது பாவம்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், இடர்முகாமைத்துவ அமைச்சின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

12 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளவைக் கொண்ட 20 பவுசர்கள் வறட்சியை எதிர்கொள்ள அவசர தேவையாக உள்ளன. லொறிகளில் பொருத்தப்பட்ட பவுசர்களாக அவை இருப்பதே எமது பகுதிகளுக்குப் பொருத்தமானது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் தண்ணீரைப் பெறுவதற்கு வசதியாகக் குறைந்தது 500 நீர் தாங்கிகளாவது நிறுத்திகளுடன் தேவை.

இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ள பொதுக் கிணறுகள் பிரதேச சபைகளிடம் கையளிக்கப்படவேண்டும். மக்களுக்குத் தண்ணீர் அவசியமாக இருக்கும்போது கிணறுகளை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது குற்றம். இல்லையென்றால் அது பாவம்.


எமக்கே வளங்கள் போதாமல் இருக்கும் போது இராணுவத்தினரும் எமது வளங்களைப் பங்கிடுவதாலேயே அவர்களைக் குறைக்குமாறு கோரி வருகின்றேன்.

வடக்கில் உள்ள பல கிணறுகளையும் நீர்த் தாங்கிகளையும் உடனடியாகச் சீரமைக்க வேண்டியிருப்பதும் ஒரு அவசர தேவை. கிணறுகளை ஆழமாக்கி, அவற்றைச் சரிவரக் கட்டுவதன் மூலம் எதிர்காலத்திலாவது மழைநீரைத் தேக்கி வைத்து மக்களின் தேவைக்கான குடிதண்ணீராகப் பயன்படுத்த முடியும். ஒரு குளத்தில் இருந்து வெளியேறும் மேலதிக நீரை மற்றொரு குளத்திற்கு எடுத்துச் செல்லத்தக்க வகையிலான கால்வாய்களையும் நாம் உருவாக்கவேண்டும். மழைநீரைத் தேக்கி வைப்பதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள் ஒவ்வொன்றும் மழைநீரைச் சேமிக்கக்கூடிய வசதிகளுடன் உருவாக்கப்படுவது கட்டாயம். இது தொடர்பான நியதிச் சட்டங்களை நாங்கள் உருவாக்க வேண்டும். சாதாரண மக்களும் இது போன்ற மழை நீர் சேமிப்புத் தாங்கிகளை அமைப்பதற்க அவர்களுக்குச் சிறு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவேண்டும். வெள்ளம் மற்றும் வறட்சிஎன்பவற்றை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் 5 ஆண்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோமானால் சிறந்தது என்றார். (த-5.8)



---

**45 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 10.06.2017
சனிக்கிழமை
சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர் **யோகரட்ணம் தஜேந்திரன் (பவா)**

அவர்களின் 45 ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் நாளை (22.07.2017) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 24.07.2017 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.55/4, கணேசபுரம், கிளிநொச்சி.
077 127 0470/ 077 730 4354

**குடும்பத்தினர்.**

---

**14 ஆம் ஆண்டில் பனித்திடும் நினைவுகள்**

**ஏந்திழையே! எங்குற்றாய்?**

மண்ணில் 04.09.1943 — விண்ணில் 21.07.2003



திதி: அபரபக்க ஸப்தமி (30.07.2017)

**திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம்**

பூவுடனும் பொட்டுடனும்
பூவுலகை விட்டேகும்
மேவியவுன் மேலெண்ணம்
மேதினியில் பொய்க்கவில்லை

ஓவியமா யாகிடினும்
உன்னன்பு குன்றாது
தேவியுந்தன் வழிகாட்டல்
தெப்பமெனக் கரைசேர்க்கும்

பிரிவுத் துயரால் பெருநோயுறும்...

துணைவன், பிள்ளைகள்,
மருகன், மருகிகள்,
பேரர்கள்:- விதுரன், திவ்யன், நித்யன், சௌமியன், சௌமியா

சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

---

**ஈராண்டு நினைவலைகள்**



மண்ணில் 16 . 07 . 1971 — விண்ணில் 12 . 08 . 2015

**திருமதி சர்வாஜினி சுரேஸ்**
(விஞ்ஞான ஆசிரியை வேலணை மேற்கு)

பெற்றவர்க்கு பெருமை தரும் புத்திரியாய்
உற்றவர்க்கு உதவிசெய்யும் உத்தமியாய்
உடன் பிறந்த சகோதரர்க்கு இனியவளாய்
கரம் பிடித்த கணவனுக்கு அருந்துணையாய்
என்றும் ஒளி விசும் அகல் விளக்காய்
இருந்தாயே எமது அருமைச் சர்வாஜினியே
பிள்ளைச் செல்வம் பெற்றெடுக்கும் ஆசையிலே
அயல் நாடு சென்றிருந்த வேளையிலே
அழகான இரட்டைச் செல்வங்களைப் பெற்றுவிட்டு
ஆரோக்கியம் இழந்து நோய்க்கு ஆளாகி
அணைந்த தீபமாய் ஆனாயே சர்வாஜினியே
ஈராண்டுகளாகியும் உனைப் பிரிந்த
ஏக்கம் இன்னும் தீரவில்லை
நீர் பெற்று தந்த மழலைச் செல்வங்களின்
மழலை மொழியிலே மனம் தேறமுயன்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் அழுகையாய் வருகிறது
மீண்டும் ஒரு பிறப்பு எடுத்து
எங்களிடம் வரவேண்டும்
இறைவனிடம் கேட்கின்றோம்.

[illegible] மேற்கு.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரிபால...

வர்த்தமானியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கையெழுத்திட்டார். அரசின் இந்த முயற்சியை, ஐ.நா. மற்றும் அமெரிக்கா என்பன உடனடியாகவே வரவேற்றுள்ளன.

இந்த அலுவலகமானது, அரச தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் கட்டுப்பாட்டில், தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் கீழேயே செயற்படவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம் இலங்கையில் நீண்ட காலமாகத் தொடர்கின்றது. இந்த விடயத்தில் அரச தலைவர் ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டபோதும் தீர்வு காணப்படவில்லை. இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கு இலங்கை அரசு இணங்கியது.

2016ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது. அதே மாதம் 23ஆம் திகதி சபாநாயகரால் வரைவு கையெழுத்திடப்பட்டது. இதன் பின்னர் பாதுகாப்புத் தரப்பினர் தமது கரிசனைகள் அடங்கிய 15 பக்க அறிக்கையை அரச தலைவரிடம் கையளித்தனர். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் கையெழுத்திடுவதில் அரச தலைவர் காலத்தை இழுத்தடித்து வந்தார். இதற்கிடையில் மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைக்கப்பட்ட திருத்தம் சட்டவரைவில் உள்வாங்கப்படவில்லை என்ற சாட்டுச் சொல்லப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியினரின் திருத்தத்தையும் உள்வாங்கி திருத்திய சட்டவரைவு நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் 21ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு கிட்டத்தட்ட ஒரு மாதத்தை நெருங்கும் நிலையிலேயே, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அலுவலகத்தை நிறுவுவதற்கான வர்த்தமானியில் கையெழுத்திட்டுள்ளார். இது தொடர்பில் தனது கீச்சகப் பதிவில், நாட்டின் நிலையான சமாதானத்துக்கு இது மற்றுமொரு உந்துசக்தியாக அமையும், என்று குறிப்பிட்டுள்ளார்.

அரச தலைவர் கையெழுத்திட்ட அறிவிப்பு வெளியான பின்னர், இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் ஆகியோர், இதனை வரவேற்று கீச்சகப் பதிவிட்டுள்ளனர். (த-5)

## முல்லை...

வும் காரணம். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், இடர்முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தலைமையில் நடந்த கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாம் வறட்சியை எதிர்கொள்வதற்குக் காடுகளை அளவு கணக்கில்லாமல் அழித்தமைதான் காரணம் என்று சுற்றுச்சூழலியலாளர்களும் இயற்கை அறிஞர்களும் கூறுகின்றார்கள். இடப்பெயர்வுக்கு முன்னர் தாங்கள் நட்ட மரங்கள் இப்போது ஓங்கிப் பெருத்து வளர்ந்திருப்பதை மக்கள் அடையாளம்காட்டுகின்றனர். ஆனால், கூழாமுறிப்புப் போன்ற இடங்களில் ஒரு குறிப்பிட்ட மக்களுக்குக் காணிகளை வழங்குவதற்காகக் காடுகளை அழிக்கின்றோம். இதுபோன்ற செயல்களால்தான் எமது மழை வீழ்ச்சி பாதிக்கப்படுகின்றது. முல்லைத்தீவு நகருக்கும் மன்னாரின் நானாட்டானுக்கும் இடைப்பட்ட பகுதியில் 3 அல்லது 4 இடங்களில் காடுகள் அழிக்கப்பட்டிருப்பதை கூகிள் படங்கள் மூலம் காணலாம். இது குறித்து நான் அரச தலைவரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் கவனத்துக்குச் சில காலத்துக்கு முன்னர் கொண்டு சென்றிருக்கின்றேன். இதனை யார் செய்தார்கள் என்று தெரியாது. ஆனால் இந்த மாதிரிக் காடுகளை அழிப்பதுதான் வறட்சிக்குக் காரணமாகின்றது - என்றார். (த-5,8)

## பிளவுண்டது...

டுள்ளது. இதனால் அந்த அணி இரண்டாகப் பிளவடைந்துள்ளது.

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, அரசியல் நிர் ணய சபையிலிருந்து வெளியேறியுள்ளபோதும், மகிந்த அணியின் ஏனைய் உறுப்பினர்கள் அதிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை என்று, அந்த அணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணி யின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும், தாம் அரசியல் நிர்ணயச் சபையிலிருந்து வெளியேறுவதாக, சபாநாயகரிடம் நேற்று முன்தினம் கடிதம் கையளித்துள்ளனர்.

இது தொடர்பில், தேசிய சுதந்திர முன்னணியையும் உள்ளடக்கிய மகிந்த அணியினரான பொது எதிரணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தனவிடம் கேட்டபோது, அரசியல் நிர்ணயச் சபையிலிருந்து பொது எதிரணி வெளியேறவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதுவரை நாங்கள் இந்த விடயம் குறித்து இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் நாங்கள் தொடர்ச்சியாகப் பேச்சுகளை நடத்தி வருகின்றோம். தற்போதைய சூழலில் அரசியல் நிர்ணயச் சபை மற்றும் அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவில் பொது எதிரணி தொடர்ச்சியாகப் பங்குபற்றி வருகின்றது. விரைவில் இந்த விடயம் தொடர்பில் பகிரங்கமாக அறிவிப்போம் - என்றார். (த-5)

## வாகன...

னர். அனுமதிப் பத்திரம் ஒன்று 65 இலட்சம் ரூபாவிலிருந்து 70 லட்சம் ரூபா வரை விற்பனையாகியுள்ளதாக அறிய முடிகின்றது.

வடக்கு மாகாண சபை 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் செயற்பட ஆரம்பித்தது. மாகாண சபை உறுப்பினர்களாக 3ஆண்டுகள் பதவி வகித்தவர்களுக்கே தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் என்று அரசு தெரிவித்திருந்தது. தொடர்ச்சியாக வடக்கு மாகாண சபை கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில், சிறப்பு அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. மாகாண சபையில் 3ஆண்டுகளைப் பூர்த்தி செய்த, ஏற்கனவே வாகன அனுமதிப் பத்திரம் பெற்றிராதவர்களுக்கு ஒன்றரை மாதத்துக்கு முன்னர் வழங்கப்பட்டன.

வாகனங்கள் தேவை என்று தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் கிடைத்ததும் வாகனங்களைக் கொள்வனவு செய்யவில்லை. வாகனங்களை இறக்குமதி செய்யும் தரகர்களை நாடினர். அவர்களுக்கு தமது தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தை விற்பனை செய்தனர். ஆகக் கூடுதலாக 70 இலட்சம் ரூபா வரை இதுவரை அனுமதிப் பத்திரம் விற்பனையாகியுள்ளது. 65 லட்சம் , 63 லட்சம் ரூபாவுக்கும் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் தரகர்களிடம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் மாத்திரம் அன்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களுமே இவ்வாறு விற்பனை செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (த-5)

## வறட்சிப்...

நிரந்தரத் தீர்வுக்கான, நீடித்த திட்டம் உருவாக்கப்படவேண்டும். அதற்கு வடக்கு மாகாண முதலமைச்சரின் பங்களிப்பும் தேவை.

இவ்வாறு இடர்முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறட்சியை இங்கே சமாளிப்பதற்குக் கொழும்பு அரசின் பங்களிப்புச் செய்யவேண்டியதன் தேவையை நேரடியாக அறிந்து கொண்டுள்ளோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு, அவசர தேவைக்காக நிதி வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதனை அந்தத் தேவைக்கு மாத்திரம் தனியான கணக்குகள் ஊடாக மாவட்டச் செயலர்கள் கையாள முடியும்.

இந்த ஆண்டில் நாம் ஏற்கனவே சில பவுசர்களை யாழ்ப்பாணத்துக்கும் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் வழங்கியிருக்கின்றோம். மற்றொரு லொறி பவுசரை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு வழங்கவும் ஏனைய மாவட்டங்களில் இருந்து தற்காலிகமாகச் சில பவுசர்களைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுப்பேன். யாழ்ப்பாணத்துக்கு மேலும் பவுசர்கள் தேவையாக இருக்கின்றன என்பதையும் அமைச்சரவைக்கு அறிவிப்பேன்.

பவுசர்களை இயக்குவதற்கு ஏதுவாக மேலதிக சாரதிகளையும் உதவியாளர்களையும் ஆள்சேர்ப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் மேலதிகமாகப் பணியாற்றவும் தயாராக இருக்கவேண்டும். உங்களால் பவுசர்களை வாடகைக்குப் பெறமுடிந்தால், தயவுசெய்து அதனையும் நடைமுறைப்படுத்துங்கள். அவற்றின் உரிமையாளர்களுக்கு உரிய பணத்தைச் செலுத்தவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

தண்ணீர் வழங்குவதற்கு எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்க நான் விரும்பவில்லை. போதியளவு நீர் மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். தண்ணீர்த் தாங்கிகள் வேண்டும் என்று முதலமைச்சர் கோரியிருந்தார். உடனடியாகவே நாம் அவற்றை வழங்குவோம். இவை எல்லாம் தற்காலிகத் தீர்வுகள். உங்களுக்கு நிரந்தரத் தீர்வும் தேவை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். கடந்த வருடங்களில் இதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் பயன்களைப் பெறுவதற்கு நாம் சில காலங்கள் காத்திருக்க வேண்டும். எப்படியிருப்பினும் இந்த மக்களுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் என்ற விடயத்தை நான் அமைச்சரவையின் முன் வைப்பேன். குறிப்பாகத் தீவகப் பகுதி மக்களுக்கு நிரந்தரத் தீர்வு அவசியமாக உள்ளது.

யாழ்ப்பாணம் நகரம் எதிர்காலத்தில் மிகப் பெரிதாக வளரப் போகிறது. இங்கு தண்ணீரை எப்படிச் சிக்கனமாகப் பயன்படுத்துவது, முகாமை செய்வது என்பது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதும் அவசியம். பாடசாலைகள், மற்றும் பொது நிறுவனங்கள் ஊடாக இது மேற்கொள்ளப்படலாம். அது பற்றியும் எமது அதிகாரிகள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள் என்றார். (த-5,8)


## மரண அறிவித்தல்

### திருமதி கோகிலம் பூபாலசிங்கம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோகிலம் பூபாலசிங்கம் நேற்று (20.07.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அழகக்கோன் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், மாலினி, பவானி, நளாயினி, சுரேஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் வரதராஜன், சத்தியகலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செல்லம்மா, காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் குணவதி, கோபாலு, ருக்மணி தேவராசா, கமலாதேவி, விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருளம்மா, நவரத்தினம், மகாலிங்கம் மற்றும் மோகனதாஸ், கனகலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பிருந்தா, தனுசியா சுரேஸ்வரன், ஆறுமுகதாசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஸாத்வீகா, ஹம்சிகா, கீர்த்தனன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2017) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**221/5, கண்டி வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
01
.
09
.
1945



**மறைவு**
19
.
07
.
2017

### சின்னத்தம்பி மகேஸ்வரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், D8 உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும், 63/1, திருவையாறை நிரந்தர வசிப்பிடமாகவும், 114/2, திருவையாறை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகேஸ்வரன் 19.07.2017 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசமணி தம்பதிகளின் மருமகனும், சாரதாதேவியின் அன்புக் கணவரும், செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான கல்யாணியம்மா, பரமேஸ்வரன், இராஜேஸ்வரன் மற்றும் மாரியம்மா (ராணி), கெந்தீஸ்வரன், புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமலர், சரஸ்வதி, மகாலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சுகந்தினி, சுதர்சன் (பிரான்ஸ்), முகுந்தன் (ஒப்பந்தகாரர் - இலங்கை மின்சார சபை- கிளிநொச்சி), கிருசாந்தினி, துஷ்ஷியந்தினி (ஆசிரியர் - கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்), கோபிராஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிமலன், சோபனா, சாந்தி, பாலமுரளி (செல்வம்), நடனறஞ்சன், பாமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், செந்தூரன், சிந்துஜன், பிரியங்கா, டன்சிகா, அஸ்வின், யுவன், வேந்தன், அரவின், மதுசுஜன், மகிழரசி கபினுஜன், பானுஜா, சர்விகா, சரண்ஜா, கஜானன், சங்கஜன், கஜமுகிலன், புவிதன், பவிஷன், பேரரசி, பிரசன்ஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூர்வக் கிரியைகள் இன்று (21.07.2017) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் 114/2, திருவையாறு இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து சமாதிக் கிரியைகள் இரணைமடு இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 020 0124, 077 216 9181**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L தொழில் நுட்ப பிரிவு

**விசேட செயலமர்வு A/L 2017**

E Tec - பானுயன்
(விரிவுரையாளர், தொழில்நுட்பப் பீடம்)
SFT - மதுசுதன் (யாழ் பல்கலைக்கழகம்)
Bio Tec - சசிகரன்
(ஸ்கந்தவரோதயாக்கல்லூரி)

**22, 23 ஆம் திகதி சனி, ஞாயிறு**
**நேரம் 9.00 - 2.00**
**இடம் குளப்பிட்டிச் சந்தி (100 m)**
**உயர் கலைக்கல்லூரி**
**தொடர்பு . 077 017 5346**

குறிப்பு: யாழ், கிளிநொச்சி மாவட்ட நிலை 1 அனுமதி இலவசம் மாணவர்களின் விசேட கருத்தரங்கு இடம்பெறும்.

## தொழில்நுட்ப பயிலுநர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு தொழில்நுட்ப பயிலுநர்கள் தேவை. 3 மாத பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் 20 ஆயிரத்துக்குக் குறையாத சம்பளம் வழங்கப்படும்.

**077 311 9298**

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HONDA VEZAL ZGRADE 2014 உடனடி விற்பனைக்கு.

**077 101 1111**

## வேலையாள்கள் தேவை


பின்வரும் தொழிலாளர்கள் நமது நிறுவனத்திற்கு வேலை செய்வதற்கு உடனடியாக தேவைப்படுகின்றார்கள்.

**மேசன்**
**மேசன் உதவியாளர் (கூலியாள்கள்)** } தங்கி நிற்பவர்களும் வரலாம்.
**கம்பி வேலை தெரிந்தவர்கள்** (Bar bender)

உடனடியாக யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்கு தேவை.

**கோப்பாய் மத்தி.**
**கோப்பாய்.** 075 919 9759

# இதய அஞ்சலி



மண்ணில் . 07 . 04 . 1970
விண்ணில் . 18 . 07 . 2017

**வைத்திய கலாநிதி**
**இரத்தினேஸ்வரன் சுரேஷ்**

தங்களது திடீர் மரணச்செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம். அன்பும் பண்பும், அடக்கமும், உயர்ந்தசேவையுள்ளமும், நிறைந்த தங்களது இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். தங்களது இழப்பால் துயருறும் அன்புத் தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு தங்களது ஆத்மா இறைவனது திருவடியை அடைய மனப்பூர்வமாக பிரார்த்திக்கின்றோம்.

நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

அயலவர்கள்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 08.06.2017
அன்று
இறைபதமடைந்த
எமது குடும்ப
குல விளக்கு

**திருமதி**
**லலிதாராணி**
**உதயசீலன்**
**(குட்டி)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (22.07.2017) சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்நிகழ்விலும் தொடர்ந்து 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டிகரண நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய கடற்கரை,
தொண்டைமனாறு.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## DR. இரத்தினேஸ்வரன் சுரேஷ்

**Doctor (மெல்பேர்ன், ஆஸ்திரேலியா)**
**(பழைய மாணவன் கொழும்பு றோயல் கல்லூரி,**
**பழைய மாணவன் யாழ். இந்துக்கல்லூரி,**
**14 ஆவது அணி மருத்துவபீடம் யாழ்ப்பாணம்)**

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் தற்போது மெல்பேர்ன் ஆஸ்திரேலியாவில் வசித்து வந்த **Doctor** இரத்தினேஸ்வரன் சுரேஷ் (18.07.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் ஆஸ்திரேலியாவில் அகால மரணமானார்.

அன்னார் அராலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இளையதம்பி இரத்தினேஸ்வரன் (பபா) நாரந்தனை வடக்கை பிறப்பிடமாக கொண்ட அனந்தலெட்சுமி (ஆச்சி) தம்பதியரின் அன்புமகனும் வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பேராசிரியர் செல்லத்துரை பாலச்சந்திரன் மற்றும் சத்தியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் நளாயினி (முன்னாள் உத்தியோகத்தர்- தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) யின் அன்புக்கணவரும் நிதுஷன், அக்ஷனா ஆகியோரின் அன்புத்தந்தையும் ரமேஷ் (கிராம உத்தியோகத்தர், இணுவில்), சுதர்ஷன் (மென்பொருள் கணினியாளர் கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரரும் உதயராணி, வினுஜா, றோகினி (லண்டன்), சுபாசினி (கொழும்பு), பாலமுரளி (ஆஸ்திரேலியா), இராஜமுரளி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மெல்பேர்ன் ஆஸ்திரேலியாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

**271/1A, நாவலர் ஒழுங்கை,**
**ஆனைப்பந்தி. 077 614 5232**

**தகவல்: தாய், சகோதரர்கள், குடும்பத்தினர்.**

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை - 2017

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரார்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டடம் மற்றும் வீதி நிர்மானத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் தரத்தினை கொண்டிருப்பதோடு பொது நிதி சுற்றறிக்கை. இல. 4/2016 (i) இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 0212216468, 0212222019) என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் வேலைநாள்களில் மு.ப. 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை 21.07.2017 - 11.08.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 21.07.2017 ஆம் திகதியில் இருந்து 11.08.2017 வரை மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 மற்றும் வற் (VAT) வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 14.08.2017 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாள்களுக்கு (30.10.2017 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 04.08.2017 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்பு பிணை தொகை | செல்லுபடி ஆகும் காலம் |
| 1 | JMC/WD/06/PSDG /2017/09 | வளன்புரம் உப ஒழுங்கைகள் கொங்கிறீற் வீதி அமைத்தல் | 9.584 | 02 மாதங்கள் | C7 வீதி | 96,000.00 | 27.11.2017 |
| 2 | JMC/WD/06/PSDG /2017/10 | ஆஸ்பத்திரி வீதி 1ஆம் ஒழுங்கை புனரமைப்பு | 0.757 | 02 மாதங்கள் | C9 வீதி | 9,000.00 | 27.11.2017 |
| 3 | JMC/WD/06/PSDG /2017/11 | மரக்கறிச் சந்தை அமைத்தல் கல்வியங்காடு | 7.753 | 03 மாதங்கள் | C7 கட்டடம் | 78,000.00 | 27.11.2017 |
| 4 | JMC/WD/06/PSDG /2017/12 | பழக்கடை புனரமைப்பு | 2.246 | 02 மாதங்கள் | C8 கட்டடம் | 23,000.00 | 27.11.2017 |
| 5 | JMC/WD/06/PSDG /2017/13 | மரத்தினாலான உற்பத்திப் பொருள் காட்சிப்பீடம் அமைத்துப் பொருத்துதல் | 2.075 | 02 மாதங்கள் | C8 கட்டடம் | 21,000.00 | 27.11.2017 |
| 6 | JMC/WD/06/PSDG /2017/14 | குருநகர் சந்தை புனரமைப்பு | 6.290 | 03 மாதங்கள் | C7 கட்டடம் | 63,000.00 | 27.11.2017 |
| 7 | JMC/WD/06/PSDG /2017/15 | தீயணைப்புக் கட்டடம் அமைப்பு கட்டம் - III | 8.183 | 03 மாதங்கள் | C7 கட்டடம் | 82,000.00 | 27.11.2017 |

**தலைவர்/ஆணையாளர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
**20.07.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நரியின் புத்திக்கூர்மை

காகங்கள் இரண்டு கூடொன்று கட்டி
வாழ்ந்த மரத்தினிலே – கரு
நாகமும் ஒன்று வாழ்ந்தது அந்த
மரத்தின் பொந்தினிலே – பெண்
காகம் இடுகின்ற முட்டை களைத்தனக்
ஏற்ற வேளையிலே – அந்த
நாகமோ உண்டு வந்தது அவைகள்
அற்ற வேளையிலே

சர்ப்பத்தின் இந்த சதிகாரச் செயலால்
சந்தானம் இழக்கும்
நிர்ப்பந்தம் கண்டு நிம்மதி அற்றுதம்
நேசகனாய் இருக்கும்
விற்பனன் நரியிடம் விபரத்தைக் கூறியவ்
விஷ ஜந்தை விரட்டும் – சந்
தர்ப்பமொன் றுருவாக்கித் தந்திட வேண்டிக்
கேட்டன அவையிரண்டும்

விகற்பத்தை உணர்ந்த நரியும் கவலையை
விட்டிடுங்கள் உடனே
அற்ப இவ்விடயத்திற் கவசியம் இன்றி
அவஸ்தைப் படுதல் வீணே
அற்புதமான திட்டம் ஒன்றுண்டு
சொல்லிடுவேன் நானே – அதை
சொற்பமும் பிசகாது செய்திடில் நன்மை
கிடைத்து விடும் தானே

மன்னனின் மனைவி குளித்திட தினமும்
இங்கிந்த ஓடையிலே
பொன்னெழில் பூக்க வருவது வழமை
தினமதி காலையிலே – குளித்திட
முன்னர்தன் நகைகளைக் கழற்றி வைப்பாள்
அங்கொரு மூலையிலே – அவள்
கண்ணெதிரில் முத்து மாலையில் ஒன்றைக்
கவர்ந்தவ் வேளையிலே

பறந்து நீ சென்றந்த பாம்பின் பொந்தினில்
போடுஅன் நகையினையே – அங்கு
விரைந்துனைத் துரத்தி வந்திடும் காவலர்
பாம்பின் பொந்தினையே
மாய்த்தந்த மாலையை எடுத்திட முயல்கையில்
பாம்பும் வெளியினிலே – சீறிப்
பாய்ந்தங்கு வருமதை படையினர் கொன்று
போடுவர் தரையினிலே

என்றந்த நரியும் கூறிய திட்டத்தின்
படியவைகள் செய்து
அன்றந்த விதமே பாம்பினைப் படையினர்
கொன்றனரே அடித்து
வென்றிட முடியாத பலம்மிக்க எதிரியையும்
தந்திரத்தால் தோற்கடித்து – யாரும்
வென்றிட முடியும் என்பதை உணர்வீர்
இக்கதையைப் படித்து

*டேத.எட்வின், உடுவில்.*

## இளமைப் பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. நாய் | – | குட்டி | 11. கோழி | – | குஞ்சு |
| 2. பூனை | – | குட்டி | 12. புலி | – | குட்டி |
| 3. எருமை | – | கன்று | 13. கரடி | – | குட்டி |
| 4. மாடு | – | கன்று | 14. குரங்கு | – | குட்டி / பறள் |
| 5. கீரி | – | பிள்ளை | 15. கிளி | – | பிள்ளை / குஞ்சு |
| 6. கழுகு | – | பிள்ளை | 16. யானை | – | குட்டி/கன்று/போதகம் |
| 7. குதிரை | – | குட்டி | 17. சிங்கம் | – | குருளை / குட்டி |
| 8. பாம்பு | – | குட்டி | 18. அணில் | – | குஞ்சு / பிள்ளை |
| 9. மீன் | – | குஞ்சு | 19. மான் | – | கன்று / குட்டி |
| 10. தவளை | – | பேத்தை | 20. வேம்பு | – | கன்று |



# படிப்பறிவும் பட்டறிவும்


நான்கு பேர் ஒரு குருவிடம் கற்க வேண்டிய கல்வி அனைத்தையும் முறையாகக் கற்றனர். பின்னர் தாம் கல்வி கற்ற குருவிடம் விடை பெற்றுச் சென்றனர். வழியில் கல்வியறிவில்லாத உலக அறிவுடைய அனுபவ அறிவு) ஒருவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

இந்த ஐவரும் ஒரு காட்டு வழிப் பாதையில் சென்று கொண்டிருக்கையில், ஒரு இறந்த சிங்கத்தின் எலும்புக் கூட்டைக் கண்டார்கள். குருவிடம் கல்வி பெற்ற நால்வரில் ஒருவன், மந்திர வித்தைகளில் வல்லவன். நால்வரும் மந்திர வித்தை கற்றவனின் வித்தைகளைப் பிரயோகித்து இறந்து கிடந்த சிங்கத்தின் எலும்புக் கூட்டிற்கு சதை, நரம்பு, உயிர் முதலியவற்றை உண்டாக்கி சிங்கத்தை உயிருடன் எழுப்ப திட்டம் தீட்டினர். ஆனால் படிப்பறிவில்லாதவனோ அவர்கள் திட்டத்துக்கு மறுப்புத் தெரிவித்தான். "சிங்கம் பொல்லாத மிருகம். அது மனிதரைக் கொன்று தின்று விடும். ஆதலால் சிங்கத்துக்கு உயிர் கொடுத்து எழுப்ப வேண்டாம் என அவர்களை மன்றாட்டமாகக் கேட்டான். ஆனால் அந்த நால்வரும் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். "நீ என்ன பெரிய இவனா? எங்களுக்குப் புத்தி சொல்கிறாய்? புத்தக வாசனையே அறியாததற்குறி நீ. நாங்களோ குருவிடம் எல்லா வித்தைகளும் கற்றுத் தேறியவர்கள். அப்படியே சிங்கம் எம்மைத் தாக்க வந்தாலும், அதனைத் தடுக்கவும் எம்மிடம் நிறைய வித்தைகள் இருக்கின்றன. நீ பேசாமல் நடப்பதை மட்டும் கவனி" என்று அவனை ஏளனம் பேசி அவன் பேச்சை அலட்சியம் செய்தனர்.

இப்போது சிங்கத்தின் எலும்பு உடலுக்கு, சதைகள் நரம்புகள் கொடுக்கப்பட்டு இறுதியில் உயிரும் கொடுத்தாயிற்று. சிங்கமோ எழுந்து நின்று காடே அதிரும்படி கர்ஜனை செய்தது. இந்தக் காட்சியைக் கண்ட படிக்காத மனிதன் பயந்து போய் உயிர் பிழைக்க வேண்டி பக்கத்தில் இருந்த உயரமான மரத்தில் ஏறிக் கொண்டான். ஆனால் சிங்கத்தை எழுப்பிச் சீண்டி விட்ட நால்வருக்கும் மரமேறத் தெரியாமையால் சிங்கம் அவர்களைக் கொன்று தின்று விட்டுச் சென்றது.

**படித்தால் மட்டும் போதாது**
**உலகறிவும் நிச்சயம் வேண்டும்**
**ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.**

## இரண்டு படங்களுக்கும் இடையே 12 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்




# அறிஞர்களின் அனுபவ மொழிகள்

✦ பிறரைப் பழி வாங்க எண்ணுவதற்கோ, எமக்கு இழைக்கப் பெற்ற தீங்குகளை நினைத்துப் பார்ப்பதற்கோ நேரத்தை ஒதுக்கக் கூடாது. காரணம் எமது வாழ்க்கை மிகச் சுருக்கமானது.
*-சார்லட்பிராண்டி*

✦ வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழிதேடும்; உள்ளேயடக்கிய கோபம் பழிக்கு வழிதேடும்.
*-புல்வெர்*

✦ நேர்த்தியாகச் செய்து முடிப்பதோடு உங்கள் வேலை முடிந்தது. உங்களைப் பற்றி விமர்சிப்பதை மற்றவர்களுக்கு விட்டு விடுங்கள்.
-கணித மேதை பித்தாக்ரஸ்

✦ கடவுள் நூலைத்தான் கொடுப்பார்; சேலையை மனிதன் தான் நெய்ய வேண்டும்.
*-எபிகுரூஸ்*

✦ கேலியைக் கண்டு பயப்பட வேண்டாம், உங்கள் மீது ஒருவன் உப்பை அள்ளிப்போட்டால் புண்கள் இருந்தாலன்றி உங்களுக்கு ஒரு தீங்கும் நேராது.
*-ஜூனியஸ்*

✦ தவறான விடயங்களைச் சரி என்று பலர் நினைத்துக் கொண்டிருப்பது தான் இன்று உலகில் பல தவறுகளுக்கு அடிப்படைக்காரணம்.
*-லாங்ஃபெல்லோ*

✦ பிறர் பாரத்தைத் தாங்கக் கைகொடுத்தால், எமது பாரத்தின் கனம் தானே குறைந்து விடும்
*-அப்பசி*

✦ ஒருவர் தெரியாமற் செய்த பிழைக்கு நாம் அனுதாபம் காட்ட வேண்டும் ஏளனம் செய்யக் கூடாது.
*- செஸ்டர்ஃ பீல்ட்*

# பின்வரும் உறவு முறைகளை அவதானித்து சரியான விடைகளின் கீழ் கோடிடுக

கந்தசாமி + பார்வதி
↓
சாரதா + ராஜா → சுகுனா, டில்மினி
விமலா + சரவணன் → அனிஸ்ரன்
ராஜேஸ் + சகிலா → விக்ரம், ஜோதிகா

1. சுகுனாவுக்கு விமலா என்ன உறவு?
   1. சித்தி 2. மாமி 3.பேர்த்தி
2. அனிஸ்ரனிற்கு ராஜேஸ் என்ன உறவு?
   1. மருமகன் 2. மகள் 3. பேரன்
3. ராஜாவுக்கு கந்தசாமி என்ன உறவு?
   1.மாமன் 2. தாத்தா 3. பெரியப்பா
4. சரவணனுக்கு ராஜேஸ் என்ன உறவு?
   1.சித்தப்பா 2. பெரியப்பா 3. மாமா
5. சசிகலாவுக்கு ஜோதிகா என்ன உறவு?
   1. மகள் 2. பேர்த்தி 3.சகோதரி
6. பார்வதிக்கு ராஜா என்ன உறவு?
   1. மகன் 2. மருமகன் 3. பேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | | 6 | | | 8 |
| 2 | | 1 | | | 7 | | | |
| | 7 | | | | | 4 | | |
| | 3 | | 6 | | 8 | | 5 | |
| | | | 5 | 3 | 9 | | | |
| | | 9 | | 7 | | | | |
| 3 | | | | | | | 6 | |
| | | | | | | 5 | 8 | 9 |
| | 6 | | | 5 | | 7 | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 8 | 7 | 1 | 3 | 9 | 6 | 5 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 |
| 9 | 4 | 2 | 6 | 8 | 5 | 1 | 7 | 3 |
| 1 | 8 | 3 | 2 | 4 | 7 | 6 | 5 | 9 |
| 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 4 | 8 | 2 |
| 7 | 3 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 8 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 4 | 3 | 1 | 5 |
| 4 | 1 | 5 | 8 | 3 | 9 | 2 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு. மாங்குளம் சந்தைக்கட்டடத்தின் கடைகளுக்கான திறப்புப்பண மீள்கேள்வி அறிவித்தல்.

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட மாங்குளம் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான திறப் புப்பண கேள்விகள் 2017 ஆவணி 01ஆம் திகதி தொடக்கம் கீழ்குறிப்பிடப்படும் மாதாந்த குத்தகையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 2017.07.20– 2017.07.27 அலுவலக நாட்களில் பிற்பகல் 12.00 வரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:- 2017.07.27 பிற்பகல் 12.30 மணி வரை
கேள்விகள் திறந்து பரசீலிக்கப்படும் திகதி :- 2017.07.27 பிற்பகல் 01.00மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு அரக்கு(சீல்) முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 2017.07.27 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத் தீவு என்ற முகவரிக்கு 2017.07.27 பிற்பகல் 12.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராமசேவையாளரினால் உறுதிப் படுத்தப்பட்ட தேசியஅடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணங்கள். மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி மேற் குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். (விவரம் இணைக்கப்பட்டுள்ளது.)
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறு நராகக்கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
6. கேள்வி நிபந்தனைகள் .அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விகோரிக்கைகளை நிராகரிக்கவும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையினது செயலாளருக்கு அதிகாரம் உண்டு.
7. வாடகை வருடா வருடம் சபையால் நிர்ணயிக்கப்படும் காலஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக் கப்படும்.
8. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனு மதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம் :- மகன்.மகள்)
9. சபைசெயலாளரின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்க முடியும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட காலஎல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
12. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
13. குத்தகைக்கு பெற்ற கடைக்கான மின்சார செலவுகுத்தகைக்கு பெற்றவரினாலேயே செலுத்தப்பட வேண்டும்.
14. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலைநாளுக்கு முன்னர் தாங்களாகவே செலுத்தப்பட வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
15. சபையின் செயலாளரின் இந்தஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்கவேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முற்படலாகாது.
16. கேள்வி சம்பந்தமாக மேலதிக விவரங்களை / தகவல்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

| இல | கடை இலக்கம். | மாதாந்த வாடகை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்களாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம். | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை. |
|---|---|---|---|---|---|
| 01 | U.F - 01 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 02 | U.F - 02 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 03 | U.F - 03 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 04 | U.F - 05 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 05 | S - 01 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 06 | S - 02 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |

**திரு.ந.ஜெயராஜா**
**செயலாளர்,**
**பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பேச்சில் நிதானம் தேவைப்படும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடு படுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**இடபம்**: மனதில் ஆன்மிக சிந்தனை அதி கரிக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். எதிர்பார்த்த வருமா னம் கிடைக்கும். சுபவிடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த சுபசெய்தி கிடைக்கும், தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் பெற நேரிடலாம்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி யால் வருமானம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பெண்கள் புத்தாடை நகை வாங்க இடமுண்டு.

**சிங்கம்:** குடும்பத்தினரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். மாணவர்கள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**கன்னி:** குடும்ப விடயத்தை பிறரிடம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் நிலு வைப் பணியை நிறைவேற்றுவது நல்லது. எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். அரச வகையில் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** குடும்பத்தினரின் அன்பைக் கண்டு நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். வாக னத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** நல்லவர்களின் நட்பை பெறு வீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி சிறப்பாக நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** பொறுமையால் நன்மை அடை வீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் மித மாக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர்.

**மகரம்:** எவருக்கும் தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில் வியாபாரத்தில் தடங்கல் குறுக்கிட வாய்ப்புண்டு. இலாபம் சுமாராக இருக்கும். மாணவர்கள் அக்கறை யுடன் படிப்பர்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் கருத்துவேறு பாடு உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**மீனம்:** எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மாஸ்டர் பீஸ்** @Kann twitter

விரும்பியதை அடைய சத்தம் போட்டு அழுவதில் தொடங்கி விரும்பியதை மறக்க சத்தம் இல்லாமல் மௌனமாக அழுவதில் முடிந்து விடுகிறது வாழ்க்கை...

15 340 414




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன, மத...

சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்"

இவ்வாறு குற்றப் புலனாய்வு திணைக்கள உதவி பொலிஸ் அத்தியட்சகர் திசேரா தீர்ப்பாயம் முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்தார்.

"மாணவி கொலை வழக்கின் சந்தேகநபர்களை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தடுத்து வைப்பதற்கான அனுமதியை வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுத்தது. எனினும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு நேரில் விளக்கமளிக்கப்பட்டதைத் தொடர்ந்தே அதற்கான அனுமதியை அமைச்சு வழங்கியது" என்றும் அவர் சாட்சியமளித்தார்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெற்று வருகிறது. மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாய அமர்வின் 9ஆம் நாள் சாட்சியப் பதிவுகள் நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் இடம்பெற்றது.

வழக்குத் தொடுனர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், லக்சி டீ சில்வா மற்றும் மாலினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

1ம் ,2ம் , 3ம் , மற்றும் 6ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன, எம். என். நிஷாம் ஆகியோரும் 5ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ம், 7ம் , மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரனும் முன்னிலையாகி இருந்தனர். அத்துடன் ஒன்று தொடக்கம் 9 வரையான எதிரிகள் சார்பில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தாவும் முன்னிலையாகினார்.

சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன, எட்டாவது எதிரிதரப்பிலும்தான் முன்னிலையவதாக தீர்ப்பாயத்திடம் நேற்று அறிவித்தார்.

பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் , மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது எதிரிகளும் தீர்ப்பாயத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கின் 42ஆவது சாட்சியான குற்றப் புலனாய்வு திணைக்கள உதவி பொலிஸ் அத்தியட்சகர் திசேரா சாட்சியமளித்தார்.

### மாணவி கொலையை விசாரிக்க யாழ்ப்பாணத்துக்கு விரைந்தேன்

"நான் தற்போது காணாமற்போனோர் தொடர்பிலான விசாரண்ண பிரிவில் கடமையாற்றுகிறேன். குற்றபுலனாய்வு திணைக்களத்தில் கடமையாற்றினேன். 2015ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி இரவு யாழ்ப்பணத்தில் மாணவி ஒருவர் படுகொலை செய்யப்பட்டு உள்ளார், அது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள யாழ்ப்பாணம் செல்லுமாறு எனக்கு எனது மேலதிகாரி பணித்தார்.

அதன் பிரகாரம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா, உப பொலிஸ் பரிசோதகர் ஜெயவீர, உப பொலிஸ் பரிசோதகர் ஜெயரட்ன உள்ளிட்ட குழுவினருடன் 20ஆம் திகதி காலை கொழும்பிலிருந்து புறப்பட்டு பி.ப. 2. 20 மணியளவில் யாழ்ப்பாணம் வந்தடைந்தேன்.

அன்றைய தினம் யாழ்ப்பணத்துக்கு வரும் போது வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டிருந்தன, கற்கள் பொல்லுகள் வீதிகளில் சிதறிக் காணப்பட்டன.

யாழ்ப்பணத்துக்கு வந்த நான் முதலில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் சென்று அங்கு அப்போதைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலசூரியவைச் சந்தித்தேன். அப்போது சந்தேகநபர்களில் ஒருவரான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் தப்பிச் சென்றமை தொடர்பில் அவரிடம் வினவினேன்.

அதற்கு பொறுப்பதிகாரி பாலசூரிய, 18ஆம் திகதி சுவிஸ்குமார் யாழ்ப்பான பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டார் எனவும் , அதன் பின்னர் அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்துவிட்டு அவரை விடுவித்ததாகவும் கூறினார்.

சுவிஸ்குமார் தப்பிச் சென்றமை தொடர்பில் வாக்குமூலங்களைப் பெற்றோம்.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினமே (20ஆம் திகதி) யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலசூரிய, உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களான அசோக, குணபால, அன்பழகன், தேசப்பிரிய ஆகியோரிடம் ஒன்பதாவது சந்தேகநபர் தப்பிச் சென்றமை தொடர்பில் வாக்குமூலங்களைப் பதிவு செய்தோம்.

மறுநாள் 21ஆம் திகதி ஒன்பதாவது சந்தேகநபரான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை பொலிஸார் அசாதரணமான செயற்பாடு ஊடாக நீதிமன்றில் முற்படுத்தினார்கள். சுவிஸ்குமார் அசாதாரணமான முறையில் மன்றில் முற்படுத்தப்பட்டார்.

அதாவது வடக்கு மாகாண மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் முன்னே வர, பின்னால் வாகனத் தொடரணி ஒன்று வந்தது. ஒன்பதாவது சந்தேகநபரான சுவிஸ்குமார் , சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் ஆயுதம் தாங்கிய பொலிஸ் பாதுகாப்புடன் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டார். நீதிமன்ற வளாகத்தினுள் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சிந்தக்க பண்டார ஆகியோர் சுவிஸ்குமாரை அழைத்து சென்று நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினார்கள். சாதரணமாக சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தால், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பொறுப்பதிகாரியே நீதிமன்றில் முற்படுத்துவார்.

அன்றைய தினமே 21ஆம் திகதி நாம் மாணவியின் தாயாரிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டோம். சம்பவம் தொடர்பில் அதுவரை நடைபெற்ற விசாரணைகளின் போக்கு தொடர்பிலும், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாரிடம் வாக்குமூலங்களைப் பெறவும், அது தொடர்பிலான ஆவணங்களை பெறவும் , பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவுக்கு அறிவுறுத்தினேன்.

### குற்றச்செயல்நடந்த பகுதியை ஒன்றரை மணித்தியாலம் பார்வையிட்டேன்

மறுநாள் (22ஆம் திகதி) ஊர்காவற்துறை சென்று குற்றச்செயல் இடம்பெற்ற பகுதிக்கு சென்று அவதான குறிப்புக்களை மேற்கொண்டேன். சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அந்த இடத்தைச் சூழப் பார்வையிட்டேன்.

பின்னர் 26ஆம் திகதி வவுனியா சிறைச்சாலைக்குச் சென்று அங்கே தடுத்து வைக்கப்பட்டு இருந்த சந்தேகநபர்கள் ஒன்பது பேரிடமும் தனித்தனியே வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டோம். அதன் பின்னர் சுவிஸ்குமார் தப்பிச் சென்றமை தொடர்பில் சட்டபீடாதிபதி வீ.ரி.தமிழ்மாறன் மற்றும் அவருடைய மகள் ஆகியோரிடமும் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டோம்.

### பயங்கரவாத சட்டத்தின் கீழ் சந்தேகநபர்களிடம் விசாரணை

அதன் பின்னர் சந்தேகநபர்களை பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்ய வேண்டும் என பாதுகாப்பு அமைச்சர் எனும் ரீதியில் அரச தலைவரிடம் அனுமதி பெற்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்றின் அனுமதியுடன் முதலில் 30 நாட்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் சந்தேகநபர்களை எடுத்து விசாரணைகளை முன்னெடுத்தோம். அந்த 30 நாட்கள் முடிவடைய கொழும்பு நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சந்தேகநபர்களை முற்படுத்தி மேலும் 30 நாட்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி வாங்கினோம்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் சந்தேகநபர்களை தடுத்து வைத்து 60 நாட்கள் விசாரணைகளை மேற்கொண்டதில் , அவர்களுக்கு பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்பு இல்லை எனத் தெரிய வந்தது. அதனால் அவர்களை மீண்டும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தொடர் விசாரணைக்கு உட்படுத்தினோம்.

சந்தேகநபர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஒன்பது மாதங்கள் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து இருந்தது" என்று முதன்மை விசாரணையின் போது அவர் சாட்சியமளித்தார்.

### குறுக்கு விசாரணை

அதனைத் தொடர்ந்து எதிரிகள் தரப்பு சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன சாட்சியிடம் குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டார்.

கேள்வி : சந்தேகநபர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் சான்று பொருள்கள் எதாவது கைப்பற்றப்பட்டதா?

பதில் : ஆம். 7ஆம் எதிரி வீட்டில் இருந்து 4 அலைபேசிகளைக் கைப்பற்றியிருந்தோம்.

கேள்வி : வேறு எதுவும் சான்றுப் பொருளாகன் கைப்பற்றப்படவில்லையா ?

பதில் : கைப்பற்றப்பட்டது. மடிக்கணணி ஒன்றும் 8 அலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

கேள்வி : அவை யாருடையது?

பதில் : அவற்றை பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா தலைமையிலான பொலிஸ் குழுவே கைப்பற்றியது. அது தொடர்பிலான முழு விவரமும் நிஷாந்த சில்வாவிடமே உள்ளது.

கேள்வி : கைப்பற்றப்பட்ட மடிக்கணணி மற்றும் அலைபேசிகளைத் தொழிநுட்ப விஞ்ஞான ரீதியில் ஆய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தீர்களா ?

பதில் : ஆம். அவற்றை ஆய்வுக்கு உட்படுத்த மொறட்டுவ பல்கலைகழகத்துக்கும் , சேட் எனும் நிறுவனத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றிலுள்ள ஒலி மற்றும் ஒளிப் பதிவுகளை பரிசோதிக்க, அது ஊர்காவற்துறை நீதிவானின் அனுமதியுட்னேயே அனுப்பி வைக்கப்பட்டன.

கேள்வி : அலைபேசி மூலம் எதிரிகள் சம்பவ தினத்தன்று எங்கு நின்றார்கள் என்பது தொடர்பில் கண்டறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா?

பதில் : தகவல் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. அது தொடர்பான முழுமையான தகவல்கள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவிடம் உள்ளன.

கேள்வி : சந்தேகநபர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரிக்கக் காரணம் என்ன?

பதில் : சடலம் மீட்கப்பட்ட நிலையைப் பார்த்த போது, மிக அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டது போன்று சடலம் காட்சியளித்தது. அதனால் இது இன, மத முரண்பாட்டைத் தோற்றுவிற்கும் முகமாக புரியப்பட்ட குற்றச்செயலாக இருக்கலாம் என மிக உறுதியான சந்தேகம் எழுந்தது. அதனாலேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை முன்னெடுத்தோம்.

கேள்வி : மாணவிக்கும் , சந்தேகநபர்களுக்கும் இடையே இன, மத வேறுபாடுகள் காணப்பட்டனவா?

பதில் : இல்லை. சடலம் கிடந்த நிலையைப் பார்த்த போது எமக்கு இன, மத முரண்பாட்டை தோற்றுவிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயலாக தோன்றியது.

கேள்வி : சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க தடை எதுவும் ஏற்பட்டதா?

பதில் : தடைகள் எதுவும் ஏற்படவில்லை. ஆனாலும் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைகளை மேற்கொண்டோம்.

கேள்வி : உங்கள் விசாரணைகளில் சந்தேகநபர்கள் கையூட்டுக் கொடுக்க முற்பட்டமை தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தனவா ?

பதில் : வேறொரு வழக்கில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இப்ரான் எனும் சந்தேகநபரிடம் பெறபட்ட வாக்குமூலத்தில் "ஒன்பதாவது சந்தேகநபரான மகாலிங்கம் சசிக்குமார் என்பவர், தானும், தனது சகோதரான நான்காவது சந்தேகநபரான மகாலிங்கம் சசிதரனும் அரச தரப்பு சாட்சியாக மாற விரும்புவதாகவும் அதற்கு பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா உதவி புரிந்தால் அவருக்கு 20 மில்லியன் ரூபா கொடுக்கத் தான் தயாராக உள்ளதாகவும் சுவிஸ் குமார் தன்னிடம் தெரிவித்தார்" என்று கூறியிருந்தார்.

கேள்வி : அது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டதா ?

பதில் : இல்லை.

கேள்வி : சந்தேகநபர்களின் வாக்கு மூலங்களை நீர் வாசித்தீரா ?

பதில் : இல்லை. நான் மேற்பார்வை அலுவலகர் மாத்திரமே. இந்த வழக்கு விசாரணைகள் நடைபெற்று கொண்டிருந்த அதே காலப் பகுதியில் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கு, ஊடகவியலாளர் பிரகீத் கடத்தப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு, ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு, அமைச்சர் ரவிகருணா நாயக்கவின் ஊர்வலம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு, அவன்கார்ட் விசாரணை என பல விசாரணைகளின் மேற்பார்வை அதிகாரியாக செயற்பட்டேன். அதனால் இந்தச் சந்தேகநபர்களின் வாக்கு மூலங்களை நான் வாசிக்கவில்லை. இந்த விசாரணைகளை எனது ஆலோசனை அறிவுத்தல்களின் பிரகாரம் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவே மேற்கொண்டார் என குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியமளித்தார்.

அதனைத் தொடர்ந்து , 1ஆம் , 2ஆம் , 3ஆம் , 6ஆம் ,மற்றும் 8ஆம் எதிரிகள் தரப்பில் நான் சொல்கிறேன், இலங்கையில் மிக பயங்கரமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்வதாகக் கூறிவிட்டு நீர் இந்த வழக்கில் இருந்து ஒதுங்கி கொண்டு விட்டீர் என, எதிரிகள் தரப்பு சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன சாட்சியிடம் தெரிவித்தார்.

"இதனை நான் முற்றாக மறுக்கிறேன். நான் ஏன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்தோம் என ஏற்கனவே சாட்சியத்தில் குறிப்பிட்டு விட்டேன்" என சாட்சி பதிலளித்தார்.

அதனைத் தொடர்ந்து எதிரிகள் தரப்பு சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் குறுக்கு விசாரணையின் போது, தலைமை விசாரணை அதிகாரி சந்தேகநபர்களின் வாக்குமூலங்களை வாசிக்கவில்லை எனில் நீர் உமது கடமையைச் சரியாகச் செய்யவில்லை என எதிரிகள் தரப்பில் கூறுகிறேன் என்றார்.

"இதனை நான் முற்றாக மறுக்கிறேன். எனது கடமை குறித்து எனக்குத் தெரியும். அது தொடர்பில் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறேன். எந்தத் தடை வந்தாலும் நான் எனது கடமையைச் சரியாகச் செய்வேன்" என சாட்சி பதிலளித்தார்.

### சுவிஸ்குமாரின் அலைபேசி செயழிழப்பு

குற்றச் செயல் இடம்பெற்ற தினத்தன்று சந்தேகநபர் சுவிஸ்குமார் எங்கு இருந்தார் என்று விசாரணை செய்தீரா? என்று எதிரிகள் தரப்புச்சட்டத்தரணி சாட்சியிடம் கேள்வி எழுப்பினார்.

"அவர் எங்கு இருந்தார் என்று கூறமுடியவில்லை. குற்றச் செயல் இடம்பெற்ற காலப் பகுதியில் சுவிஸ்குமாரின் அலைபேசி செயலிழந்து காணப்பட்டுள்ளது" என்று சாட்சி பதிலளித்தார்.

அதனை தொடர்ந்து , குறித்த சாட்சியத்தின் சாட்சி பதிவு முடிவுறுத்தப்பட்டு அவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டது.

"அதேவேளை நேற்றைய சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட 35ஆவது சாட்சியமான குற்றபுலனாய்வு திணைக்கள பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா இந்த வழக்கின் தலைமை பொலிஸ் விசாரணை அதிகாரியாவார். அவருடைய சாட்சியத்துக்கு நீண்ட நேரம் எடுக்கும் எனும் காரணத்தால் அவரை எதிர்வரும் திங்கட்கிழமை சாட்சிமளிக்க அனுமதிக்க வழங்க வேண்டும்.

அத்துடன் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.மொகமெட் றியாழை திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு தீர்ப்பாயத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது. அதனை அன்றைய தினம்(திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு நீதிவானை தீர்ப்பாயத்தில் முன்னிலையாகுமாறு மீள அழைப்பாணை விடுக்க வேண்டும். 24ஆவது சாட்சியத்துக்கும் அழைப்பாணை மீளவிடுக்கவேண்டும்" என்று பிரதிமன்றாடியார் அதிபதி தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்தார். அதனை தீர்ப்பாயம் ஏற்றுக்கொண்டது. அதனை தொடர்ந்து வழக்கு விசாரணைகள் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அதுவரையில் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

(வ-37,12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து இளைஞர் அணி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 21
கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக் குத் தகுதி.

தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. 25:22, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முத லிரு செற்களையும் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி. (ம-23)




# விநாயகர், சிந்து அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 21
கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் தாச்சித் தொடரில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி, உடுவில் ஆலடி சிந்து விளையாட் டுக் கழக 'பி' அணி ஆகியன வெற்றிபெற் றன.

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சாந்தை விநாயகர் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி தூர்க்கா விளை யாட்டுக் கழக அணி மோதியது. 08:03 என்ற புள்ளிகளின் அடிப்படையில் விநாய கர் அணி வெற்றிபெற் றது.

இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து இருபாலை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிந்து அணி வெற்றிபெற் றது. (ம-23)

# அரையிறுதிக்கு கலைமதி அணி

யாழ்ப்பாணம், ஜூலை 21
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 52ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொட ரில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் திடலில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின் றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'ஏ' பிரிவு அணிக ளுக்கு இடையிலான அரையிறுதி ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதி யது. முதலிரு செற்களையும் முறையே 29:27, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி அணி. மூன்றாவது செற்றை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 25:13 என்ற புள் ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் தோல்வி யைத் தவிர்த்தது. நான்காவது செற் 25:15 என்ற புள் ளிகளின் அடிப்படையில் கலைமதியின் வசமாக முடி வில் அந்த அணி 25:15 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# டயமன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 21
கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. இந்த இறு தியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊறெழு றோயல் விளை யாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத் தில் டயமன்ஸ் அணியின் பிறேம் குமார் தனது அணியின் முதலா வது கோலைப் பதிவுசெய்தார். 24ஆவது நிமிடத்தில் றோயல் அணியின் நிதர்சன் கோலொன் றைப்பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தன.

இரண்டாம் பாதியின் 43ஆவது நிமிடத்தில் பிறேம்குமார் டயமன் ஸின் மற்றொரு கோலைப் பதிவு செய்தார். 67ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய் தது றோயல் அணி.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவுசெய்தமை யால் சமநிலைத் தவிர்ப்பு உதை களில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடி வில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென் றது டயமன்ஸ் அணி.

ஆட்டநாயகனாக றோயலின் எடி சனும் தொடராட்ட நாயகனாக டய மன்ஸ் அணியின் நட்சத்திர வீரர் பிறேம்குமாரும் தெரிவுசெய்யப் பட்டனர். மூன்றாமிடத்தை கொற் றாவத்தை றேஞ்சர்ஸ் விளை யாட்டுக் கழகம் பெற்றது. (ம-23-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 21
**தாச்சித் தொடர்**
கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொட ரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் சங்கானை இளங்கதிர் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட் டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி சரஸ்வதி விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட் டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**
யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவினருக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொட ரின் அரையிறுதியாட்ட மொன்று சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி மைதா னத்தில் இன்று இடம்பெறவுள் ளது. இந்த ஆட்டத்தில் யாழ்ப்பா ணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)



மாகாண மட்ட தடகளத் தொடரில் மூன்று தங்கங்க ளைப் பெற்று சிறந்த அடைவை நிலைநாட்டியவரான உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாணவன் செந் தீஸ் பாடசாலைச் சமூகத்தால் நேற்றுக் கௌரவிக்கப்பட் டார். (ம-108)





கிழக்கு பல்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த வாரம் இடம் பெற்ற அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான வீதி ஓட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது. (ம-23)

# ஏஞ்சல் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய இளநிலைப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யின் கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 32:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி. அந்த அணி தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைப்படுத்தி 59:58 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## 15 ஆண்டுகளுக்கு மன்செஸ்டரின் முகாமையாளராக ஜொஸ் மொரின்கோ

மன்செஸ்டர்யுனைற்ரெட் அணியின் முகாமையாளராக, 15 ஆண்டுகளுக்கு இருக்க விருப்பம் தெரிவித்த ஜொஸ் மொரின்கோ இதற்கு முன்னர் சேர் அலெக்ஸ் பேர்குசனின் காலத்தில் காணப்பட்ட உறுதியை மீண்டும் கொண்டுவர திட்டமிட்டுள்ளமையையும் வெளிப்படுத்தினார்.

பேர்குசனின் காலத்தின் பின்னர், மன்செஸ்டர்யுனைற்ரெட் அணியின் முகாமையாளர் பதவிகள், அடிக்கடி மாற்றமடைந்து வருகின்றன. இந்த நிலையில் தனது நீண்டகாலத் திட்டத்தை, மொரின்கோ வெளிப்படுத்தியுள்ளார்.

முகாமையாளர்களின் பணிகள் தொடர்பாகக் காணப்படும் அழுத்தம் காரணமாக, 15 ஆண்டுகளுக்கு இருப்பது கடினமென்பதை ஏற்றுக் கொண்ட அவர், எனினும் அணி வெற்றிபெறும் போது, அது சாத்தியமாகுமெனவும் தெரிவித்தார். (ம)

### உலகக்கிண்ணத்தில் சூதாட்ட விவகாரம்

# எழுத்துமூலம் தந்தால் விசாரணை கட்டாயம்

### ரணதுங்கவுக்கு தயாசிறி பதில்




2011ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில் இலங்கை அணி தோற்றமைக்குப் பின்னால் ஆட்ட நிர்ணயச் சூதாட்டம் இருக்கலாம் என்று இலங்கை அணியின் முன்னாள் வீரர் ரணதுங்க தெரிவித்திருந்த நிலையில் இந்த விடயத்தை எழுத்துமூலம் தந்தால் நிச்சயம் விசாரணை நடத்தலாம் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் வைத்தே தயாசிறி இவ்வாறு தெரிவித்தார்.

'இது இப்போது பிரச்சினையாகியிருக்கிறது. அர்ஜுன ரணதுங்க, இந்த விடயத்தை அப்போதே சொல்லியிருந்தால், பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். ஆனால் காலம் தாழ்த்தியே' இதனை முன்வைத்திருக்கிறார். எவ்வாறெனினும், எழுத்துமூலமாக அறிவிக்கும் பட்சத்தில், நாம் விசாரணை நடத்தத் தயாராக இருக்கிறோம்" என தயாசிறி மேலும் தெரிவித்தார்.

கிரிக்கெட் சபைத் தலைமைப் பதவியை இரண்டு ஆண்டுகளுக்குத்தரும் பட்சத்தில், அடுத்த உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளக் கூடிய அணியைத் தயார் செய்வேன் என்று அர்ஜுன ரணதுங்க கூறியுள்ளார். அவருக்கான வாய்ப்புக் குறித்து கலந்துரையாடவில்லையா? என்ற செய்தியாளரின் கேள்விக்கு பதில் வழங்கிய தயாசிறி, "அவர் சிறந்த வீரர் என்பதை நான் அறிவேன். எனினும், கிரிக்கெட் சபைத் தேர்தலில் அவர் தோல்வியடைந்ததால் தெரிவாகவில்லை. அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவாராயின், அது குறித்துப் பார்க்கலாம்" என்று குறிப்பிட்டார்.

(ம)



## செரபோவா கடும் பயிற்சி

ரஷ்ய பூப்பந்தாட்ட வீராங்கனையான மரிய செரபோவா காயத்தில் இருந்து விடுபட்டு தற்போது பயிற்சிக்குத் திரும்பினார்.

ஊக்கமருந்து பாவனையின் காரணமாக கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்று இந்த வருடம் மீண்டும் களந்திரும்பியிருந்தார் செரபோவா. எனினும் காயம் காரணமாக அவர் மீண்டும் பன்னாட்டு அரங்கில் இருந்து விலகினார். இந்த நிலையில் காயம் குணமடைந்துள்ளதை உறுதிப்படுத்திய அவர் தனக்குச் சொந்தமான ரென்னிஸ் மைதானத்தில் கடும் பயிற்சியில் ஈடுபடும் ஒளிப்படத்தையும் வெளியிட்டார்.

(ம)

## அணிக்குத் திரும்பினார் சேர்ஜியோ ராமோஸ்



புதிய பருவகாலத்தை ஆரம்பிப்பதற்காக ரியல் மட்ரிட் அணியின் தலைவரான சேர்ஜியோ ராமோஸ் அணிக்குத் திரும்பியுள்ளார்.

கடந்த பருவகாலத்தில் ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடர், ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் என்று இரண்டு தொடர்களில் ரியல் மட்ரிட் சம்பியனாகியிருந்தது. சம்பியன்ஸ் லீக் நிறைவடைந்ததுடன் பருவகாலம் நிறைவுக்கு வந்தது. இந்த நிலையில் அடுத்த பருவகாலத் தொடர்கள் (2017-2018) விரைவில் ஆரம்பமாகவுள்ளன. இந்தத் தொடர்களிலும் ரியல் மட்ரிட் அணியின் தலைவராக ராமோஸ் தொடர்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் நேற்றுமுன்தினம் அணியுடன் இணைந்தார். (ம)

# டிக்வெல்ல ஆட்டமிழக்கப்பட்டிருக்க வேண்டியவரே சிம்பாப்வேயின் தலைவர் கிரேம் கிரீமர் கருத்துரைப்பு





இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான டெஸ்ட் ஆட்டத்தில் டிக்வெல்லவுக்கு மூன்றாம் நடுவர்கள் ஆட்டமிழப்பு வாய்ப்பு ஒன்றை மறுத்தமைக்கு தனது ஏமாற்றத்தை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார் சிம்பாப்வேயின் அணித் தலைவர் கிரீமர்.

இந்த ஆட்டத்தில் 388 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 237 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்த போது, நிரோசன் டிக்வெல்ல மீது, ஸ்டம்பிங் வாய்ப்பொன்று 3ஆவது நடுவரிடம் கோரப்பட்டது. மீள் ஒளிபரப்புக் காட்சிகளின் போது, டிக்வெல்ல ஆட்டமிழந்துவிட்டார் என்றே கருதப்பட்ட போதிலும், சர்ச்சைக்குரிய விதத்தில் அது ஆட்டமிழப்புக் கிடையாது என, மூன்றாவது நடுவர் அறிவித்தார். அப்போது 37 ஓட்டங்களுடன் இருந்த டிக்வெல்ல, இறுதியாக 81 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை அணியும் வெற்றிபெற்றது.

இந்த நிலையில், அது தொடர்பாகக் சிம்பாப்வேயில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் வைத்து கிரீமர் கருத்துத் தெரிவித்துள்ளார். "நான் பார்த்தவரையில், அவர் ஆட்டமிழக்க வேண்டியவர் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இருந்திருக்கவில்லை. உங்களிடம் தொழில்நுட்பம் இருந்தால், அது தெளிவாகக் காண்பிக்கும். எங்களுக்கு இவ்வாறானவை, அதிகமாக நடக்கின்றன என நாம் உணர்கிறோம். இவ்வாறான விடயங்கள், எங்களுக்கு எதிராக நடக்கும் போது கடினமானது. குறிப்பாக இறுதி நாளில் டெஸ்ட் ஆட்டமொன்றை வெல்வதற்கு முயலும் போது மிகவும் கடினமாக இருக்கும். டெஸ்ட் ஆட்டத்துக்கான கிண்ணத்தை நாம் இழந்தாலும் அணி வீரர்கள் விளையாடிய விதம் தொடர்பாகவும் அவர்கள் போராடிய விதம் தொடர்பாகவும், நான் பெருமையடைகிறேன்" என கிரீமர் மேலும் தெரிவித்தார்.

இதே கருத்தை ஆட்டம் முடிந்த பின்னர் இலங்கையில் வைத்தும் கிரீமர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொன்டேயின் ஒப்பந்தம் நீடிப்பு




செல்சி அணியின் முகாமையாளர் அந்தோனியோ கொன்டே, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அந்த அணியுடன் ஒப்பந்தமாகியுள்ளார்.

செல்சி - கொன்டே இடையிலான ஒப்பந் தம் இந்த வருடத்துடன் முடிவுக்கு வருகிறது. இரு தரப்புக்கும் இடையில் புதிய ஒப்பந்தம் கைச்சாத்தாகுமா அல்லது ஒப்பந்தம் முடித்துக்கொள்ளப்படுமா என்பது தொடர்பில் எதிர்பார்ப்பு ஏற்பட்டி ருந்த நிலையில் 2019 ஆம் ஆண்டுவரை ஒப்பந்தம் கைச்சாத்தானது.

(ம)

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
விக்ரம் வேதா
மஜெஸ்டிக் பிளாட்டினம்
10.30 / 1.30 / 4.30 / 7.30 / 9.30
சில்வர்
10.30 / 1.30 / 4.30 / 7.30
3D
வனமகன்
VALERIAN
10.30 AM / 1.30 PM
4.30 PM / 7.30 PM
விசாரணை ☎ 021-2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி. ஞாயிறு
9.00→4.00 மணிவரை
வடமாகாண ஆசிரியர் தெரிவு
பிரிவு I
சனி 11.00 → 3.00
பிரிவு II
ஞாயிறு 11.00 → 3.00
சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான வகுப்புகளும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)



# ஆஸ்திரேலிய அணி ஆஷஸை வெல்லும்

## ஜோன்சன் நம்பிக்கை

ஆஸ்திரேலிய அணி இந்த வருடம் நடைபெறவுள்ள ஆஷஸ் தொடரைக் கைப்பற்றும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் வீரர் மிச்செல் ஜோன்சன்.

டெஸ்ட் கிரிக்கெட்டின் ஆரம்ப கால ஜாம்பவான்களான இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் ஆஷஸ் என்று அழைக்கப்படுகிறது. பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தொடர்களில் ஆஷஸ் தொடரே முதன்மையானதாகப் பார்க்கப்படுகிறது. 5 ஆட்டங்களைக் கொண்டதாக இந்தத் தொடர் நடத்தப்படும். நடப்பு வருடத்துக்கான தொடர் ஆஸ்திரேலியாவில் இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் நடத்தப்படுகிறது. இந்தத் தொடர் தொடர்பாக தற்போது எதிர்பார்ப்புக்கள் அதிகளவில் எழுந்துள்ள நிலையில் தொடரை ஆஸ்திரேலியாவே கைப்பற்றும் என்று தெரிவித்தார் மிச்செல் ஜோன்சன். ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே தனது கருத்துக்களை ஜோன்சன் பதிவுசெய்தார்.

"ஆஷஸ் தொடரில் பங்கேற்பதாக ஆஸ்திரேலியா வரும் இங்கிலாந்து அணி சில பிரச்சினைகளை கொண்டுள்ளது. ஆஸ்திரேலியாவிற்கு பிரகாசமான வாய்ப்புள்ளது. தற்போதைய நிலையில் அவர்கள் (இங்கிலாந்து) சீரான அணியைப் பெற்றிருக்கவில்லை. அவர் கள் அணியை சற்று மாற்றியுள்ளனர். 11 பேர் கொண்ட சரியான அணியை உருவாக்க தற்போதுதான் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆஷஸ் தொடர் விரைவில் தொடங்க இருக்கிறது. இந்த சமயத்தில் அணியை மாற்ற முயற்சி செய்தால் அது கடினமானதாகிவிடும். ஏனென்றால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். மூன்றாவது இடத்தில் ஒரு வீரர் களம் இறக்கப்படும்போது, அவர் அந்த அணியின் தலைசிறந்த வீரராகத் திகழ்வார் என்பதுதான் பொருள். ஆனால் இங்கிலாந்து அணியின் மூன்றாவது வீரராக களம் இறங்கும் பலன்ஸ் சிறந்த வீரர் என்று நான் நினைக்கவில்லை" என ஜோன்சன் மேலும் தெரிவித்தார்.

(ம)


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1382
சீட்டிழுப்பு திகதி 2017.07.20
22 27 31 54 O
01 18 43 55
ரூ. 15,515,448/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 678
சீட்டிழுப்பு திகதி 20.07.2017
பச்சை
K 13 15 46 57
சுப்பர் ஜக்பொட்
ரூ. 52, 966, 284/=
வெல்லப்படவில்லை
30 33 58 64
நீல நிற டிக்கட்டுகள் 22.07.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
சௌபாக்ய வாசனாவ
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 058
சீட்டிழுப்பு திகதி 20.07.2017
நீலம்
வெற்றி இலக்கங்கள்
சுப்பர் இலக்கம்
அதிர்ஷ்ட மாதம்
16 20 26 52 02 ஜூன்
ரூ. 14, 195, 270/=
ரூ. 2, 263, 067/=
ரூ. 1, 580, 912/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
02 05 39 62
22.07.2017 ஆம் திகதி சனிக்கிழமை றோஸ் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## இலங்கையை எதிர்கொள்வது மிகமிகக் கடினமான ஒன்றே

### கோக்லி தெரிவிப்பு



இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்வதென்பது மிகவும் கடினமான ஒன்றே இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று டெஸ்ட் ஆட்டங்கள், 5 ஒருநாள் ஆட்டங்கள், ஓர் ரி-20 ஆட்டம் என்பன நடைபெறவுள்ளன. முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இது எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் இலங்கை வந்தது. இலங்கைச் சுற்றுப்பயணம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு குறிப்பிட்டார்.

"இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்த்து விளையாடுவது சுலபமான ஒன்றல்ல. இந்த விடயத்தில் நாங்கள் மிகுந்த எச்சரிக்கையாக உள்ளோம்" என கோக்லி மேலும் தெரிவித்தார்.

(ம)



குத்துச்சண்டை உலகின் ஜாம்பவான்களாக உருவெடுத்துள்ள அமெரிக்காவின் மெவதரும், அயர்லாந்தின் மக்கிரேகரும் விரைவில் மோதவுள்ள நிலையில், இவர்கள் இருவருக்கும் இடையிலான இரண்டாவது செய்தியாளர் சந்திப்பு லண்டனில் அண்மையில் நடைபெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.